REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 டிசம்பர் 18 திங்கட்கிழமை

வரு. 91 இல. 299 | Monday 18, December, 2023 | 16பக்கங்கள் | 50/-

## சிவனொளிபாத மலைக்கு மின் விநியோக திட்டம்

### மின் மாற்றி அனுப்ப ஹெலிக்கொப்டர் பயன்பாடு

சிவனொளிபாத மலைக்கு கடந்த மூன்று நாட்களாக, ஹெலிக்கொப்டர் மூலம் மின் மாற்றிகள் கொண்டு செல்லும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்மலானை விமான படையின் ஹெலிக்கொப்டர் மூலம் இந்த பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிவனொளிபாத மலைக்கு சுத்தமான 06

### சஜித்தின் உதாசும்மான திட்டம்:

# கட்டி முடிக்கப்படாதுள்ள 39,815 வீடுகளை பூர்த்தி செய்ய பணிப்பு

### பணிகளை விரைந்து முடிக்க NHDA அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தல்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது கட்டப்பட்டு, பாதியளவில் நிறுத்தப்பட்ட 39,815 வீடுகளின் பணிகளை, துரிதப்படுத்தி முழுமைப்படுத்துமாறு வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படவுள்ள சோலார் பேனல் வீடமைப்புத் திட்டம் மற்றும் கிராம வேலைத்திட்டத்துக்கான மின் உற்பத்தி நிலையத்தின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் இவ்வீடுகளின் நிர்மாணப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச, வீடமைப்பு அமைச்சராக இருந்த 2015-2019 ஆகிய நான்கு வருடங்களில் நாடளாவிய ரீதியில் 2,158 கிராமங்களில் 39,815 வீடுகளை கட்டும் பணிகள் ஆரம்பமாகின. எனினும், 06

**சஜித் வழங்கிய வீட்டுக் கடன்கள் மற்றும் தகுதியற்றவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பிலும் விசாரணைகள்**

## IMF உடனான வேலைத்திட்டத்தில் அதிக பொறுப்புடன் செயற்படுங்கள்

### அரசியல் தலைவர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை



சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தில் அனைத்து அரசியல் தலைவர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டத்தை நிராகரிக்கும் அனைவரும், நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து 06

### ஐ.நா. வதிவிட பிரதிநிதி–கிழக்கு ஆளுநர் சந்திப்பு



ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ரே தலைமையிலான உயர்மட்ட குழுவினர், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.

## கொலன்னாவை சுற்றிவளைப்பில் போதைப்பொருட்கள்: 45 பேர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொலன்னாவை பிரதேசத்தில் நேற்று (17) அதிகாலை போதைப் பொருட்களுடன் 42 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது பல்வேறு வகை போதைப் பொருட்களுடன் 42 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

போதைப் பொருள் தொடர்பில் கிடைத்த தகவல்களுக்கு அமைய பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரும் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ட்ரோனர் மற்றும் பொலிஸ் நாய்களின் பங்கேற்புடன் 156 பொலிஸார், 154 இராணுவத்தினர் மற்றும் 16 பொலிஸ் விஷேட 06

## தனிநாட்டு கோரிக்கை என்பது காலத்தை கடத்தும் வீண் செயல்

### புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சில, சுயநலத்தில்




இலங்கையின் மனித உரிமைகள் உள்ளிட்ட இதர விவகாரங்கள் தொடர்பில் பிரிட்டனின் வெஸ்மினிஸ்டர் மண்டபத்தில் நடைபெற்ற விவாதம், வாக்கு வங்கி அரசியலுக்கானதென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை உள்ளிட்ட விடயங்களை ஐக்கிய இலங்கைக்குள் தீர்த்துக்கொள்வதற்கு அனைத்து சமூகங்களும் இணங்கியுள்ள இச்சந்தர்ப்பத்தில், தனி நாட்டு கோரிக்கை அல்லது தாயக 06

## தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் தமிழரசுக் கட்சியின் தலைமையே

### சுமந்திரன், சிறீதரன், யோகேஸ்வரன் போட்டி



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவராக தெரிவு செய்யப்படுபவரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் நியமிக்கப்படுவாரென அரசியல் வட்டாரங்கள் 06

## "வற்" வரி அமுலாக முன்னர் விலைகளை அதிகரித்தோர்

### வர்த்தகர்களை கைது செய்ய ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வற் வரி நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, விலைகளை அதிகரித்து பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு பெருமளவில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருவதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது. 06

## கடன்களை மீளச் செலுத்தும் ஆற்றலில் இலங்கை முன்னேற்றம்

### IMF இன் உத்தரவாதத்தில் தகவல்

சர்வதேச நாணய நிதியம் வழங்கியிருக்கும் உத்தரவாதத்தின் படி, கடனை மீள்செலுத்தும் ஆற்றலில் இலங்கை முன்னேற்றமடைந்து வருவதாக கூறப்பட்டிருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயற்றிட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் மேலும் கூறுகையில்,''நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றுவதன் காரணமாக ஜப்பான், சீனா, இந்தியா மற்றும் பாரிஸ் 06



## பாதாள கோஷ்டி, போதைபொருள் ஒழிப்பை நிறுத்தப் போவதில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எத்தகைய பதவியிலுள்ளவர்களுக்காகவோ அல்லது அழுத்தங்களுக்கு அடிபணிந்தோ பாதாள உலகக் குழு மற்றும் போதைப்பொருள் கட்டுப்படுத்தல் 06

## பாடசாலைகளுக்கு 22 முதல் விடுமுறை

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




அரசாங்க மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளுக்கு எதிர்வரும் 22 முதல் வருட இறுதி விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க எதிர்வரும் டிசம்பர் 22 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி இரண்டாம் 06

### நாட்டில் பெய்துவரும் தொடர் மழை

## சிறுவருக்கு ஹெபடைடிஸ் பாதிப்புகள் அதிகரிக்கலாம்



சிறுவர்களுக்கு சளி, காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைகளுக்கு செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் தொடர் மழையால் சிறுவர்களுக்கு ஹெபடைடிஸ் (வைரஸ்) பாதிப்பு அதிகரித்துள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே 06

### முல்லைத்தீவில் கடும் வெள்ளம் வீடுகளில் தத்தளித்தோர் மீட்பு

# 880 குடும்பங்களை சேர்ந்த 2,687 பேர் பாதிப்பு

### 73 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்யும் கனமழையால்,மாவட்டத்திலுள்ள குளங்கள் நிறைந்து, வான்கதவுகள் வழிகின்றன. இதனால், பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் நேற்று மதியம் திடீரென வந்த வெள்ளத்தால், ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் புளியங்குளம் பண்டாரவன்னி உள்ளிட்ட கிராம மக்களின் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நீரில் மூழ்கியோரை பாதுகாப்பாக மீட்பதில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள் இராணுவத்தினர் இணைந்து செயற்பட்டனர். இவ்வாறு மீட்கப்பட்டோர், பாதுகாப்பான இடங்களில் 06

## 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மலையகம் மற்றும் தென்பகுதிகளில் 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பதுளை, மாத்தளை, நுவரெலியா, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, குருநாகல், காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் களுத்துறை ஆகிய 10 மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## 02 கோடி 50 இலட்சம் முட்டைகள் சந்தையில்

### ஒன்றரைக் கோடி முட்டைகள் நேற்றும் இறக்குமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பண்டிகைக் காலங்களில் தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் நுகர்வோருக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வகையில், இந்தியாவிலிருந்து நேற்று ஒரு கோடியே 50 இலட்சம் முட்டைகளை இறக்குமதி செய்துள்ளதாக அரச வர்த்தக பொது கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இறக்குமதி செய்யப்பட்டு தற்போது நாட்டில் கையிருப்பிலுள்ள ஒரு கோடி முட்டைகளை இன்று முதல் விற்பனை செய்வதற்கு ஏதுவாக நேற்று சதொச 06

# பாரிய கண்டி அபிவிருத்தித் திட்டத்தின் இறுதி வரைவு ஜனாதிபதியிடம் கையளிப்பு

## கண்டி அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவது தொடர்பில் ஜெய்கா நிறுவனத்துடன் கலந்துரையாடப்படும் – ஜனாதிபதி

பாரிய கண்டி அபிவிருத்தித் திட்டத்தின் இறுதி வரைவு நேற்று (17) முற்பகல் கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

பாரிய கண்டி அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவது தொடர்பில் ஜெய்காவுடன் கலந்துரையாடவுள்ளதாக இது தொடபில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

2023 பெப்ரவரி மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி நகரை நன்கு திட்டமிடப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட நகரமாக மாற்றுவதற்கான பிரேரணை அமைச்சரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.



பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க தலைமையில் கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகள் மற்றும் நகர திட்டமிடல் துறையில் நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதற்கிணங்க, கட்டுகஸ்தொட்டை, கண்டி, குண்டசாலை ஆகிய பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தி பாரிய கண்டி அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

மத்திய மாகாண ஆளுநர் உட்பட கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களிடம் இந்த அபிவிருத்தித் திட்டம் முன்வைக்கப்பட்டு, மேலதிக கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்ற பின்னர், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு நேற்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அபிவிருத்தித் திட்டம் குறித்து விரிவாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், கண்டி நகரின் வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, மக்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

# நகர்வலம்

## ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப பாடசாலையில் இன்று தசம விழா

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் பத்து வருட பூர்த்தியை முன்னிட்டு ஒழுங்கு செய்துள்ள தசம விழா நிகழ்வுகள் இன்று (18) பாடசாலையின் அதிபர் எம். இஸட். எம். இர்பான் தலைமையில் ஹம்பாந்தோட்டை சிங்கப்பூர் நற்புறவு மாநாட்டு மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஹம்பாந்தோட்டை வலயக்கல்விப் பணிப்பாளர் ஒ. பீ. ஜீ. நிலானி, தென் மாகாண கல்வித்திணைக்களத்தின் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஏ. எம். மஸாயிர், ஹம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்தின் ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் எச்.கே. தினூஸிகா, ஹம்பாந்தோட்டை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிரார்தனா ஜயசூரிய, பாடசாலை அபிவிருத்தி நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அதிகாரிகள், புத்திஜீவிகள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்துசிறப்பிக்கவுள்ளனர். இதில் சாதனையாளர் கௌரவிப்பு, கல்விஅதிகாரிகள் கௌரவிப்பு, ஆசிரியர் கௌரவிப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கௌரவிப்பு, தரம் ஐந்து மாணவர்களுக்கான பாராட்டு, பிரியாவிடை நிகழ்வு உட்பட மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## மாணவி சஜீ ஹா முதலாமிடம்



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில், திஹாரிய தாருஸ் ஸலாம் ஆரம்ப பாடசாலை மாணவி எம். ஆர். சஜீஹா 186 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் தமிழ் மொழி மூலம் இவர் முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர், நாமுலுவ பஸ்யால பாபுஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் ரீ.எம். ரிம்ஸான் திஹாரிய, அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் ஆசிரியை என். எச். சுரையா ஆகியோரின் புதல்வியாவார்.

## ஹொக்கி மைதான புனரமைப்புக்கு சம்மேளனம் ரூ 235 மில்.டொலர் நிதியுதவி

**(மாத்தளை சுழற்சி நிருபர் )**



கொழும்பு மற்றும் மாத்தளை மாவட்டங்களில் காணப்படும் இரண்டு பிரதான சர்வதேச ஹொக்கி விளையாட்டு மைதானங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு ரூ. 235 இலட்சம் டொலர் நிதியுதவியாக கிடைக்கப் பெறவுள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஆசிய ஹொக்கி சம்மேளனம் மலேஷியாவில் கைச்சாத்திட்டுள்ளதாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

மலேஷியா கோலாலம்பூரில் நேற்று நடைபெற்ற ஆசியா ஹொக்கி சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் சர்வதேச ஹொக்கி சம்மேளனத்தின் தலைவர் த. இக்ராம், ஆசியா ஹொக்கி சம்மேளனத்தின் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் சமல் பிரனாந்து ,மாத்தளை ஹொக்கி சம்மேளனத்தின் பணிப்பாளர் தயான் திசாநாயக்க, உபதலைவர் மொரோடி ஓமர்டீன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கமைய கொழும்பு ரீட் மாவத்தையில் உள்ள ஹொக்கி மைதானமும் மற்றும் மாத்தளையில் காணப்படும் நந்திமித்ர சர்வதேச ஹொக்கி மைதானமுமே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதன் அபிவிருத்தி பணிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

குவைத் நிதியொதுக்கீட்டில்

## ஹொரவப்பொத்தான கிராமத்திற்கு சுத்தமான குடிநீர் வசதி வழங்கல்



நாட்டின் மனிதாபிமான உதவிகளில் ஒன்றான வறிய குடும்பங்களுக்கு இலவச குடிநீரை பெற்றுக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் ஹொரவப்பொத்தான, குபுகொள்ளாவ கிராம மக்கள் வாழும் பிரதேசத்தில் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு நீரை மக்கள் பாவனைக்காக வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கை முன்னணி இஸ்லாமிய நிறுவனமான அல் ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ்விடம் பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளின்பேரில் இத்திட்டம் மக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தேசமான்ய சியாம் உட்பட பிரதேச மக்களும் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

# கிழக்கின் குரல்



## சாய்ந்தமருதின் அபிவிருத்தி தேவைகளுக்கு முன்னுரிமை

### மக்கள் சந்திப்பில் முஷாரப் எம்பி

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**



பாராளுமன்ற உறுப்பினரும், கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் நேற்றுமுன்தினம் சாய்ந்தமருது கிராமத்துக்கு விஜயம்செய்தார்.

இணைப்பாளர் அஸாம் அப்துல் அஸீஸின் வேண்டுகோளின் பேரில் அங்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் முஷாரபுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், பாராளுமன்ற உறுப்பினரின் மாவட்ட இணைப்பாளர் வை.எல்.நியாஸ் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு,மேற்கொள்ள வேண்டிய முக்கிய தேவை தொடர்பில் மக்கள் இவருக்கு தெளிவுபடுத்தினர். விரைவில் இவற்றை செய்து தருவதாக அவர் வாக்குறுதியளித்தார்.

புது வருடத்தில், 2024 அரசாங்கம் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த வகையில் சாய்ந்தமருதுவின் தேவைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படும். முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீலுடன் இணைந்து மேலும் பல வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

## கல்முனை ஆதாரவைத்தியசாலையின் வருடாந்த ஒளி விழா



**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வருடாந்த ஒளி விழா நேற்று (17) நடைபெற்றது. வைத்தியசாலையின் சுகநல சேவை கிறிஸ்தவ ஐக்கிய அங்கத்தவர்கள் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் பிரதம அதிதியாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் கலந்து சிறப்பித்தார். விசேட அதிதியாக ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் கிறீஸ் நவரெட்ணராஜா, சிறப்பு விருந்தினராக வைத்தியர் டாக்டர். ரேனுகா அருள்தாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## பாடசாலை கட்டட திறப்புவிழா

**கிண்ணியா தினகரன் நிருபர்**



கிண்ணியா /தாயிப் நகர் முஸ்லிம் வித்தியாலயத்தில், "Muslim Hands" நிறுவன நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்திறப்பு விழா, பல்தேவைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவங்கள் அண்மையில் (15) சிறப்பாக நடைபெற்றன.பாடசாலை அதிபர் தலைமையில் நடந்த இந்நிகழ்வில்,பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் கலந்துகொண்டார். கௌரவ அதிதிகளாக கிண்ணியா நகர சபையின் முன்னாள் நகரபிதா நிவாஸ் மற்றும் முஸ்லிம் ஹேண்ட்ஸ் (Muslim Hands) நிறுவனத்தின் திட்டப் பண்ணிப்பாளர் இல்முதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## CMT கெம்பஸ் விழாவில் 161 மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

### கிழக்கு ஆளுநர் தலைமை

**கல்முனை விசேட நிருபர்**

மலேசியாவின் மலாக்கா பல்கலைக் கழகத்துடன் கூட்டிணைக்கப்பட்ட CMT கெம்பஸ் கல்முனை வளாகத்தின் வருடாந்த சான்றிதழ் வழங்கும் விழா கடந்த சனிக்கிழமை (16) வெகு சிறப்பாக நடைபெற்றது.

CMT கெம்பஸ் தவிசாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் றமீஸ் அபூபக்கர் ஆகியோர் கௌரவ அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள், CMT கெம்பஸ் அதிகாரிகள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள், பிரமுகர்கள் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

உயர் கல்வி கற்கை நெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்து, சித்தியடைந்த 161 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## ஐக்கிய காங்கிரஸின் வருடாந்த கூட்டம்

ஐக்கிய காங்கிரஸின் வருடாந்த பொதக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி (05) நடைபெறவுள் ளது.இக்கூட்டம் அன்றைய தினம் மாலை நான்கு மணிக்கு கட்சியின் கல்முனை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கட்சி பதிவான பின்னர் நடைபெறும் இரண்டாவது வருடாந்த உயர் சபை கூட்டம் இதுவாகும்.

கட்சியின் தேசிய தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில், நாடளாவிய ரீதியிலுள்ள கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

REIMAGINING BANCASSURANCE

A PARTNERSHIP OF TWO 100 YEAR OLD LEGACIES

# கொமர்ஷல் வங்கி மற்றும் AIA ஸ்ரீலங்கா தமது பிரத்தியேக வங்கிக் காப்பீட்டுக் கூட்டாண்மையை அறிவிக்கின்றன.



சதுரி முனவீர - தலைமை நிர்வாக அதிகாரி (AIA ஸ்ரீலங்கா), சனத் மனதுங்க - முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி (கொமர்ஷல் வங்கி), பிரத்தியேக கூட்டு ஒப்பந்தத்தில் உத்தியோகபூர்வ கையொப்பமிடுகையில்.



கிளைவ் ஆண்ட்ரூஸ் - சிரேஷ்ட பிராந்திய ஆலோசகர் (AIA குழுமம்), சம்பத் துரார - தலைமை நிதி அதிகாரி (AIA ஸ்ரீலங்கா), சேனக ராஜபக்ஷ - இலங்குனர் கூட்டு விநியோகம் (AIA ஸ்ரீலங்கா), சதுரி முனவீர - தலைமை நிர்வாக அதிகாரி (AIA ஸ்ரீலங்கா), Tan Hak leh- தலைவர் (AIA ஸ்ரீலங்கா) மற்றும் பிராந்திய CEO (AIA குழுமம்), சனத் மனதுங்க - முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி (கொமர்ஷல் வங்கி), எஸ். பிரபாகர் - தலைமைச் செயற்பாட்டு அதிகாரி (கொமர்ஷல் வங்கி), திலக்ஷன் ஹெட்டியாராச்சி - பிரதிப் பொது முகாமையாளர் தனியார் வங்கி (கொமர்ஷல் வங்கி), ஹஸ்ரத் முனசிங்க - பிரதிப் பொது முகாமையாளர் சில்லறை வங்கி மற்றும் சந்தைப்படுத்தல் (கொமர்ஷல் வங்கி), வருண கொலமுன்ன - உதவி பொது முகாமையாளர் தனியார் வங்கி (கொமர்ஷல் வங்கி).











கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பிஎல்சி - இலங்கையின் மிகப்பெரிய தனியார் வங்கி மற்றும் இலங்கையில் பேங்க்அஷ்யூரன்ஸின் முன்னோடிகளான AIA இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் பிரத்தியேகமான நீண்ட கால வங்கிக் காப்பீட்டு பங்காளித்துவத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றன.

இது இரண்டு பெருநிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பைக் குறிக்கும் மைல்கல்லாகும். இரு நிறுவனங்களும் 100 ஆண்டு பாரம்பரியம் கொண்டவை. 100 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட கொமர்ஷல் வங்கி மற்றும் AIA இரண்டும் நிகரற்ற வலிமை, அனுபவம் மற்றும் நற்பெயரைக் கொண்டு வருகின்றன. ஆசியா முழுவதும் AIA இன் பரந்த அனுபவம் மற்றும் நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கியின் வலுவான வலையமைப்பு, அனைத்து இலங்கையர்களுக்கும் அவசியமான முன்மொழிவுகளை வழங்குவதற்கான சிறந்த தளத்தை அமைக்கும்.

இந்தக் கூட்டாண்மையில் AIA ஸ்ரீலங்கா, கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் பாதுகாப்பு, தேகாரோக்கியம் மற்றும் சேமிப்புத் தேவைகளை பூர்த்திசெய்து, கவனமாகத் தொகுக்கப்பட்ட ஆயுள் காப்புறுதி முன்மொழிவுகளை பரந்த அளவில் வழங்கும். 272 கிளைகளில் பரந்து விரிந்து கிடக்கும் கொமர்ஷல் வங்கியின் 3.5 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களின் வலையமைப்புடன், AIA இன் வங்கிக் காப்புறுதி நிபுணத்துவத்தை இணைத்து, இலங்கையர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கான வலுவான ஆற்றலை வெளிக்கொணரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நீண்ட கால பிரத்தியேக பங்காளித்துவமானது, இலங்கையர்களின் காப்புறுதி மற்றும் நிதி உள்ளடக்கத்தை நிலையான முறையில் மேம்படுத்துவதற்கு நன்கு உதவும்.









பொரலந்தை – ஹோர்டன்தென்ன வரை

## அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு இடமளிப்பதை உடன் தவிர்க்கவும்

பொரலந்த தொடக்கம் ஹோர்டன்தென்ன வரையான ஒஹிய பகுதியில் மேற்கொள்ளப்படும் அனுமதியற்ற கட்டட நிர்மாணங்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

ஒஹிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத நிர்மாணங்களால் பாரிய சுற்றாடல் அழிவுகள் ஏற்பட்டுள்ளதை அவதானித்ததாக தெரிவித்த ஜனாதிபதி, இந்த நிலைமையை உடனடியாகத் தடுக்காவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊவா மாகாண நூலக கேட்போர் கூடத்தில் (16) பிற்பகல் நடைபெற்ற பதுளை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.



மேலும், மாவட்டத்தின் கட்டடத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் போது உரிய, அளவுகோல்களுக்கு அமைய செயற்படுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். பதுளை மாவட்டத்தில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பிலும் கேட்டறிந்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகள் குறித்த முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து காணிகளை சட்டப்பூர்வமாக விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தடைகள் குறித்தும் அதிகாரிகள் கலந்துரையாடினர்.

இது தொடர்பில் பெருந்தோட்டக் கம்பனிகளுடன் கலந்துரையாடி பணிகளை விரைந்து முடிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு மேலும் பணிப்புரை விடுத்தார். பதுளை மாவட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில், மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், வீதிகள், போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் ஒரு சில பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். அத்துடன், 2024ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அடுத்த வருடம் முதல் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மாவட்டங்களுக்கு வழங்கப்படும் எனவும், மலையக அபிவிருத்தித் திட்டம் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் வெளிநாட்டு உதவியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் இருந்து பெறப்பட்ட நிதி என்ற அனைத்து நிதியையும் இணைத்து மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு

## ஜன.13 முதல் பெப்.18 வரை நேர்முகப் பரீட்சைகள்

2019/2020 க.பொ.த உயர்தர விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களில் சித்தியடைந் தோர்,தாதியர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட உள்ளனர்.இவர்களுக்கான முதற்கட்ட தகுதித் தேர்வு நேர்முகப் பரீட்சை 13 ஜனவரி 2024 முதல் பெப்ரவரி 18 வரை நடைபெறும்

இந்த நேர்முகப்பரீட்சை கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள தாதியர் பாடசாலைகளில் நடத்தப்படும். இதற்கென 4,000க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் (டிசம்பர்) சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (https://www.health.gov.lk/) இம்மாதம் 27ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்கள் இணையதளத்தை பயன்படுத்தி தேவையான விபரங்களை பெற்றுக் கொள்ள முடியுமென சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது. விண்ணப்பங்களை அனுப்பியுள்ள தாதியர் பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடத்தி, அவர்களை பயிற்சியில்

06

## குவைத் மன்னர் ஷேக் நவாஃப் காலமானார்

குவைத் மன்னர் ஷேக் நவாஃப் அல்அஹ்மத் அல்சபா தனது 86ஆவது வயதில் காலமானார். எண்ணெய் வளம் மிக்க நாடான குவைத்தில் மூன்றாண்டுகள் மன்னராக இருந்த இவர் நேற்று முன்தினம் காலமானதாக அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

குவைத் அரசின் மன்னர் ஷேக் நவாப் அல்அஹ்மத் அல்சபாவின் மறைவுக்கு மிகுந்த சோகத்துடனும், துக்கத்துடனும் இரங்கல் தெரிவிப்பதாக குவைத் அரசு தொலைக் காட்சியில் ஒளிபரப்பான அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதம் மன்னர், ஷேக் நவாஃப் " உடல்நலப் பிரச்சினை காரணமாக" மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் அவரது உடல் நலம்

06

## கேரளாவில் கொவிட்19 புதிய திரிபு JN 1 வைரஸ்

கேரளாவில் தற்போது கொவிட்19 வைரஸின் புதிய திரிபு ஜே.என்.1 வைரஸ் பரவத் தொடங்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த புதிய வைரஸ் திரிபு மேல் சுவாசக் குழாயை பாதிக்கும் என்றும், காய்ச்சல், இருமல், சோர்வு, மூக்கடைப்பு, மூச்சுத்திணறல், வயிற்றுப்போக்கு, தலைவலி போன்றவை முக்கிய அறிகுறிகளாக தென்படுமெனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் புதிய கொவிட்19 திரிபு வேகமாகப் பரவும் ஆபத்து உள்ளதாகவும், அதனால் அதுகுறித்து தொடர் கண்காணிப்பும் ஆய்வும் தேவை எனவும் குறிப்பிடப்படுகிறது.

தற்போது பரவும் ஜே.என்.1 வைரஸ் திரிபு, கடந்த செப்டம்பர் மாதம் அமெரிக்காவில் முதன்முதலாகக் கண்டறியப்பட்டது.

இந்த வைரஸ் திரிபு தற்போது சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரவத் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

## நாட்டில் தொற்றா நோயால் 80 வீத மரணங்கள் பதிவு

இலங்கையில் தொற்றா நோய்கள் மற்றும் இது தொடர்பான சிக்கல்களால் வருடாந்தம் 80 வீத மரணங்கள் ஏற்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் 35 வயதுக்குட்பட்டவர்களில் 15 வீதம் பேர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வும், 35 வீதம் பேர் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

உடற்பயிற்சியின்மையே இந்நிலைக்கு முக்கிய காரணமெனவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபாலவினால் சுகாதார அமைச்சின் வளாகத்தில் நிறுவப்பட்ட உடல் ஆரோக்கிய பிரிவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

எதிர்காலத்தில் அரசு மருத்துவமனைகளிலும் இதுபோன்ற உடல் நலப் பிரிவுகளை நிறுவுவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அம்பாறை மாவட்டத்தில் தொடர் மழை: பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் மோசமான கால நிலையால் அப்பிரதேசத்தில் தொடர் மழை பெய்துவருகிறது. இதனால்,மாவட்டத்தின் சில இடங்களில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ள நிலையில் விவசாயிகள் பெரும் கலக்கமடைந்துள்ளனர்.கடந்த

வெள்ளிக்கிழமை (15) இப்பகுதியில் பலத்த காற்று வீசியதுடன் பெரும் மழையும் பெய்தது. இதனால் 06 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 07 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு 10 குடும்பங்களைச் சேர்ந்த 32 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

அம்பாறை, உகன, பதியத்தலாவ, பொத்துவில், ஆலையடிவேம்பு, திருக்கோவில் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

06

## இளநீர் ஏற்றுமதியை அதிகரிக்க திட்டம்

இலங்கையிலிருந்து ஒவ்வொரு வாரமும் சுமார் 2,52,000 இளநீர் ஏற்றுமதி செய்யப்படுவதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இளநீரை ஏற்றுமதி செய்வதன் மூலம் 2022 இல் இரண்டு பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு (ஆறு பில்லியன்) 600 கோடி ரூபா வருமானத்தை ஈட்ட எதிர்பார்த்துள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்நிலையில், இளநீர் தோட்டங்களை ஒரு பெருந்தோட்ட பயிராக பயிரிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட

06

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321
சோபகிருது வருடம் மார்கழி மாதம் 03ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 03

### குறள் தரும் சிந்தனை

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று

*பிச்சை ஏற்பார் என்பவர் இல்லாது போய் விட்டால், குளிர்ந்த பெரிய இவ்வுலகத்தில் வாழ்பவரின் வாழ்க்கை, வெறும் மரப்பொம்மைகளின் போக்குவரத்தாகவே ஆகிவிடும்.*

# போதைப்பொருள் குற்றங்களை முற்றாக ஒழிக்க வேண்டும்!

நாட்டில் போதைப்பொருள் குற்றங்கள் அதிகரித்துள்ளன. அதன் விளைவாக சமூக, கலாசார, பொருளாதார தாக்கங்களும் பாதிப்புகளும் உயர்ந்துள்ளன. அத்தோடு போதைப்பொருள் பாவனை காரணமாக நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகின்றது. இப்பாவனை காரணமாக ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்க பெருந்தொகை நிதியையும் செலவிட வேண்டிய நிலைமை உள்ளது.

அதனால் போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் விஷேட முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் கந்தக்காடு முகாம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இம்முகாமில் புனர்வாழ்வு பெற்றுவந்தவர்களில் சுமார் நூறு பேர் கடந்த வாரம் தப்பியோடினர். அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு நிலையத்திற்கு திரும்பவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்கள் பல குடும்பங்களை வறுமையின் பிடிக்குள் தள்ளியுள்ளன. இன்னும் பல குடும்பங்கள் சமூக, கலாசார சீரழிவுகளுக்குள் சிக்குண்டுள்ளன. போதைப்பொருள் குற்றங்களின் விளைவாக வன்முறைக் கும்பல்கள் உருவாகியுள்ளன. குழுச்சண்டைகள் உயிர்களைக் காவு கொள்ளும் அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளன.

நாடு எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக போதைப்பொருள் குற்றங்கள் வளர்ந்திருக்கின்றன. இக்குற்றங்கள் தோற்றுவித்துள்ள பாதிப்புக்களும் தாக்கங்களும் நாட்டினதோ சமூகத்தினதோ நலன்களுக்கு உகந்தவை அல்ல.

இந்நிலையில் போதைப்பொருள் குற்றங்கள் தோற்றுவித்துள்ள சமூக, கலாசார பாதிப்புகளும் தாக்கங்களும் அனைத்து தரப்பினரதும் அவதானத்தைப் பெற்றுள்ளன. இக்குற்றங்களைக் கட்டுப்படுத்துவதன் அவசியமும் முக்கியத்துவமும் நாட்டின் உயர்பீடம் முதல் அடிமட்டம் வரையும் உணரப்பட்டு இருக்கின்றது.

அதன் காரணத்தினால் போதைப்பொருள் குற்றங்களை முற்றாக ஒழித்துக் கட்டுவதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வழங்கியுள்ளார்.

அதற்கேற்ப நேற்று 17 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையும் போதைப்பொருட்களை முற்றாக ஒழித்துக்கட்டும் வகையிலான வேலைத்திட்டம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பதில் பொலிஸ் மாஅதிபரின் ஆலோசனை, வழிகாட்டல்களின் கீழ் பொலிஸாரும் விஷேட அதிரப்படையினரும் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இதன் ஊடாக போதைப்பொருள் குற்றங்களை முற்றாக ஒழிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நீதி (யுக்திய) என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் ஊடாக போதைப்பொருட்களை விற்பனை செய்பவர்கள், கடத்துபவர்கள், விநியோகிப்பவர்கள், பயன்படுத்துபவர்கள் என அனைத்துத் தரப்பினரும் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

போதைப்பொருள் பாவனை, விற்பனை, கடத்தல் என்பன இடம்பெறுவதாக சந்தேகிக்கப்படும் இடங்களில் இத்திட்டத்தின் கீழ் தேடுதல்களை மேற்கொள்ளவும் திடீர் சுற்றிவளைப்புக்களை முன்னெடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பில் பொதுமக்களின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது. தொலைபேசி ஊடாகவோ மின்னஞ்சல் ஊடாகவோ போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் தகவல்களை பொலிஸாருக்கு வழங்க முடியும். அதற்கான தொலைபேசி இலக்கங்களும் மின்னஞ்சல் முகவரியும் வழங்கப்பட்டுள்ளன.

'இத்திட்டத்தின் கீழ் தகவல் அளிக்கும் எவரது விபரமும் பகிரங்கப்படுத்தப்பட மாட்டாது' எனக் குறிப்பிட்டுள்ள பொலிஸ் ஊடகத்துறை பேச்சாளர் நிஹால் தல்துவ, 'நாடெங்கிலும் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் மேல், தென் மாகாணங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது' எனவும் கூறியுள்ளார்.

போதைப்பொருள் குற்றங்களை முற்றாக ஒழிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இந்நடவடிக்கையை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். இவ்விதமான குற்றங்கள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். நாட்டின் எதிர்காலப் பரம்பரையினர் போதைப்பொருள் குற்றங்களில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும். அப்போதுதான் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கக்கூடியதாக இருக்கும்.

அதனால் போதைப்பொருள் குற்றங்களை முற்றாக ஒழிப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிப்பது இன்றியமையாததாகும். இது தனியே சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினரால் ஒழித்துக்கட்டக் கூடிய பிரச்சினை அல்ல.

அந்த வகையில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கையின் ஊடாக பெருந்தொகையான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதன் பாவனையாளர்கள், கடத்தல்காரர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டுமுள்ளனர். இவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். பாவனையாளர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஆகவே போதைப்பொருள் குற்றங்கள் அற்ற தேசத்தை உருவாக்க முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# சைவமும் தமிழும் இரு கண்களென போற்றி வாழ்ந்த நாவலர் பெருமான்

## இன்று 201 ஆவது ஜனன தினம்

ஆறுமுக நாவலர் பெருமானின் (டிசம்பர் 18, 1822 – டிசம்பர் 5, 1879) 101 ஆவது ஜனன தினம் இன்றாகும். தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர் நாவலர் பெருமான். தமிழும், சைவமும் அழிவுறாமல் பாதுகாத்துப் பணிபுரிந்தவர் அவர்.

தமிழ் நூல்களை முதன் முறையாகச் செம்மையான வகையில் பதிப்பித்த அவர் திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற் காண்டிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களையும் திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதிப்பித்தவர்.

ஆறுமுக நாவலர் பெருமான் யாழ்ப்பாணம், நல்லூரில் 1822 டிசம்பர் 18 இல் (சித்திரபானு ஆண்டு மார்கழி 5) புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை – சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும்.

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதி நூல்களையும் தமிழையும் கற்றார்.



ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமையனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார். தனது 19 ஆவது வயதில் (1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் எனும் பாதிரியாருக்கு, கிறிஸ்தவ விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர்சிவல் பாதிரியருடன் தமிழ்நாடு சென்னைக்குச் சென்று அச்சிட்டுக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார். இவரது முதற் பிரசங்கம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் டிசம்பர் 31, 1847 ஆம் திகதி நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.

வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து செப்டம்பர் 1848 இல் தமது அரசாங்க ஆசிரிய பணியைத் துறந்தார்.

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி 'நாவலர்' பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டுரையும் சௌந்தரியலங்கரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி சமய நூல்களை வசன நடையில் எழுதி அச்சிட்டார்.

இவரது பணி இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாட்டிலும் பரவியிருந்தது. சென்னையில் திருவாசகம், திருக்கோவையார் நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார். பெரியதொரு அச்சியந்திரத்தை விலைக்கு வாங்கி, சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலை என்ற அச்சகம் நிறுவிப் பல நூல்களையும் அச்சிட்டார். சென்னையிலும் திருவாவடுதுறை மற்றும் திருநாகைக்கோராணம் ஆகிய இடங்களில் தங்கி சைவப்பிரசங்கங்கள் செய்தபின் 1862 பங்குனியில் யாழ்ப்பாணம் திரும்பினார்.

1863 மார்கழியில் மீண்டும் தமிழகம் சென்றார். அங்கு இராமநாதபுர சமஸ்தானத்தில் பிரசங்கம் செய்தார். அங்கிருந்து மதுரை சென்று மீனாட்சியம்மை சந்நிதானத்திலே பிரசங்கித்து மீனாட்சிக்கு அணிவிக்கப்பெற்ற பரிவட்டமும் பூமாலையும் அணிவிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்.

அங்கிருந்து திருப்பெருந்துறை, திருப்பள்ளிருக்குவேளூர், சீர்காழி ஆகிய தலங்களை வணங்கிச் சிதம்பரம் சேர்ந்தார். அங்கு 1864 ஐப்பசியில் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

1866 மார்கழி மாதம் சென்னை திரும்பி சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதிலும் நாவலர் ஈடுபட்டார். இந்துக்கள் வீணான செயல்களில் ஈடுபடுவதை இவர் அடியோடு வெறுத்தார். உண்மையான சைவ வாழ்வை விரும்பினார்.

நாவலருடைய சமூகப் பணியில் மிகவும் பிரதானமாகக் கருதப்பட வேண்டியது கஞ்சித் தொட்டித் தருமமாகும். 1876 இல் கடும் வரட்சி வந்தது. இதைக் கண்ட நாவலர் பட்டினியால் வாடிய மக்களுக்கு கஞ்சி வார்க்க முற்பட்டார். இதனால் அவர் பெரிய ஒரு சாதனையே படைத்தார். பசிப்பிணி நீங்கிய மக்கள் இவரை மனமார வாழ்த்தினர்.

இடிந்து பாழடைந்து கிடந்த ஆலயங்களையெல்லாம் திருப்பணி மூலம் திருத்தியமைத்து புனருத்தாரணஞ் செய்வதிலும் நாவலர் ஆர்வம் காட்டினார். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் நாவலரால் புதுப்பிக்கப்பட்டது.

ஆறுமுக நாவலரது சமயப் பணியும் சமுதாயப் பணியும் அஞ்சாமை, வீரம், நேர்மை, உண்மையான உழைப்பு, ஒழுக்கம், கல்வி, அறிவு ஆகிய உள்ளார்ந்த உயர்ந்த பண்புகளை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தன. ஏட்டுச் சுவடிகளாக இருந்த பல நூல்களை அச்சுவாகனமேற்றி நூல்களாக ஆக்கிய பெருமை நாவலரையே சாரும். நாவலர் இல்லாவிட்டால் இலங்கையில் இந்து தர்மம் இல்லாது போயிருக்கும்.

நாவலரது கடைசிப் பிரசங்கம் 1879ஆம் ஆண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளது குருபூசை நாளான ஆடிச்சுவாதி அன்று வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது. 1879 ஆம் ஆண்டு (பிரமாதி வருடம்) கார்த்திகை மாதம் 18ஆம் திகதி நாவலரது உடல் நலம் குன்றியது. நாவலரது நித்திய சிவபூசை வேதாரணியத்துச் சைவாசாரியர் ஒருவரால் செய்யப்பட்டது. 21ஆம் திகதி இரவு தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படி கட்டளையிட்டு அவை ஓதப்படும் போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர், முதலிய புண்ணியத்தலங்களின் விபூதி அணிந்து, உருத்திராட்சம் பூண்டு, கங்காதீர்த்தம் உட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, இரவு ஒன்பது மணியளவில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

# இந்தியாவை மீண்டும் அச்சுறுத்தும் கொரோனா!

## 90 வீதம் பாதிப்பு கேரளாவில்!

இந்தியாவில் கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்து வருகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை கேரளாவில் தான் 90 வீதத்துக்கும் அதிகமான கொரோனா பாதிப்புகள் பதிவாகி உள்ளன. இந்தியாவில் தற்போது கொரோனாவுக்கு சிகிச்சை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை 1701. இவர்களில் கேரளாவில் மட்டுமே 1324 பேர் பதிவாகி இருக்கின்றனர்.

கேரளா மாநிலத்தில் தினமும் 700 முதல் 1,000 பேருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதேவேளை கேரளாவில் கொரோனாவால் 2 பேர் பலியாகியுள்ளனர். கேரளாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் வீடுகளிலேயே தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை எடுத்து வருகின்றனர். பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவில் கடந்த 4 ஆண்டுகளில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5,33,316 ஆகும். தற்போது கொரோனாவின் JN1 உருமாறிய வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலும் கொரோனா பாதிப்பு திடீரென அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் கடந்த பல மாதங்களில் இல்லாத அளவுக்கு அதாவது, கடந்த 7 மாதங்களுக்குப் பிறகு ஒரே நாளில் (டிசம்பர் 16) 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் 309 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்ட நிலையில், அவர்களில் 16 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. கொரோனா பாதிப்பு எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள திடீர் உயர்வு காரணமாக மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் தற்போது கொரோனா பாதிப்பு ஏற்பட்டவர்கள், 3,4 நாட்களில் குணமாகி விடுகின்றனர்.



இது இவ்விதமிருக்க, கேரளாவில் சபரிமலைக்கு தற்போது பெருமளவு பக்தர்கள் செல்கின்றனர். இதனால் கேரளாவில் பரவும் கொரோனா ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டிலும் எதிர்வரும் நாட்களில் பரவும் ஆபத்து உள்ளதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். எனவே சபரிமலை செல்லும் பக்தர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தலைநகர் டெல்லியிலும் கொரோனா பாதிப்பு வேகமாக அதிகரித்து வரும் நிலையில், வைரஸ் பாதிப்பு மீண்டும் உச்சம் தொடுமோ என்று ஆய்வாளர்கள் அஞ்சுகின்றனர்.

காய்ச்சல், மூக்கு வடிதல், தொண்டைப்புண், தலைவலி, இரைப்பை குடல் பிரச்சினைகள் ஆகியவை இதன் முக்கிய அறிகுறிகளாக இருக்கின்றன. பெரும்பாலான நோயாளிகளுக்கு இலேசான மேல் சுவாச பாதிப்பு ஏற்படுகிறது. இந்த வகை கொரோனா பாதிக்கப்பட்டோரின் உடல்நிலை 4, 5 நாட்களில் குணமாகும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். பெரும்பாலான நபர்களுக்கு இலேசான பாதிப்பே ஏற்படுகிறது. மிகச்சிலருக்கு மட்டுமே தீவிர பாதிப்பு ஏற்படுகிறது.

# சிறந்ததொரு நிர்வாக அதிகாரியாக பணியாற்றியவர் மர்ஹூம் றபீக்

இலங்கை நிருவாக சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் முன்னாள் செயலாளருமான எம்.ஐ.எம். றபீக் காலமான செய்தி அவரது அன்பர்களுக்கு பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது. அவர் கடந்த 07.12.2023 அன்று காத்தான்குடி_06, M.C.M. ஒழுங்கையில் உள்ள தனது இல்லத்தில் காலமானார்.

மர்ஹூம் றபீக் 23.08.1957 இல் காத்தான்குடியில் எம்.கே.எம். இஸ்மாயில், முகம்மது பாத்தும்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவரது தந்தை பாடசாலை அதிபராக நேர்மையாக சிறந்த முறையில் பணியாற்றியதுடன் கல்வித் திணைக்களத்தால் 'நல்லாசிரியர்' என்ற பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார். காத்தான்குடியின் பிரபல சமூக சேவையாளரும் பட்டின ஆட்சி மன்றத் தலைவருமான அஷ்ஷஹீத் ஏ. அஹமது லெப்பை மர்ஹூம் றபீக் அவர்களது தாயாரின் இளைய சகோதரன் ஆவார்.

தனது ஆரம்பக் கல்வியை காத்தான்குடி மெத்தைப்பள்ளி வித்தியாலயத்திலும் இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை மட்/சிவானந்தா தேசிய பாடசாலை, மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி மற்றும் மட்/புனித மிக்கேல் கல்லூரி ஆகியவற்றிலும் றபீக் பூர்த்தி செய்தார். 1977 இல் ஆங்கிலஆசிரியராக காத்தான்குடி மில்லத் மகளிர் மகா வித்தியாலயத்தில் நியமனம் பெற்றதோடு 1980 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார்.



1982 இல் இலங்கை நிருவாக சேவைக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்த இவர், 1983 இல் களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டு, மேலதிகமாக பட்டிப்பளை, வெல்லாவெளி பிரதேசங்களுக்கும் உதவி அரசாங்க அதிபராக இணைப்புச் செய்யப்பட்டார். மட்டக்களப்பு கச்சேரியில் தலைமையக உதவி அரசாங்க அதிபராக சிறிது காலம் கடமையாற்றினார். இதன் பின்னர் கிண்ணியாவின் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றினார்.

1990 இல் அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் நாயகமாக மர்ஹூம் றபீக் நியமிக்கப்பட்டார். பின்னர் பொது நிருவாக அமைச்சிலும் கடமையாற்றியதுடன் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் உதவிச் செயலாளராகவும் பணிபுரிந்தார். இதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் பின்பு மின் சக்தி, எரிசக்தி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றினார்.

இதன் பின் 2015 ஜனவரியில் விளையாட்டு, சுற்றுலா மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு பெற்றார். அதனைத் தொடர்ந்து மர்ஹூம் றபீக் 2015.09.10 தொடக்கம் தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறும் வரை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளராக பணிபுரிந்தார். மர்ஹூம் றபீக் கடமை நிமித்தம் பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்ததுடன் சர்வதேச மாநாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சுமட்டத் தூதுக்குழுக்களுக்கு தலைமையும் வகித்திருந்தார்.

அவர் சட்டத்தரணியாகவும் உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்திருந்தார். தனது கடமைக்கு மேலதிகமாக பல காலப்பகுதிகளில் வக்பு சபை உறுப்பினராகவும், ஹஜ் குழு உறுப்பினராகவும் காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிருவாக உறுப்பினராகவும் பணிபுரிந்தார். காத்தான்குடி_04 முஹைதீன் தைக்கியா பள்ளிவாயலினதும் மற்றும் கொழும்பு கோட்டை சதாம் வீதி ஜும்மா பள்ளிவாயலினதும் விசேட நம்பிக்கையாளர் சபைகளிலும் அங்கம் வகித்துள்ளார்.

எம்.எஸ்.எம். நூர்தீன்...
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்

கிழக்கு மாகாணத்தின் மேற்கு கல்வி வலயத்தில் தனது கல்விப் பணியை ஆசிரியராக அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக நிறைவாக மேற்கொண்ட சுப்பிரமணியம் முருகேசபிள்ளை தனது அறுபதாவது வயதில்( 2023.12.12)அரச சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார்.

மட்டக்களப்பு படுவான்கரை, கன்னன்குடாவில் பிறந்த இவர் ஆரம்ப வகுப்பு முதல் சாதாரண தர வகுப்பு வரை கன்னன்குடா மகாவித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலும் கற்றார்.



1988.08.22 இல் தாண்டியடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியப்பணியை ஆரம்பித்த இவர் 1990/1991ஆம் கல்வியாண்டில் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். இக்காலகட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றார். பின்னர் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை பூர்த்தி செய்தார்.

பயிற்றப்பட்ட ஆசிரியராக, பட்டதாரி ஆசிரியராக தொழில் தகைமை, கல்வித் தகைமையை பெருக்கி கொண்ட இவர் கரையாக்கன்தீவு கணேச வித்தியாலயத்தில் ஆசியராகப் பணியாற்றிய வேளையில் காயான்மடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகப் பணியாற்றினார். இக்கிராமத்தில் காயான்மடு சரஸ்வதி வித்தியாலயத்தை உருவாக்கி அதன் ஸ்தாபராகவும், முதலாவது அதிபராகவும் அங்கு ஆறு ஆண்டுகள் அர்ப்பணிப்பான சேவையை வழங்கினார். சிறந்த அதிபர் என்று சமூக நன்மதிப்பைப் பெற்ற இவர், கன்னன்குடா மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டார். 12 ஆண்டுகள் அங்கு பணிபுரிந்த நிலையில், கல்வி அமைச்சின் புலமைப் பரிசில் பெற்று கனடாவில் ஒருமாத கால சர்வதேச தலைமைத்துவ பயிற்சியை 2003 ஆம் ஆண்டில் பெற்றார். இவர் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர்ப் பற்று கல்விக் கோட்டத்தின் முதலாவது கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அங்கு எட்டு வருடகாலம் சேவையாற்றிய காலத்தில் பலாச்சேனை கலாசூரி வினாயகமூர்த்தி வித்தியாலயம், தளவாய் அஜராத்மானந்தஜீ வித்தியாலயம், கரடியன்குளம் ஆத்மகனானந்த வித்தியாலயம் என்பவற்றை உருவாக்கி இப்பாடசாலைகளின் ஸ்தாபகர் என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டார்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம்முருகேசபிள்ளையின் சிறந்த சேவையைப் பாராட்டி மண்முனை மேற்கு கல்வி வலயத்திலுள்ள சகல பாடசாலைகளும் சேவைநலன் பாராட்டு விழாக்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

செல்லையா பேரின்பராசா...
(துறைநீலாவணை நிருபர்)

## மானுடவியல்



145

நீ அவனிடத்திலே சென்று அவன் கருத்தை முடிப்பாயாக' என்று பணித்து மறைந்தருளினார்.

வேந்தன் விழித்தெழுந்து இறைவர் திருவருளைப் போற்றிப் பொழுது புலர்ந்ததும் தண்டியடிகளை அடைந்து, அவர் நிகழ்ந்தன சொல்லக்கேட்டு சமணர்க்கும், தண்டிக்கும் இடையே நிகழ்ந்த அவ்வழக்கைத் தீர்க்க எண்ணினான். சமணர்களை அழைத்து அவர்கள் கருத்தை அறிந்துகொண்டான். பின்னர் சமணர்களை அழைத்து தன்னுடன் வரத் தண்டியடிகளாருடன் குளக்கரையை அடைந்தான். வேந்தன் தண்டியடியாரை நோக்கி, 'பெருகும் தவத்தீர்! நீர் சிவனருளால் கண் பெறுதலைக் காட்டுவீராக' என்றான். அதுகேட்ட தண்டியடிகளார், 'தான் சிவனுக்குப் பொருந்திய அடியேன் என்றால் இன்று என் கண்கள் ஒளி விளங்கப் பெற்று சமணர்கள் தங்கள் கண்களை இழப்பர். அதனால் ஆராய்ந்த மெய்பொருளும் சிவபதமே ஆகும்' என்று சொல்லித் திருவைந்தெழுத்தை எடுத்தோதிக் குளத்தில் மூழ்கிக் கண்ணொளி பெற்று எழுந்தார். அங்கிருந்த சமணர்கள் கண் ஒளி இழந்து வழி தெரியாமல் தடுமாற்றமுற்றனர், 'பழுதுசெய்து அமண் கெட்டது' என்றுணர்ந்த மன்னன், தன் ஏவலாளரைப் பார்த்து, தண்டியடிகளோடு ஒட்டிக் கெட்ட சமணர்களைத் திருவாரூரினின்றும் அகன்று போம்படி துரத்துவீராக' எனப்பணித்தான். கண் கெட்ட சமணர்கள் குழியில் விழுந்தவரும், புதரில் முட்டுப்பட்டவரும், உடுத்த பாய்களை இழப்பவரும், பிடித்த பீலியை இழப்பவருமாய் ஓட்டமெடுத்தனர். பின் திருக்குளத்தின் கரைகளைச் செம்மைபெறக் கட்டித் தண்டியடிகளை வணங்கிச் சென்றான். அகக்கண்ணேயன்றிப், புறக்கண்ணும் பெற்ற தண்டியடிகளார் இறைவனைப் போற்றித் திருவைந்தெழுத்தோதித் திருப்பணிகள் பல புரிந்து திருவடி அடைந்தார்.



கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# பாவை நோன்பு



திருமாலே தனக்கு கணவராக அமைய வேண்டுதல் வைத்து, மார்கழி மாதத்தில் ஆண்டாள் மேற்கொண்ட விரதமே பாவை நோன்பு எனப்படுகிறது. இதற்காக அவள், அதிகாலையில் துயிலெழுந்து தோழியரையும் அழைத்துக் கொண்டு நீராடச் சென்றாள்.

தான் பிறந்த ஸ்ரீவில்லிப்புத்தூரை ஆயர்பாடியாகவும், தன்னை கோபிகையாகவும் பாவனை செய்து, கண்ணனின் இல்லத்திற்குச் சென்று அவனை வணங்கி வந்தாள். மாதத்தின் ஆரம்பத்தில் நெய், பால் முதலிய உணவு வகைகளைத் தவிர்க்கும் வகையில் இந்த விரதம் அமைந்தது. இந்த விரதத்தை இப்போதும் கன்னிப் பெண்கள் அனுஷ்டிக்கலாம்.

காலை 4.30 மணிக்கே நீராடி, திருப்பாவை பாடலை மூன்று முறை படிக்க வேண்டும். உதாரணமாக, மார்கழி முதல்தேதியன்று மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாம் பாடலைத் துவங்க வேண்டும். மார்கழியில் 29 நாட்களே இருப்பதால், கடைசி நாளில் கடைசி இரண்டு பாடல்களை மூன்று முறை பாட வேண்டும். இத்துடன் தினமும்வாரணமாயிரம் பகுதியில் இருந்து வாரணமாயிரம் சூழ வலம் வந்து, மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத உள்ளிட்ட பிடித்தமான பாடல்களைப் பாட வேண்டும்.

விரத நாட்களில் நெய், பால் சேர்த்த உணவு வகைகளை உண்ணக்கூடாது. மற்ற எளிய வகை உணவுகளைச் சாப்பிடலாம். ஆண்டாள், பெருமாள் படம் வைத்து உதிரிப்பூ தூவி காலையும், மாலையும் வழிபட வேண்டும். இவ்வாறு செய்வதால் ஆண்டாள் மனம் மகிழ்ந்து, சிறந்த கணவனைத் தர அருள் செய்வாள். திருமணத்தடைகளும் நீங்கும். மார்கழி மாதத்தில் எல்லா கோயில்களிலுமே அதிகாலையில் பூஜை நடக்கும். கோயில்களில் மட்டுமின்றி வீட்டையும் சுத்தம் செய்து, காலையில் எளிய பூஜை ஒன்றை பெண்கள் செய்யலாம். திருமணமான பெண்கள் இதைச் செய்தால் மாங்கல்ய பலம் கூடும்.

சைவ மஞ்சரி

# இறைவனடி சேர்க்கும் வைகுண்ட ஏகாதசி விரதம்

பெருமாளுக்கு விரதம் இருந்து வழிபட உகந்த நாளாக மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி திருநாள் விளங்கு கிறது.இந்துக்களின் முக்கிய திருநாளாக கொண்டாடப்படும் பண்டிகைகளில் வைகுண்ட ஏகாதசி திருநாளும் ஒன்று. இந்த திருநாளானது மார்கழி மாதத்தில் முக்கிய நிகழ்வாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நாளில் விரதம் இருந்து வழிபட்டால் இறைவனை நேரடியாக சரணடையலாம் என்பது அதிகமாக உள்ளது.

இறைவனடி சேர வேண்டும் என்று நினைக்கும் பக்தர்களுக்கு வைகுண்ட பதவி கொடுப்பதற்காக இந்நாளில் வைகுண்ட கதவுகள் திறக்கப்படுகிறது. புனிதமாக கருதப்படும் மார்கழி மாதத்தில் வரக்கூடிய வளர்பிறை 11 ஆம் நாளில் வைகுண்ட ஏகாதசி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இந்த திருநாளில் பகல் பத்து, இரா பத்து என 20 நாட்கள் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. அதில் இந்த பகல் 10 முடியும் பத்தாம் நாள் வைகுண்ட ஏகாதசி என கூறப்படுகிறது. சொர்க்கவாசல் திறக்கப்படும் இந்த திருநாளில் விரதம் இருந்து வழிபட்டால் நேரடியாக இறைவனடி சேரலாம் என்பது ஐதீகமாக உள்ளது.






# மகியாவ காட்டுமாரியம்மன் திருக்கோயிலில் மகர ஜோதி பெருவிழா

கண்டி, மகியாவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ காட்டு மாரியம்மன் திருக்கோயிலில் மகியாவ ஐயப்பா சேவா சங்கம் நடாத்தும் மகர ஜோதி பெருவிழா எதிர்வரும் 30.12.2023ஆம் திகதி சனிக்கிழமை காலை 06.00 மணிக்கு மகா கணபதி ஓமத்துடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து விஷேட அபிஷேகம், சக்தி பூஜை என்பன நடைபெறும். அன்று மாலை 06.00 மணிக்கு சத்தியமான பொன் 18ம் படி பூஜையும், விஷேட பஜனையும் வழிபாடும் நடைபெறும். இப்பூஜைகளில் அனைத்து மெய்யன்பர்களும் கலந்து கொண்டு ஐயன் ஐயப்ப சுவாமிகளின் திருவருள் கடாட்சத்தை பெற்றுய்யுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.



## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 67



வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.

நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.

நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது. தீய எண்ணம் கொண்டவனின் விருப்பம், நஞ்சு போல் நம் சக்தியினை அழித்து விடும். அவனிடத்தில் நல்லெண்ணங்கள் வளர்க்கப்படுமாயின் அவனிடத்திலும் நம்பிக்கை. சுறுசுறுப்பு போன்ற நற்குணங்கள் மேம்படும். நல்லதொரு விருப்பம், அதை அடைவதற்கான ஈடுபாடு. அதற்கான சக்தி ஆகிய யாவும் ஒன்றிணைந்தால் எப்பேற்பட்ட லட்சியத்தையும் நாம் அடைந்து விடலாம்.

# ஜிந்துப்பிட்டி, கதிரேசன் வீதி அறநெறி பாடசாலைகள் ஆடற்கலையில் வெற்றி



தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன், அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், இந்து கலாசாரத் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் ஆடற்கலையின் போட்டியின் கொழும்பு மாவட்டத்திற்கான போட்டி நேற்று மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் கொழும்பு 11, கதிரேசன் வீதியிலுள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத ஆலய அறநெறி பாடசாலையும் கொழும்பு, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அறநெறி பாடசாலையும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

## அறநெறி அறிவுநொடி



முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

19469. விளக்கேற்றக் கூடிய திசைகள் யாவை?

கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளில் ஏற்றலாம்.

19470. விளக்கேற்றக் கூடாத திசைகள் யாவை? தெற்கில் மட்டும் ஏற்றக்கூடாது.

19471. நம்முடைய இஷ்டதெய்வத்தின் உருவச்சிலையை வீட்டில் வைத்து வழிபடலாமா?

இஷ்டதெய்வ சிலையை வைத்து வழிபடலாம். வழிபாட்டின் போது காலை, மாலை வேளைகளில் பால், பழம் பிரசாதமாக வைத்து பூஜை செய்ய வேண்டும்.

19472. பிரதோஷம் என்றால் என்ன?

தோஷம் என்றால் குற்றம். ப்ர என்றால் பொறுத்துக்கொள்வது. இறைவன் நமது பாவத்தை எல்லாம் மன்னித்து அருள்தரும் காலமே பிரதோஷம்.

19473. அத்தருணத்தில் இறைவனை வழிபட்டால் என்ன பலன் உண்டாகும்?

இந்த நேரத்தில் இறைவனை வழிபட்டால் மகிழ்ச்சியான வாழ்வு கிடைக்கும்.

19474. பிதுர்தோஷம் ஏன் ஏற்படுகிறது?

காலம் சென்ற முன்னோருக்கு பித்ருக்கள் என்று பெயர். இவர்கள் தெய்வத்துக்கு சமமானவர்கள். ஒவ்வொரு மனிதனும் நல்ல முறையில் வாழ ஒவ்வொரு தெய்வ வழிபாட்டை ஏற்றுக் கொள்வது போன்று ஒவ்வொரு மனிதனுடைய சந்ததி தழைக்க அவரவர்களது முன்னோர் வழிபாடு எனும் பிதுர் காரியத்தை அவசியம் செய்ய வேண்டும். ஆண்டு தோறும் திதி கொடுத்தல், அமாவாசை தர்ப்பணம் செய்தல் போன்றவை பிதுர் காரியங்களாகும். இவற்றைச் சரியாக செய்யாதவர்களுக்கு பிதுர் தோஷம் ஏற்பட்டு குடும்ப வாழ்க்கையில் குறைபாடு, குழந்தையின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

19475. அதைப் போக்கும் வழி என்ன?

இதனைப் போக்கிக் கொள்ள ராமேஸ்வரம், திருவாஞ்சியம், திருவெண்காடு ஆகிய தலங்கள் ஏதாவது ஒன்றில் தில ஹோமம் செய்ய வேண்டும். இதன் பிறகும், பிதுர் காரியங்களாகிய முன்னோர் வழிபாட்டை தொடர்ந்து செய்து வந்தால் பிதுர்தோஷம் நீங்கி நல்ல குடும்ப வாழ்க்கையும் வம்ச விருத்தியும் உண்டாகும்.

19476. சுபநிகழ்ச்சிகளுக்கு வளர்பிறையை தேர்ந்தெடுப்பது ஏன்?

நவக்கிரகங்களில் ஒருவரான சந்திரனே நம் மனதை இயக்குபவர். வளர்பிறையில் சந்திரன் ஆற்றலோடு திகழ்வார். அந்நாட்களில் நிலவின் அமுத கிரணங்கள் பூமியில் விழுவதால், மனம் உற்சாகத்துடன் இருக்கும். உற்சாகமாக இருக்கும்போது, சுப நிகழ்ச்சிகள் குறைவின்றி சிறப்பாக நடந்தேறும் என்பதற்காகவே வளர்பிறையைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

# இன்றைய பலன்கள்


## ( 15. 12. 2023 )




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**


போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:**

ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:**

மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.


**கடகம்:**

தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.

**சிம்மம்:**

எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.

**கன்னி:**

தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.

**துலாம்:**

நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.

**விருச்சிகம்:**

தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**தனுசு:**


ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.

**மகரம்:**

உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.

**கும்பம்:**

லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.

**மீனம்:**

அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

## ஜன.13 முதல் பெப்.18 வரை... (03ஆம் பக்கத் தொடர்)

இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதன்படியே தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது நாடளாவிய ரீதியில் 45,000க்கும் அதிகமான தாதியர் சுகாதாரத்துறையில் பணியாற்றி வருகின்றனர். நாடளாவிய ரீதியில் 17 தாதியர் பயிற்சிப் பாடசாலைகளில் 6,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி நெறிகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குவைத் மன்னர் ஷேக் நவாஃப்... (03ஆம் பக்கத் தொடர்)

நிலையாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், அவர் நேற்று முன்தினம் காலமாகியுள்ளார். ஷேக் நவாஃப் 2006 இல், ஆண்டில் அவரது சகோதரர் ஷேக் சபா அல்அஹ்மத் அல்சபாவால் முடிக்குரிய இளவரசராக நியமிக்கப்பட்டார். ஷேக் சபா செப்டம்பர் 2020இல் தனது 91 வயதில் மறைந்தபோது மன்னராக பொறுப்பேற்றார்.

2020 இல், எண்ணெய் விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட நெருக்கடியின் மூலம் அவர் பொருளாதாரத்தை வழி நடத்த வேண்டியிருந்தது. தற்போதைய பட்டத்து இளவரசர் ஷேக் மிஷால் அல்அஹ்மத் அல்சபா, மற்றொரு சகோதரர், 83 மற்றும் மேலும் ஒரு இளைய தலைமுறை ஆட்சியாளரை அடுத்த மன்னராக கொண்டு வரப்படுகிறாரா? என்பதில் இப்போது அதிக கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இளநீர் ஏற்றுமதியை... (03ஆம் பக்கத் தொடர்)

கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். உலகில் பல நாடுகள் இளநீர் பயிரிட முயற்சிக்கின்றன.

எனினும், உலகில் மிகவும் சுவையான இளநீர் இலங்கை இளநீர் என்றும், இலங்கையில் இளநீரை பிரபலமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அம்பாறை மாவட்டத்தில்... (03ஆம் பக்கத் தொடர்)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள வீடுகளை புனரமைப்பதற்கு முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபா நஷ்டஈடும் வழங்கப்படவுள்ளது. முழுமையாக பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் விபரம் கிடைத்ததும் முழுமையான நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படும்.

## சிவனொளிபாத மலைக்கு...

குடிநீர் வழங்கவும், தடை இன்றி மின்சாரம் வழங்குவதற்கும் இலங்கை மின்சார சபை முன்வந்துள்ளது.

## கொலன்னாவை சுற்றிவளைப்பில்...

அதிரடிப்படையினரும் இந்த சுற்றி வளைப்புக் குழுவில் உள்ளடங்கினர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள் கஞ்சா மற்றும் கஞ்சாவுடன் கலக்கப்பட்ட போதைப் பொருள் ஆகியவையும் கைப்பற்றப் பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 165 வீடுகள் மற்றும் 625 நபர்கள் இவ்வாறு சுற்றி வளைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதில் 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சிறுவருக்கு ஹெபடைடிஸ்...

சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். இருமல், சளி, காய்ச்சல் போன்றவற்றுடன் ஹெபடைடிஸ் நோய் குழந்தைகளையும் பாதிப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## 02 கோடி 50 இலட்சம்...

கிளைகளுக்கு பகிர்ந்தளித்துள்ளதாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

நான்கு மாத காலத்துக்கு தேவையான முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. இந்த அனுமதியை மேற்படி கூட்டத்தாபனத்துக்கே வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாடசாலைகளுக்கு...

திகதி வரை அந்த விடுமுறை வழங்கப்படுவதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை தவணை விடுமுறைகள் (2024) தொடர்பான அட்டவணையை கல்வியமைச்சு நேற்று வெளியிட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் முதலாம் தவணையின் முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதையடுத்து விடுமுறை வழங்கப்பட்டு, முதலாம் தவணையின் 2 ஆம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகும். மே மாதம் 5 ஆம் திகதி வரை இதற்கான கல்வி நடவடிக்கைகள். நடைபெறும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கமைய விடுமுறை வழங்கப்பட்டு, முதலாம் தவணையின் 3 ஆம் கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக ஜ"ன் மாதம் 10 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஜ"ன் மாதம் 25 ஆம் திகதி வரை அந்த நடவடிக்கைகள் நடைபெறவுள்ளன. அதன் பின்னர் முதலாம் தவணை விடுமுறை வழங்கப்பட்டு 2 ஆம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஜ"லை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த 2 ஆம் தவணை கல்வி நடவடிக்கைகள் செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன் 3 ஆம் தவணை கல்வி நடவடிக்கைகள் 2 கட்டங்களாக நடத்தப்படும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# SLICCA நிறுவனத்தின் பட்டமளிப்பு, விருது வழங்கும் விழா



SL INSTITUTE OF CONFECTIONERY AND CULINARY ARTS என்ற SLICCA நிறுவனத்தின் 7வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பட்டமளிப்பு விழாவும் சிறப்பு விருது வழங்கும் விழாவும் நேற்று கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள மரினோ பீச் ஹோட்டலில் SLICCA நிறுவனத்தின் தலைவி தேசமான்ய டொக்டர் பாத்திமா ருஷ்தா நஜுமுதீன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கைக்கான துருக்கியின் தூதுவர் R. Demet Sekercioglluவும் இலங்கைக்கான துருக்கியின் கொன்சியூலரும் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்ணான்டோ சிறப்பு அதிதியாக கலந்துகொண்டார். இதில் இந்திய நாட்டின் பிரதிநிதிகள் இருவர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

SLICCA நிறுவனத்தில் கைத்தொழில் மற்றும் சுய வேலை வாய்ப்பு பயிற்சிநெறியை பூர்த்தி செய்த 200க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அந்தந்த துறைகளில் பெற்ற திறனாய்வுக்கு அமைய பட்டமளிக்கப்பட்டதுடன் சிறப்பு விருதுகளும் வழங்கப்பட்டன. இதில் 50 பேருக்கு அதியுயரிய சிறப்பு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இலங்கைக்கான துருக்கியின் தூதுவர் R. Demet Sekercioglluவும் இலங்கைக்கான துருக்கியின் கொன்சியூலரும் அதிவணக்கத்துக்குரிய பிதா அருட் கலாநிதி எஸ். சந்துரு பெர்ணான்டோவும் கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரகுமானும் பட்டமளித்து இவர்களுக்கான விருதுகளை வழங்கினார்கள்.

## கட்டி முடிக்கப்படாதுள்ள...

இவ்வீடுகள் பாதியளவிலே கட்டப்பட்டுள்ளன.இவற்றில் பலவை,வாழத்தகுதியற்ற நிலையில் உள்ளதாக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு உதாகம்மானத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை பல உதாகம்மானவுக்கு பகுதிகளாக பகிர்ந்தளிக்கப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கிறது. இவர்களது காலத்தில் பல கிராமங்கள் நிர்மாணிக்கப்பட்டன என்பதைக் காட்டும் நோக்கில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துளது.

## IMF உடனான வேலைத்திட்டத்தில்...

காப்பாற்றுவதற்கான நடைமுறைச் சாத்தியமான முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். பொறுப்புக்களை ஏற்காமல் மக்களை மகிழ்விக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடும் அரசியலானது, நாட்டை மீண்டும் அலத பாதாளத்துக்கு இழுத்துச் செல்லுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். பிரபல்யமான கருத்துக்களை வெளியிடும் எவரும் கடினமான தீர்மானங்களை எடுக்கத் தயாரில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பாற்ற வேறு வழியில்லை என்பதாலேயே சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்ததாகவும் வலியுறுத்தினார்.

கண்டி மாநகர சபையின் "கரலிய அரங்கம்" மற்றும் கலைக்கூடம் என்பவற்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று (17) காலை கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். கண்டி மாநகர சபையினால் 2018 ஆம் ஆண்டு ''கரலிய அரங்கம் மற்றும் கலைக்கூட நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதற்காக மாநகர சபை நிதியினால் சுமார் 600 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நினைவுப் படிகத்தை திரைநீக்கம் செய்து கட்டிடத் தொகுதியையும் ஜனாதிபதி திறந்து வைத்தார்.

கண்டி முறையான நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கண்டி மாநகரசபையுடன் இணைந்து நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்பட்ட "சுத்தமான வாயில்கள்" வணிக பங்களிப்பு நிகழ்ச்சி மற்றும் நகரை அழகுபடுத்தும் திட்டத்துக்கு பங்களிப்பு வழங்கியவர்களைப் பாராட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சான்றிதழ்களையும் வழங்கினார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

நாடு வங்குரோத்தடைந்த பிறகு, நாங்கள் இரண்டு குழுக்களை சமாளிக்க வேண்டியிருந்தது. பல நாடுகள் எமக்கு கடன் வழங்கியுள்ளன. கடன் பெற்ற நாடுகளில் இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் பெரிஸ் ஒப்பந்தத்தைச் சேர்ந்த அமைப்புகளும் அடங்கும். இந்தக் கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இந்தியாவும் ஏனைய அமைப்புகளும் பெரிஸ் கழகத்திற்கு வர சம்மதித்தாலும், சீனா அதற்கு முன்வரவில்லை. சீனாவுடன் தனித்தனியாக பேச்சு நடத்தி வருகிறோம். இலங்கையைப் போன்று வங்குரோத்து நிலைக்குச் சென்ற ஏனைய நாடுகளும் இவ்வாறான இக்கட்டான சூழலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவை அனைத்தையும் சர்வதேச நாணய நிதியத்தின் விதிமுறைகளின்படி செயற்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் முதல் ஒப்பந்தத்தை எட்டினோம். இந்தியா, சீனா மற்றும் பெரிஸ் கழகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கடன் மறுசீரமைப்பை எங்களால் முன்வைக்க முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்டவாறு முதல் கடன் தவணையைப் பெற்றோம். அமெரிக்க திரைசேறி செயலாளருடன் கலந்துரையாடினோம். அதன்பின், ஜப்பான் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாட வேண்டியிருந்தது. இந்திய நிதி அமைச்சர் மற்றும் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடப்பட்டது. சீனா சென்று ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சருடன் கலந்துரையாடியிருந்தோம். இவர்கள் ஒவ்வொருவருடனும் பேசி உடன்பாடு எட்டப்பட்டது.

தற்போது லண்டன் சென்று தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளதால் மீண்டும் கடன் பெற முடியும். எனவே, விரைவில் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க முடியும். அடுத்த ஆண்டு மேலும் பல அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும். வங்குரோத்து நிலையிலிருந்து இப்போதுதான் வெளியே வந்தோம். சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நாடுகளின் கடன்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் காரணமாக இந்த நிலையை எட்ட முடிந்தது. நமது நாட்டின் கடனை அடைக்கக் கூடிய குறைந்தபட்ச வருமானம் இருப்பதைக் காட்ட வேண்டும். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தோம். முதலாவதாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியை 10.4% ஆக அதிகரிக்க வேண்டும் என்பது எங்களுக்கு கொடுக்கப்பட்ட இலக்கு. 2024இல், அந்த இலக்கை அடைய முடியாது. இந்த இலக்கை 2025, 2026 காலப்பகுதிக்குள் அடையலாம். எனவே, நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி 2024 இல் மொத்தத் தேசிய உற்பத்தியை 9.2% ஆக எட்டுவதை இலக்காகக் கொண்டு செயல்பட்டோம்.

இந்த இலக்கை 2024இற்குள் எட்டுவதற்கு எமது வருமானத்தில் 534 பில்லியன் பற்றாக்குறை உள்ளது. அதுதான் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

அந்த பற்றாக்குறைக்கு அஸ்வெசும திட்டமும் ஒரு காரணம். அதற்கு 61 பில்லியன் செலவிட்டுள்ளோம். ஆனால் நிவாரணத்திற்காக 207 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இந்த நாட்டின் ஏழை மக்களுக்கானது. மேலும், அரசு ஊழியர்களின் சம்பளமும் உயர்த்தப்பட்டது. சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியத்திற்காக மேலும் 133 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இந்த 534 பில்லியன் தேவையில்லை என்று சொல்வதாக இருந்தால் அஸ்வெசும மற்றும் சம்பள உயர்வு என்பவற்றை நீக்க வேண்டும். இந்த நாட்டின் பொருளாதாரம் 03 வருடங்களாக மூலதனச் செலவின்றி வீழ்ச்சியடைந்தது.

எனவே இதற்காக வரிகளை அதிகரிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியது. வரிகளை உயர்த்தினால், பிரபலம் குறையும். பொருளாதாரத்தை காப்பாற்றினால், நமது வங்குரோத்து நிலை மறைந்துவிடும். பல வரிகளை உயர்த்தியிருக்கலாம். எரிபொருள் வரியை உயர்த்தினால், அது மற்ற அனைத்து துறைகளையும் பாதிக்கும். எரிபொருள் வரி மின் கட்டணத்துடன் சேர்க்கப்பட்டு பெரிய தொகையாக கட்டணம் உயரும் என்றார்.

## தனிநாட்டு கோரிக்கை என்பது...

தேசக் கோரிக்கை என்பது வீணாக காலத்தை கடத்துவதற்காக சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் முன்னெடுக்கப்படும் செயற்பாடாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தமிழர்கள் மற்றும் மனித உரிமைகள் நிலை தொடர்பாக, பிரிட்டன் பாராளுமன்றத்தின் வெஸ்மினிஸ்டர் மண்டபத்தில் கடந்த (05) தமிழருக்கான பிரிட்டனின் அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் தலைவரான எலியட் கொல்பேர்னினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான விவாதம் நடத்தப்பட்டுள்ளது.

விவாதம் நடத்தப்படுவதற்கு முன்னதாக இலங்கையின் பிரிட்டனுக்கான உயர்ஸ்தானிகரகம் இந்த விவாதத்தில் பங்கேற்கவுள்ள பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தல் கடிதமொன்றை இரகசியமாக அனுப்பி வைத்திருந்தது. இந்நிலையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு குறித்த விவாதம் சம்பந்தமாக விசேட அறிக்கையொன்றை கோரியிருந்தது.

இதுபற்றி வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இவ் விடயம் சம்பந்தமாக பிரத்தியேகமாக கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரிட்டன் பாராளுமன்றத்தின் வெஸ்மினிஸ்டர் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழர்கள், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை மையப்படுத்திய விவாதம் சம்பந்தமாக அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், உள்நாட்டு நிலைமைகள் குறித்து விவாதத்தில் பங்கேற்ற பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, உரிய தெளிவின்றி கருத்துக்கள் பகிரப்பட்டுள்ளமை உறுதியாகின்றது.

அவ்விதமான வெளிப்படுத்தல்கள் பற்றி ஆராய்கின்றபோது, பிரிட்டன் அரசியல்வாதிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொகுதிகளில் தமது வாக்கு வங்கியை பாதுகாத்துக் கொள்வதற்காகவே செயற்பட்டுள்ளனர்.

ஆகவே, இவ் வெஸ்மினிஸ்டர் மண்டப விவாதம், வாக்கு வங்கி அரசியலுக்கானது என்பது மிகத் தெளிவான விடயமாகின்றது. அந்த வகையில் அவ்விடயம் சம்பந்தமாக நாம் பெரிதாக கரிசனைகளை கொள்ளவில்லை.

இருப்பினும், தவறான தரவுகள் மற்றும் தகவல்களுடன் புரிதலின்றிய வெளிப்படுத்தல்கள் சம்பந்தமாக நாம் கவலை அடைகின்றோம். அதுமட்டுமன்றி சில முக்கிய விடயங்களையும் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

விசேடமாக, தற்போது இலங்கையின் உள்நாட்டில் வாழ்கின்ற அனைத்து சமூகங்களும் ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினை உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் தீர்வினை எட்டுவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளார்கள். அதற்காக அவர்கள் கடந்த தேர்தல்களில் ஆணையும் வழங்கியுள்ளனர்.

அவ்வாறான நிலையில், தனிநாட்டுக் கோரிக்கை அல்லது தாயக தேசக் கோரிக்கையானது, வெறுமனே ஒருசில தமிழ் புலம்பெயர் அமைப்புக்களின் தேவைகளுக்காக காலத்தைக் கடத்தும் செயற்பாடாகவே அமையவுள்ளது.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும்...

தெரிவித்துள்ளன. இதையடுத்து இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் விண்ணப்பித்துள்ளதாக தெரிய வருகிறது.

தலைமைப் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் ஜனவரி 21 வரையில் அவற்றை மீளப்பெற கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் எந்தக்காரணங்களுக்காகவும் விண்ணப்பங் களை மீளப்பெறப்போவதில்லை என, இம்மூவரும் அறிவித்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் கடந்த கால வரலாற்றில் போட்டியின்றியே தலைமைக்கான தெரிவு இடம்பெற்றது. இம்முறையே மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

இதனால், கட்சிக்குள் பிளவுகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

மூன்று வேட்பாளர்களையும் அழைத்துப் பேசி இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஏகமனதான தலைமையை தெரிவு செய்வதற்கான முயற்சிகளும் இடம்பெறுகின்றன.

## பாதாள கோஷ்டி, போதைபொருள்...

நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இடமளிக்கப் போவதில்லையென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், முழு நாடும் ஒரு எரிமலைக்கு மேல் உள்ளது போன்ற நிலையில் உள்ளது.இச்சந்தர்ப்பத்தில் இதற்கு முன்னர் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு நான் இந்த அமைச்சு பொறுப்பை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

அன்றாடம் நாட்டில் ஆங்காங்கே இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், கிராமங்களிலும் வீதிகளிலும் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக எந்தவொரு உல்லாசப்பிரயாணியும் நாட்டுக்கு வரவில்லை.

வர்த்தக நடவடிக்கைகள் முழுமையாக தடைப்பட்டன. பெரும்பாலான நிறுவனங்களை நீண்டகாலமாக மூடுவதற்கு அது வழிவகுத்தது. அதனால், பெரும்பாலான ஊழியர்களுக்கு சம்பளமும் கிடைக்கவில்லை. அவ்வாறான நிலையில் இருந்த நாட்டை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வரவேண்டிய சவால் எமக்கு வழங்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பத்திலேயே நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டது. தற்போதைய ஜனாதிபதியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போது, அந்த நிலைமையை கட்டுப்படுத்துவது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டது.

இதற்கான எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ளுமாறு அவர் பணிப்புரை விடுத்தார்.

## கடன்களை மீளச் செலுத்தும்...

கிளப் நாடுகள் என்பன இலங்கைக்கு கடன் சலுகை வழங்குவதற்கு இணங்கியுள்ளன.

எனவே, கடன் மறுசீரமைப்பினூடாக அடுத்த 10 ஆண்டுகளுக்கு 10 பில்லியன் டொலர்களுக் கும் மேற்பட்ட கடன் சலுகை எமக்கு கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

இதேவேளை, நாம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயற்திட்டத்துக்கு உண்மையாக இருந்தால் மாத்திரமே, எதிர்வரும் காலங்களில் எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இப்போது எமக்கு சலுகை அளிக்கும் நாடுகள் தொடர்ந்து சலுகை வழங்கும்.

மாறாக, நாம் இத்திட்டத்திலிருந்து விலகுவதாக இருந்தால், வருடாந்தம் 06 பில்லியன் டொலர் கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கான இயலுமை எமக்கு இருக்க வேண்டும். இதனை பொதுமக்கள் புரிந்துகொள்வதும், அதற்கேற்றவாறு செயற்படுவதும் அவசியமாகும்."எனவும் அவர் கூறியுள்ளார்.

## "வற்" வரி அமுலாக முன்னர்...

அதற்கிணங்க அவ்வாறான வர்த்தக நிலையங்களை முற்றுகையிடும் வகையில், சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

வற் வரி என்ற போர்வையில் இந்த நியாயமற்ற விலை அதிகரிப்பை வர்த்தகர்கள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள அந்த அதிகார சபை, வற் வரியானது ஜனவரி மாதம் முதலாம் திகதி முதலே நடைமுறைக்கு வருவதாகவும் தெரிவித்துள்ளது. அதன்படி ஏற்கனவே 15 வீத வரி விதிப்புக்கு உட்பட்டுள்ள பொருட்களுக்கு 3 வீத வரி அதிகரிப்பும் முன்பு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்த சில பொருட்களுக்கு புதிதாக 18 வீத வரியும் விதிக்கப்பட வுள்ளது.

அந்த வகையில், பொருட்களை அதிகரித்த விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் 1977 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

## 880 குடும்பங்களை சேர்ந்த...

தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும், நீர் மட்டங்கள் உயர்வதால் குளங்கள் உடையும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இது குறித்து மக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை நேற்று முன்தினம் மாலை 04 மணி வரையான தகவலின்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு,பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், 283 குடும்பங்களை சேர்ந்த 942 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன்,கூழாமுறிப்பு ,கனகரத்தினபுரம் ,காதலியர்சமனங்குளம் ,தண்டுவான், ஒட்டுசுட்டான் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 166 குடும்பங்களை சேர்ந்த 556 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை , தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 44 குடும்பங்களை சேர்ந்த 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம்,உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 104 குடும்பங்களை சேர்ந்த 323 பேர் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம்,மாணிக்கபுரம்,உடையார்கட்டு வடக்கு,உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 283 குடும்பங்களை சேர்ந்த 730 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையிலே மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 880 குடும்பங்களை சேர்ந்த 2687 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும் புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும் பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில் 63 குடும்பங்களை சேர்ந்த 201 பேருமாக 73 குடும்பங்களை சேர்ந்த 243 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலாளர் உதவி பிரதேச செயலாளர் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஊழியர்கள் கிராம அலுவலர்கள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றனர்.

# அரபு மொழியை மேம்படுத்துவதிலும் பரவலாக்குவதிலும் அளப்பரிய பங்களிப்புக்களை நல்கும் சவூதி அரேபியா

ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச அரபு மொழி தினத்தின் 50வது ஆண்டு தினம் இன்று 18 ஆம் (டிசம்பர்) திகதியாகும். இத்தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்ற போதிலும் சவூதி அரேபியா அதனை வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறது. அந்த வகையில் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியின் ஏற்பாட்டில் விஷேட வைபவமொன்று கொழும்பிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சவூதி மன்னரும் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் ஆகியோரின் விஷேட ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் இலங்கைக்கான தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியின் ஏற்பாட்டில் இவ்வைபவம்



## அஷ்ஷைக் எம்.எச். ஷேஹுத்தீன் மதனி

பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு.

இன்று கொழும்பில் நடாத்தப்படுகின்றன. இந்நாட்டின் அண்மைக் கால வரலாற்றில் சர்வதேச அரபு மொழி தின வைபவமொன்று இங்கு நடாத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். இப்பெருமை சவூதி அரேபியாவையே சாரும்.

அதேநேரம், குர்ஆன் மனனப் போட்டிகளை வருடாவருடம் உலகளாவிய மட்டத்திலும் பிராந்திய மற்றும் நட்பு நாடுகள் மட்டத்திலும் நடாத்தி பெறுமதி மிக்க பரிசில்களை சவூதி வழங்கி வருகின்றது. அந்த வகையில் இலங்கையிலும் தேசிய மட்ட குர்ஆன் மனனப் போட்டியொன்று கடந்த ஜூலை மாதத்தில் தூதுவர் காலித் ஹமூத் கஹ்தானியின் ஏற்பாட்டில் முதற்தடவையாக நடாத்தப்பட்டமை தெரிந்ததே.

சவூதி அரேபியாவின் மிக நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கையில் இன்று இந்த சர்வதேச அரபு மொழி தினத்தின் விஷேட வைபவம் சவூதியின் ஏற்பாட்டில் நடாத்தப்படுகிறது. கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த சர்வதேச அரபு மொழி தின வைபவத்தில் அமைச்சர்கள், முஸ்லிம், முஸ்லிம் அல்லாத நாடுகளின் இராஜதந்திரிகள், புத்திஜீவிகள், உலமாக்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர். இவ்வைபவத்தையொட்டி அரபு மொழியின் முக்கியத்துவத்தை இலங்கை மக்களுக்கு எடுத்தியம்பும் வகையில் தூதுவரின் விஷேட உரை இடம்பெற உள்ளதோடு அரபு எழுத்தணிக் கண்காட்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அல் குர்ஆனின் மூல மொழி அரபாகும்

இவை இவ்வாறிருக்க, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவை தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய போது, அரபு எழுத்தணியை இந்நாட்டு பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பாடமாக அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமான அல் குர்ஆன் இறக்கியருளப்பட்ட மொழி அரபாகும். அல்லாஹ் பேசுகின்ற மொழியும் இறுதி இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பேசுகின்ற மொழியும் பல நபிமார்களும் பேசிய மொழியும் அரபு மொழி தான். அல் குர்ஆன் இறக்கியருளப்பட்ட மொழியும் இறைத்தூதர் புனித மக்கா மதீனா இரண்டிலும் புனித தீனுல் இஸ்லாத்தைப் போதித்த மொழியும் அரபி மொழி என்பதால் இப்புனித அல்குர்ஆன் மற்றும் நபிமொழிக் கிரந்தங்கள் அனைத்தும் அரபு மொழியில் நூல் வடிவத்தில் தொகுக்கப்பட்டு இன்று வரையும் இன்ஷா அல்லாஹ் மறுமை நாள் வரையும் பாதுகாக்கப்படும்.



மறுமையில் அல்லாஹ் தன் அடியார்களுடன் அவனது உயர்ந்த தகுதிக்கேற்ப தான் விரும்பிய மொழியில் பேசுபவனாக இருந்தாலும் அரபு மொழியில் தன் அடியார்களுடன் பேசுவான் என்ற கருத்துக்களும் இருக்கிறது. ஐவேளை தொழுகைக்காக சொல்லப்படும் அதான் (பாங்கு) உட்பட முஸ்லிம்கள் தினமும் தொழுகின்ற ஐவேளைத் தொழுகையும் இன்னும் பல வணக்க வழிபாடுகளும் அரபியில் தான் அமைய வேண்டும். அப்போது தான் அவர்களது வணக்க வழிபாடுகள் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்படும்.

அந்த வகையில் அரபு மொழி என்பது இம்மையிலும் மறுமையிலும் மிக முக்கியத்துவம் பெற்று விளங்கும் மொழியாக உள்ளது.

புனித மக்கா, மதீனா உட்பட சவூதி அரேபியாவிலும் ஏனைய நாடுகளிலும் குறிப்பாக பல அரபு நாடுகளிலும் இம்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் உலகின் பல நாடுகளிலும் அரபு மொழியைக் கற்றுக்கொடுக்கவென கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் நடாத்திவரும் சவூதி அரேபியா, அரபு மொழி கற்கை நிலையங்களையும் அமைத்துள்ளது. குறிப்பாக அரபு மொழிக்கான மன்னர் சல்மான் சர்வதேச அகடமி சவூதி அரேபியாவில் ஸ்தாபித்துள்ளது. 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சவூதி அரேபிய அமைச்சரவையின் ஏகோபித்த முடிவின் படி, பிராந்திய மற்றும் உலகளவில் அரபு மொழியின் பங்கை மேம்படுத்துவதற்கு பங்களிக்கும் வகையில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த அகடமி ரியாத் நகரைத் தலைமையகமாகக் கொண்டுள்ளது.

அரபு மொழிக்கான மன்னர் சல்மான் சர்வதேச அகடமி, சவூதி அரேபியாவில் செயல்படுத்தப்படும் சிறந்த கலாசார முயற்சிகளுக்குள் அரபு மொழி மற்றும் இஸ்லாமிய கலாசாரம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் அதன் தாக்கத்தைச் செலுத்துவதற்காக மன்னரால் ஆரம்பிக்கப்பட்டதாகும். உலகளவில் அரபு மொழிக்கான பங்களிப்பை மேம்படுத்துவதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

இதேவேளை இலங்கை உட்பட உலகின் பல நாடுகளையும் சேர்ந்த மாணவர்கள் சவூதி அரேபியாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை மேற்கொள்ளவென சவுதி வருடா வருடம் புலமைப்பரிசில் வழங்கி வருகின்றது. அவ்வாறு புலமைப்பரிசில் பெற்று சவூதி பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடரும் மாணவர்கள் தங்கள் கற்கைக்கு மேலதிகமாக அரபு மொழியைச் சரளமாக பேசவும் எழுதவும் வசதியளிக்கும் வகையில் முற்றிலும் இலவசமாக இரண்டு வருட காலம் அரபு மொழி கற்பிக்கப்படுவதோடு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதன் நிமித்தம் சவூதி அரேபியாவிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் அரபு மொழி பீடம் விஷேடமாக அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் சவூதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்பின் நிமித்தம் செல்லும் வெளிநாட்டவர்களுக்கு அங்குள்ள இஸ்லாமிய கலாசார மற்றும் வழிகாட்டல்கள் நிலையங்களில் அரபு மொழி கற்பிக்கப்படுவதோடு இஸ்லாமிய வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. அல் குர்ஆன் அரபு மொழியில் இருப்பதால் இலங்கை உட்பட உலகளாவிய ரீதியில் அனைத்து முஸ்லிம் சிறுவர்களும் சிறுவயதிலிருந்தே அரபு மொழியில் அல் குர்ஆனை நன்கு சரளமாக ஓதப் பழக்கப்படுத்தப்படுகின்றனர். அதன் ஊடாக அல்குர்ஆனை உலகில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் சரளமாக ஓதக் கூடியவர்களாக உள்ளனர். இது மாபெரும் அருளாகும்.

## இலங்கை கல்வித்திட்டத்தில் அங்கீகரிப்பட்ட மொழி அரபு


அத்தோடு இலங்கையிலுள்ள அரபிக் கல்லூரிகளிலும் அரபு மொழி கற்பிக்கப்படுகிறது. இலங்கை அரசாங்கமும் பாடசாலைக் கல்வித்திட்டத்தின் கீழ் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தர வகுப்புக்களுக்கும் பல்கலைக்கழக கற்கைக்கும் அரபு மொழியை ஒரு முக்கிய பாடமாக அங்கீகரித்து நடைமுறைப்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகில் மிகவும் பரவலாகப் பேசப்படும் மொழிகளில் அரபு மொழி நான்காவது இடத்தில் உள்ளது, அரேபிய நாடுகள் உட்பட சுமார் 66 நாடுகளில் இம்மொழி பேசப்படுகிறது. அதனால் 1973இல் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக அரபு விளங்குகிறது. இவ்வாறான பின்புலத்தில் அரபு மொழியைக் பாதுகாப்பதற்கு சவுதி அரேபியா அதி முக்கியத்துவம் அளித்திருக்கிறது. அதன் அரசியலமைப்பின் முதல் ஷரத்தாக அதனை உள்ளடக்கியுள்ளதோடு அரபை உத்தியோகபூர்வ மொழியாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. அந்த வகையில் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் ஒரு தடவை, 'எமது நாடு சவூதி அரேபியா. அது ஒரு உண்மையான அரபு நாடு. அரபு மொழியை அதன் அனைத்து துறைகளுக்கும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது. இதற்காக பல கல்லூரிகள், துறைகள், நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்கள் சவூதி அரேபியாவுக்குள்ளேயும் வெளியேயும் நிறுவப்பட்டுள்ளன. அரபு மொழியைக் கற்றல், கற்பித்தல் ஆகியவற்றை சவூதி அரேபியா என்றும் ஆதரித்து ஊக்குவிக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அரபு நாடுகள் அடங்கலாக ஏனைய நாடுகளிலும் அரபு மொழியின் செயற்றிறனை மேம்படுத்தும் நோக்கில் மறைந்த மன்னர் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ், அரபு மொழி சேவைக்கான சர்வதேச மையமொன்றையும் ஸ்தாபித்துள்ளார்.

மாநாடுகள், கருத்தரங்குகள் மூலம் அரபு மொழிக்கு சேவையாற்றுவதும் அதைக் கற்பிக்கவென புலமையாளர்களை பல நாடுகளுக்கும் அனுப்பி வைப்பதும், அதற்கான ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்குவதும் இதன் பிரதான நோக்கங்களாகும். எனவே அரபு மொழியை வளர்க்கவும் அரபு மொழியிலான அல் குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா தொடர்பான அறிவை பரவலாக்கி மேம்படுத்தவும் சவூதி அரேபியா முன்னெடுக்கின்ற சகல முயற்சிகளும் வேலைத்திட்டங்களும் என்றும் மெச்சிப் பாராட்டத்தக்கவை.

அந்த வகையில் சர்வதேச அரபு மொழி தினத்தின் விஷேட வைபவமொன்றை முதன் முறையாக இந்நாட்டிலும் நடாத்த ஏற்பாடு செய்த மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் இலங்கைக்கான தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி ஆகியோருக்கு இந்நாட்டின் சார்பிலும் மக்கள் சார்பிலும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் இலங்கை அல் ஹிக்மா நிறுவனம் தெரிவித்துக் கொள்கிறது.


## மரண அறிவித்தல்



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தோப்பூர் பத்திரிகை மற்றும் விளம்பர முகவரின் அன்புக் கணவர் **அபூபக்கர் மூசீன்** 13.12.2023 அன்று காலமானார். அன்னாரின் ஜனாஸா அன்னாரின் அல்லை நகர் - தோப்பூர் இல்லத்தில் 14.12.2023 வியாழக்கிழமை வைக்கப்பட்டு மாலை தோப்பூர் முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**விற்பனை பிரிவு லேக் ஹவுஸ்**


## யானை தாக்கி விவசாயி பலி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இபலோகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹா இலுப்பள்ளம் புளியங்குளம் பகுதியில் காட்டு யானை தாக்கி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த ஜயவீர முதியன்சலாகே றணசிங்க பண்டார என்ற 75 வயதுடைய விவசாயியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


# சேல் சேல் சேல்

## கையிருப்பை விற்றுத் தீர்த்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| 60' பொலியெஸ்டர் துணி | | | | |
| Printed & Plain | 05 | மீற்றர் | ரூபா | 2,000.00 |
| 60' லேஸ் | 05 | மீற்றர் | ரூபா | 2,000.00 |
| வெள்ளை சேர்ட் பட்டன் | 01 | கி.கி. | ரூபா | 250.00 |
| புளொட்டர் பேப்பர் | 01 | கி.கி. | ரூபா | 1,000.00 |
| பேப்பர் இன்டர்லைனிங் | | | | |
| கறுப்பு வெள்ளை | 01 | யார் | ரூபா | 100.00 |
| Boys Shirt | 01 | துண்டு | ரூபா | 250.00 |

சில்லறை மற்றும் மொத்த விற்பனை அனைத்து வாடிக்கையாளர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

**"விலைக்குறைப்பு சேல்" இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு**

**2023 டிசம்பர் 11ஆம் திகதி முதல்**
**2023 டிசம்பர் 21ஆம் திகதி வரை**

**எமது தொழிற்சாலை:**

**ஜனதா கார்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடெட், இல. 17, விவேகானந்த மேடு, கொழும்பு-13.**







# இக்ராவின் முதல் தசாப்தம்

தெவிட்டாத கடலலை ஓசை ஓயாது ஒலிக்கும் தென் மாகாணத்திலே, நான்கின மக்களும் நட்புறவோடு வாழும் ஹம்பாந்தோட்டை நகரிலே, சிறப்பிடம் பெற்று மிளிரும் ஓர் ஆரம்பப் பிரிவு பாடசாலையாம் ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயம்.

ஹம்பாந்தோட்டை நகரில் அமைந்துள்ள நூற்றாண்டு பழைமை வாய்ந்த ஒரேயொரு தமிழ் மொழி மூல தேசிய பாடசாலையான சாஹிரா தேசிய பாடசாலை, ஆரம்பம் முதல் உயர்தரம் வரையிலான கல்வியை வழங்கி வந்ததோடு கல்வி அமைச்சின் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்திற்கு அமைவாக அதன் ஆரம்பப் பிரிவினை தனியான பாடசாலையாக இயங்கச் செய்வதற்கு அனுமதியினைப் பெறுவதற்காக நடாத்தப்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டத்தில் அனைவரும் ஏகமனதாக வழங்கிய அனுமதிக்கு ஏற்ப, பாடசாலைக்கு பெயரிடுவது தொடர்பான கலந்துரையாடலின் போது பல்வேறு பெயர்கள் முன்வைக்கப்பட்ட போதும் பாடசாலையின் ஆரம்பக் கூட்டத்தில் சட்டத்தரணியும் ஆசிரியருமான எஸ். எம். ரிஷாம் முன்வைத்த 'இக்ரா' என்ற பெயர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, புதிய பாடசாலைக்கு இக்ரா ஆரம்ப வித்தியாலயம் என பெயர் சூட்டப்பட்டு, வலயக் கல்விப் பணிமனை, தென்மாகாணக் கல்வித்திணைக்களம் மற்றும் தென் மாகாண கல்வி அமைச்சுக்கு பாடசாலையினூடாக அறிவிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக, 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08 ஆம் திகதி தென் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் இப்பாடசாலைக்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டதையடுத்து இக்ரா ஆரம்ப வித்தியாலயமாக அங்கீகாரம் பெற்று இயங்க ஆரம்பித்தது. அதன்போது ஹம்பாந்தோட்டை வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றிய இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த எம்.இஸட்.எம். இர்பான் இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக நியமிக்கப்பட்டார்.

அதிபர் எம்.இஸட்.எம். இர்பான், பாடசாலையின் அதிபராக தலைமை பொறுப்பேற்கும்வேளையில், 11 ஆசிரியர்களும் சுமார் 520 மாணவர்களும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலையின் காரணமாக சாஹிரா தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவாக செயற்பட்டுவந்த இப்பாடசாலை, முற்றாக அழிவுற்றிருந்த நிலையில், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (UNICEF) இணை நிறுவனமான UNOPS நிறுவனத்தின் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற சுமார் 5 கோடி ரூபாய் பெறுமதியான கட்டடத்தொகுதியிலேயே இக்ராவின் ஆரம்ப கால கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. இச் சந்தர்ப்பத்தில் UNICEF மற்றும் UNOPS நிறுவனங்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர வேண்டியது இக்ராவின் கடமையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் கோட்ட, வலய, தென் மாகாணக் கல்வித்திணைக்களத்தின் பணிப்பாளர்கள் மற்றும் தென்மாகாணக் கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள் ஆகியோரது வழிகாட்டல்கள், அதிபரின் தலைமைத்துவத்தின் ஆற்றல், கற்பித்தலில் ஆசிரியர்களின் தியாகம், கற்றலில் மாணவர்களின் ஈடுபாடு, பாடசாலை மீதான பெற்றோரின் அக்கறை போன்றவற்றின் விளைவாக ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக தொடர்ந்து வந்த காலங்களில் அரசாங்கத்தின் பல செயற்திட்டங்களுக்காக இப்பாடசாலை தெரிவாக ஆரம்பித்தது. இதன் பயனாக 2014ஆம் ஆண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம்' என்ற செயற்திட்டத்தின் கீழ் விளையாட்டு பூங்கா ஒன்றையும் 2019 ஆம் ஆண்டு 'அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் திட்டத்தின் கீழ் ஆரம்ப கற்றல் வள நிலையமான இருமாடிக் கட்டடம் ஒன்றையும் மாணவர் பயன்பாட்டிற்காக பெற்றுக்கொள்ள முடிந்தது.

மேலும், 2019 ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராக செயற்பட்டு வந்த தற்போதைய எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவினால் பாடசாலை பயன்பாட்டிற்கென பஸ் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டமையானது பாடசாலை வரலாற்றில் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகும். இது மாணவர்களின் பயன்பாட்டிற்கு மட்டுமன்றி, சில சமூகப் பொதுப் பணிகளுக்காகவும் பயன்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்ராவின் வரலாற்றிலே ஒரு திருப்புமுனையாக விசேட கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டமையை குறிப்பிடலாம். சாதாரண மாணவர்களைப் போலவே விசேட தேவையுடைய மாணவர்களும் கல்வியைப் பெற தகுதி உடையவர்கள் என்ற அடிப்படையில், 'விசேட தேவையுடைய மாணவர்களின் சிறந்த எதிர்காலத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளில் அம்மாணவர்களையும் எமது பாடசாலையில் உள்ளீர்ப்பு செய்து, அவர்களுக்கென தனித்துவமான அலகொன்றின் மூலம் பயிற்றப்பட்ட விசேட கல்வி ஆசிரியர்களின் பொறுப்பின் கீழ் விசேட கல்வி அலகு 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. தென்மாகாணத்திலேயே தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் இவ்வாறானதொரு விசேட கல்வி அலகு எமது பாடசாலையில் மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை எமது பாடசாலையை பெருமைப்படுத்தும் இன்னுமொரு அம்சமாகும்.

விசேட கல்வி அலகு எனும் அறப்பணியின் மூலம் சமூகத்தில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களை இனங்கண்டு, அவர்களின் திறமைகளை சமுதாயத்திற்கு வெளிக்கொணர்வதில் இக்ரா பெருமை கொள்கிறது. தற்போது 11 விசேட தேவையுடைய மாணவர்களும் இரண்டு விசேட கல்வி ஆசிரியர்களும் இவ்வலகில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொட்டதெல்லாம் வெற்றி என்றாற் போல, இணைப்பாடவிதான போட்டித்தொடர்களான தமிழ் மொழித் தினம், ஆங்கில மொழித் தினம், இலக்கிய விழா மற்றும் தேசிய மீலாத் விழா போன்ற போட்டிகளில் வருடம் தோறும் தேசிய மட்டம் வரையில் எமது மாணவர்கள் பங்குபற்றி பல சாதனைகளையும் புரிந்து வருகின்றனர். 2017ஆம் ஆண்டு ஆரம்ப விளையாட்டுப் போட்டியில் ஹம்பாந்தோட்டை கோட்டத்தில் ஆண்கள் பிரிவில் தரம் 5 மற்றும் தரம் 3 மாணவர்கள் பங்குபற்றி மூன்றாமிடத்தினை பெற்று விளையாட்டுத்துறையில் சாதனைப் படைத்தனர்.

ஆரம்பப் பிரிவு பாடசாலைகளை மதிப்பிடும் பிரதான தேசிய மதிப்பீட்டு பரீட்சையான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வருடம் தோறும் எமது சிறார்கள் புரியும் சாதனை மாவட்டத்தில் மட்டுமன்றி, தென் மாகாணத்திலேயே எமது பாடசாலையை தனித்துவம்மிக்க தலைசிறந்த ஆரம்பப் பிரிவு பாடசாலையாக பிரதிநிதித்துவப் படுத்தி வருகின்றது. பாடசாலையின் வரலாற்றில் புலமைப் பரிசில் பரீட்சையில் 2020 ஆம் ஆண்டு 195 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலை சிறந்த சாதனையை நிகழ்த்தியதோடு, பாடசாலைக்கு விசேட விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும், 2021ஆம் ஆண்டு மீண்டும் ஒரு முறை விசேட விருதும் 2022ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுக்கமைவாக, ஹம்பாந்தோட்டை கல்வி வலயத்தில் எமது பாடசாலை சிறப்பு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, திறமை காட்டிய நான்கு ஆசிரியைகளும் கௌரவிக்கப்பட்டமையானது இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டிய முக்கிய விடயமுமாகும்.

அத்தோடு, பாடசாலையில் ஒரு தசாப்த காலமாக கல்வி கற்ற பழைய மாணவர்கள் நாட்டின் பல்வேறு முன்னணிப் பாடசாலைகளில் இடைநிலை கல்வியை தொடர்ந்து வருவதோடு, அவர்கள் அப்பாடசாலைகளில் சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய நிலைகளில் கல்விச் செயற்பாடுகளிலும் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்த சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர். குறிப்பாக எமது மாணவர்கள் தேசிய பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை தொடர அனுமதி பெற்று, சர்வதேச பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்விக்கான வாய்ப்பினை பெற்று கல்வி கற்று வருவதானது இக்ராவின் இந்த குறுகிய கால வரலாற்றில் மறுக்க முடியாத சில உண்மைகளாகும்.

'கற்றுயர்வோம்' என்ற பாடசாலையின் மகுடவாசத்திற்கு அமைவாக சிறந்த கல்வி, அறிவொழுக்கம் மாத்திரமன்றி மாணவர்களின் ஆளுமைத் திறன், தலைமைத்துவ பண்புகளை விருத்தி செய்து இரண்டாம் நிலைக் கல்விக்கு அடிப்படையை வழங்கும் நோக்கில் முதன்முதலாக 2022ஆம் ஆண்டு மாணவர் தலைவர் குழாம் ஆரம்பிக்கப்பட்டு, மாணவத் தலைவர்களுக்கு அடிப்படை தலைமைத்துவ பயிற்சிகளை வழங்குவதில் அதிபர் உட்பட ஆசிரியர்கள் பெரும் பங்காற்றி வருகின்றமை விசேடமான அம்சமாகும். இதற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் பாடசாலை இசைவாத்தியக்குழுவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிட வேண்டிய மற்றுமொரு விடயமாகும்.

கல்விச் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள், விளையாட்டு, அழகியல் செயற்பாடுகள் போன்ற துறைகளுக்கு ஆசிரியர்களுடன் இணைந்து ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக இக்ராவிலிருந்து வெளியேறிய மாணவர்களையும் வளங்களாக பயன்படுத்த வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு அதிபரின் தலைமையில் 2022ஆம் ஆண்டு இக்ராவின் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரதிபலனாக பல மாணவர்கள் சுயேட்சையாகவே எமது பாடசாலையினால் முன்னெடுக்கப்படும் பலவிதமான செயற்பாடுகளுக்கு உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி வருகின்றனர்.

எமது பழைய மாணவர்களை எம்முடன் தொடர்ந்து இணைத்துக் கொள்ளும் வகையிலும் தசாப்த விழாவைக் கொண்டாடும் வகையிலும் பழைய மாணவிகளுக்கான வலைப்பந்தாட்ட போட்டித் தொடரும் மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டித் தொடரும் நடத்தப்பட்டதோடு, அதற்கான சிறந்த வரவேற்பும் கிடைக்கப் பெற்றமையானது இக்ரா பெருமிதம் அடைந்த இன்னுமொரு தருணமாகும்.

அதிபரின் தலைமையில் சமூக ஆர்வலர்கள், நன்கொடையாளர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள் போன்றோரின் ஒத்துழைப்புடன் எமது பாடசாலையினால் வருடம் தோறும் நடைமுறைப்படுத்தப்படும் 'உதவிக்கரம் நீட்டுதல்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக எமது பாடசாலையில் கல்வி பயிலும் மற்றும் கல்வியை தொடர்வதில் இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கின்ற மாணவர்களுக்கு அத்தியாவசிய பாடசாலை கற்றல் உபகரணங்கள் உட்பட ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படுவதோடு, வருமானம் குறைந்த மற்றும் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத குடும்பங்களுக்கு இயலுமான அளவு உதவிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை நாம் பெற்ற பாக்கியமாகும். 2019ஆம் ஆண்டு தென் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 'பாடசாலை சுற்றாடல் வேலைத்திட்டம்' எனும் போட்டியில் குறுகிய நிலப்பரப்பை உடைய பாடசாலைகள் எனும் பிரிவில் எமது பாடசாலையும் பங்குபற்றி கோட்ட, வலய மட்டங்களில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்தில் வெள்ளிப் பதக்கத்துடன் பணப்பரிசில்களையும் பெற்று சாதனை படைத்தது. மேலும் 2020ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையிலான விவசாயப் போட்டியில் கோட்ட, வலய மட்டங்களில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்தில், கொரோனா தொற்றுக்காலப் பகுதியில் சிறந்த சூழல் முகாமைத்துவத்திற்கான திறமைச் சான்றிதழையும் பெற்றது. இதுவே குறித்த போட்டிகளில் உயர்ந்த பட்சவிருதுகளுமாகும். மேற்படி இரண்டு சுற்றாடல் சார்ந்த போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டிய ஒரேயொரு தமிழ் மொழி மூல பாடசாலை இக்ரா என்பது இங்கு அடிக்கோடிடப்பட்டு கூறப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வெற்றியில் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பெற்றோர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் அளப்பரியது.

தற்போது எமது பாடசாலையானது அதிபரின் தலைமையிலான திறமையான ஆசிரியர் குழாம், போதிய அளவு கட்டடத் தொகுதிகள், போதிய அளவு பௌதீக வளங்களுடன் கூடிய மாதிரி வகுப்பறைகள், விசேட கல்வி அலகு, தொழில்நுட்ப செயற்பாட்டறை, ஆங்கில செயற்பாட்டறை, சிறுவர் விளையாட்டு பூங்கா, விளையாட்டு மைதானம், பிள்ளை நேய கவர்ச்சிகரமான கற்றல் சூழல் என அனைத்திலும் சிறந்து விளங்குவதோடு, தென் மாகாணத்தில் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளில் முன்னோடிப் பாடசாலையாக முன்னணியில் திகழ்கின்றது.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி கண்ட எமது சிறார்களின் கலையகம் தன்னலம் பாராது தியாக உணர்வுடன் பணியாற்றும் அதிபர், கடமை பொறுப்பிலிருந்து தவறாத ஆசிரியர்கள், பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் கண்ணாயிருக்கும் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி நிர்வாக குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரினது நல்வாழ்த்துக்களுடனும் பிரார்த்தனைகளுடனும் தனது முதலாவது தசாப்தத்தை நிறைவு செய்து இரண்டாவது தசாப்தத்தில் தடம் பதிக்கின்றது.

இவ்வாறு 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல சாதனைகளை புரிந்து 2022 ஆம் ஆண்டின் நிறைவுடன் தனது தசாப்த விழாவை கொண்டாடுவதில் இக்ரா பெருமை அடைகின்றது. இன்று போலவே என்றும் இப்பாடசாலையிலிருந்து ஏராளமான சமநிலை ஆளுமையுள்ள சிறந்த பிரஜைகள், கல்விமான்கள், விளையாட்டு வீரர்கள், தொழில் வாண்மையாளர்கள் போன்றோர்களை உருவாக்குவதற்கு அவசியமான அடிப்படை கல்வியை புகட்டுவதில் இக்ராஅயராது உழைத்து வருகின்றது. அறிவொழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதே இக்ராவின் நோக்கமாகும். அதற்காக நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் முயற்சிப்போம், முன்னேறுவோம், பிரார்த்திப்போம். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்ராவின் தசாப்த நிகழ்வில் இக்ராவின் புகழ் எத்திக்கும் ஓங்கிப் பரவ வாழ்த்துக்கள்.

**வாழ்க இக்ரா !**
**வளர்க இக்ராவின் பணி !!**


பாடசாலையின் அதிபர் எம்.இஸட்.எம். இர்பான்


பாடசாலையின் முகப்புத் தோற்றம்




பாடசாலையின் பேண்ட் வாத்தியகுழு


பாடசாலையின் ஆசிரியர் குழாம்


எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவினால் பாடசாலைக்கு பஸ் வண்டி அன்பளிப்பு


பாடசாலை அபிவிருத்தி சங்கம்

தகவல்களும் படங்களும் :
எம். இர்பான் சகரியா
(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

# நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பலமான சக்தி புலம்பெயர் சமூகம்

முன்பெல்லாம் வெளிநாட்டிற்கு தொழிலாளர்களை அனுப்புவதென்றால் வீட்டுப் பணிப் பெண்களையோ அல்லது பயிற்சியற்ற பணியாளர்களையோ வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவே சமூக கருத்து இருந்து வந்தது. தற்போது அந்த நிலைமை திறமையான மற்றும் தொழில்முறை துறைகளுக்கு படிப்படியாக மாறியுள்ளது.

கடந்த சில வருடங்களைக் கணக்கில் கொண்டால், இலங்கையர்கள் அதிக வெளிநாட்டு தொழில்களை தேடும் போக்கைக் காட்டுகின்றனர். 2021 இல், 122,887

**வெளிநாட்டு வேலைக்காகப் புறப்படுவதற்காக பணியகத்தில் பதிவு செய்யும் நபர்களிடமிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் சம்பாதிக்கப்படும் பணம் சட்டபூர்வமான வழிகள் மூலம் இலங்கைக்கு அனுப்பப்படும் என்று உறுதிமொழிகளைப் பெறுதல்.**

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக விரிவான பிரச்சாரப் பொறிமுறையொன்று வெளிநாடுகளில் முன்னெடுக்கப்பட்டமை.

**பயிற்சி வழங்கும் திட்டம்**

வெளிநாட்டில் வேலை தேடும் ஒவ்வொரு நபருக்கும் திறமையான தொழிலாளியாக வெளிநாடு செல்வதற்கு பொருத்தமான தேசிய தொழில் தகைமை (NVQ) நிலைகள், மொழிப் பயிற்சி, வாழ்க்கைத் திறன்களை வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் பாடநெறிகளை நடாத்துவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தனியார் துறையுடன் கைகோர்த்து நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வெளிநாட்டில் தொழில் தேடுபவர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:



ளுக்கு இலங்கை பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கைகள் பணியகம் மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படுகிறது. ஜப்பானுடன் இலங்கையும் புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்புக்கான உடன்படிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், அவை தனியார் துறையினருக்கும் திறக்கப்பட்டுள்ளன.

**கொரியாவுக்குதொழில்பெற்றுச்சென்றோர் விபரம் பின்வருமாறு:**

| துறை | தொழில்ஒப்பந்ததொகை | வெளிநாடுசென்றோர்தொகை |
|---|---|---|
| உற்பத்தி | 4,179 | 4,465 |
| நிர்மாணத்துறை | 133 | 147 |
| மீன்பிடி | 634 | 802 |
| கப்பற்துறை | 182 | 0 |
| மொத்தம் | 5,128 | 5,414 |

2023.01.01 முதல் 2023.10.31 வரைஇஸ்ரேலுக்குதொழிலுக்காக 609 பேரை அனுப்ப ஒப்பந்தம் செய்யப்பட்டதோடு



எண்ணிக்கையில் 4.5% ஆகும். இந்த காலப் பகுதியில் 8,123 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணம்

2023 ஜனவரி முதல் ஒக்டோபர் 31, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின்

மீண்டும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதோடு இதற்காக 1.60 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

உலக தொழிலாளர் அமைப்பு மற்றும் பாதுகாப்பான தொழிலாளர் புலம்பெயர்வு தொடர்பான தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் (National Project Coordinator, Safe Labour Migration) உடன் வெளிநாட்டு தொழிலாளர்க





பணியாளர்களும் 2022 இல் 311,056 பணியாளர்களும் கடந்த 31.10.2023 ஆம் திகதி வரை, 249,429 பணியாளர்களும் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புப் பெற்றுச் சென்றதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தரவுகள் கூறுகின்றன.

அக்டோபர் 31, 2023 வரையிலான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பணியகத்தில் பதிவு செய்தோர் விபரம் பின்வருமாறு:

**ஆண் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை 139,864**

**பெண் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை 109,565**

**பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் 69.6%**

**குறைந்த திறன் கொண்ட தொழிலாளர்கள் 30.4%**

அதன்படி, பாரம்பரியமாக இருந்துவந்த பெண் பணியாளர்கள் வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் போக்கு குறைந்து, பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பெரும்பாலும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குச் சென்றிருப்பது இதன் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

| பயிற்சித்திட்டம் | நடத்தப்பட்டபயிற்சிகளின்தொகை(2023.01.01 – 2023.10.31) | பங்கேற்றோர் (2023.01.01 – 2023.10.31) |
|---|---|---|
| வீட்டு பராமரிப்பு உதவியாளர் பயிற்சி - மத்திய கிழக்கு | 256 | 6,308 |
| வீட்டு பராமரிப்பு உதவியாளர் – கிழக்கு ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு | 36 | 887 |
| பராமரிப்பு சேவை | 60 | 2,092 |
| அனுபவம் வாய்ந்த வீட்டு வீட்டு பராமரிப்புஉதவியாளர்களுக்கான பயிற்சி | 39 | 592 |
| வீடுகள் அல்லாத வேலைக்கு செல்லும் பணியாளர்களுக்கு பயிற்சி | 1,674 | 46,964 |
| புலம்பெயர்வதற்குரிய பயிற்சி - தென் கொரியா | 54 | 2,071 |
| புலம்பெயர்வுக்குரிய பயிற்சிஜப்பானிய தொழில்நுட்ப சேவை பயிற்சி | 15 | 115 |
| விசேடதொழில்பயிற்சி(ஆங்கிலம்) | 22 | 715 |
| விசேடதொழில்பயிற்சி (ஜப்பான்) | 25 | 552 |

வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளில் ஈடுபடும் இலங்கைப் பணியாளர்கள் நாட்டிற்கு அனுப்பும் பணம் நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்கிறது. கொவிட்19 உலகளாவிய தொற்றுநோய்க்கு முன், மாதாந்தம் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பண அனுப்புகை 500 முதல் 700 மில்லியன் டொலர் வரை காணப்பட்டது. கொவிட்19 உலகளாவிய தொற்றுநோய் நிலைமைக்குப் பிறகு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாடு பெற்ற மொத்த பண அனுப்புகை முறையே 5,491.4 மில்லியன் மற்றும் 3,789.4 மில்லியன் டொலர்களாகும். ஆனால் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்குள், இலங்கையில் பெறப்பட்ட தொகை 4,862.5 மில்லியன் அதாவது 4.863 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது 2022 ஆம் ஆண்டை விட 66% முன்னேற்றத்தை காட்டுகிறது.

பணம் அனுப்பும் தொகையை அதிகரிப்பதற்கு பின்வரும் சாதகமான முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

**வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் சம்பாதித்த வருமானத்தை சட்டபூர்வமான வழிகள் மூலம் இலங்கைக்கு அனுப்புவதை ஊக்குவிப்பதற்காக முழு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு தொழிலாளிக்கு 60 வயதுக்குப் பின்னர் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையுடன் இணைந்து 'மனுசவி' பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட பயிற்சித் திட்டங்களில் சில பயிற்சித் திட்டங்கள் தமிழ் மொழியிலும் நடாத்தப்படுவதுடன், அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, பதுளை, இரத்தினபுரி மற்றும் பன்னிபிட்டிய ஆகிய பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகப் பயிற்சி நிலையங்களில் பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கான வசதிகள் வழங்கப்பட்டன.

| பயிற்சித்திட்டம் | நடத்தப்பட்டபயிற்சித்திட்டம் (2023.01.01 – 2023.10.31) | நபர்களின்தொகை (2023.01.01 – 2023.10.31) |
|---|---|---|
| வீடு அல்லாத தொழில்களுக்கு செல்லும் பணியாளர்களுக்கான பயிற்சி | 351 | 7,056 |
| வீடுகளில்பணிபுரிவதற்கான வீட்டு பராமரிப்பு உதவியாளர் பயிற்சி | 39 | 756 |

ஜப்பானில் உள்ள வேலை வாய்ப்புகளுக்கு இலங்கையர்களுக்கு வழிகாட்டுவதற்காக பணியகத்தின் 13 பயிற்சி நிலையங்களில் ஜப்பானிய மொழி கற்பித்தல் நடத்தப்படுகிறது. மேலும், ஜப்பானிய மொழியைக் கற்பிப்பதற்காக 14 அரச மற்றும் தனியார் ஜப்பானிய மொழி நிறுவனங்கள் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தென் கொரியா மற்றும் இஸ்ரேலுடன் இலங்கை இராஜதந்திர ரீதியாக செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, தென் கொரியா மற்றும் இஸ்ரேலில் வெளிநாட்டு வேலைக

இதுவரை 384 பேர் அங்கு சென்றுள்ளனர். ஜப்பானுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரமும் பணியாளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

ஜனவரி 2023 முதல் அக்டோபர் 31, 2023 வரை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் நடத்தப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வங்கியில் 26,610 தொழில் தேடுபவர்கள் பதிவு செய்துள்ளனர். மேலும் 6,448 பேர் வெளிநாட்டு தொழில்களுக்குச் சென்றுள்ளனர்.

ஜனவரி முதல் ஒக்டோபர் 31, 2023 வரை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 124 வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களுக்கு புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளது. அக்டோபர் 31, 2023 வரை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் 1,002 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக ஆட்களை அனுப்புவது தொடர்பான விசாரணை

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் அல்லது பதிவு செய்யப்பட்ட அனுமதி இல்லாத நபர்களால் சட்டவிரோத ஆட்சேர்ப்பு தொடர்பான விசாரணைகள் மற்றும் சோதனைகளை நடத்துகிறது.

அதன்படி, ஜனவரி முதல் அக்டோபர் 31, 2023 வரை 11 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதன்போது சட்டவிரோத ஆட்சேர்ப்பு தொடர்பில் 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவிரோத ஆட்சேர்ப்பு தொடர்பில் 22 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், விசேட புலனாய்வுப் பிரிவிற்கு 2,958 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 1,110 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதுடன், முறைப்பாடு செய்தவர்களுக்கு வேலைவாய்ப்பு நிறுவனங்களால் 80.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுகுறிப்பிடத்தக்கது. ஜனவரி முதல் ஒக்டோபர் 31, 2023 வரை, 11,257 வெளிநாட்டில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து முறைப்பாடுகள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்குப் பெறப்பட்டுள்ளன. இது 2023 ஜனவரி முதல் ஒக்டோபர் 31 வரையிலான வெளிநாட்டு வேலைகளுக்கான பதிவுகளின்

1,158 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது. இவர்களில் 863 பேர் தற்போது வெளிநாட்டில் பணி புரியும் தொழிலாளர்களின் மகள்கள் மற்றும் மகன்கள் ஆவர். எஞ்சிய 295 பேர் வெளிநாட்டில் தொழில் புரிந்த பின்னர் இலங்கைக்கு வந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளாவர்.

## வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கை மக்களை பாராட்டும் தேசிய நிகழ்வு இன்று

2023 ஜனவரி முதல் ஒக்டோபர் 31 வரை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்த 157,995 பேருக்கு காப்புறுதிக் கட்டணமாக 359.21 மில்லியன் ரூபா இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், 646 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ரூ. 101.88 மில்லியன்ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**சுயதொழில்உதவி**

2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், வெளிநாட்டில் பணிபுரிந்து திரும்பிய 51 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சுயதொழிலை ஆரம்பிக்க அல்லது ஏற்கனவே உள்ள சுயதொழிலை மேம்படுத்துவதற்காக 2.521 மில்லியன் ரூபா பெறுமதியான பொருளுதவியை வழங்கியுள்ளது.

24.11.2022 அன்று நடைபெற்ற அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின்படி, பணியகத்தில் பதிவு செய்து, சுற்றுலா விசாவில் வெளிநாடுகளுக்குச் சென்று ஓமான் சுரக்ஷா இல்லத்தில் தங்கியிருந்த 48 கைதிகளில் 39 பேர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் பணியகத்தின் நிதியில் இருந்து

ளின் பாதுகாப்பிற்காக அவசர மீட்பு திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டம் இறுதிக் கட்டத்தில் உள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் Neilson IQ ஆகிவற்றுடன் இணைந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கல் மற்றும் தேவை குறித்து ஆய்வு (Foreign Employment Supply and Demand) செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இஸ்ரேலில் இடம்பெற்று வரும் யுத்தம் காரணமாக அங்குள்ள இலங்கை புலம்பெயர்ந்தோரின் நலனுக்காக 10,000 அமெரிக்க டொலர்கள் இஸ்ரேலிய தூதரகத்திற்கும், லெபனானில் ஏற்பட்டுள்ள அவசர நிலை காரணமாக 5000 அமெரிக்க டொலர் லெபனான் தூதரகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

**ஒன்லைன் கொடுப்பனவு முறைஅறிமுகம்**




இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பணியகம் வழங்கும் சேவைகளை மிகவும் இலகுவாகவும் வினைத்திறனுடனும் செய்வதற்கு மக்கள் வங்கியுடன் இணைந்து ஒன்லைன் முறைமையின் மூலம் பணம் செலுத்துவதற்கு ஒன்லைன் கொடுப்பனவு நுழைவாயிலை (Online Payment Gateway) நடைமுறைப்படுத்துதல்.

இதன் மூலம், பதிவுக் கட்டணம் செலுத்துதல், CESS தொடர்பான கொடுப்பனவுகள், வேலைவாய்ப்பு முகவர் பதிவுக் கட்டணம், தொழிலாளர் பயிற்சி வகுப்புக் கட்டணம், கொரிய ஜப்பானிய இஸ்ரேலிய ஆட்சேர்ப்புக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்தலாம்.

ருமேனியா மற்றும் ஜப்பானில் நிறுவப்பட்டுள்ள இலங்கை தூதரகங்களில் வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி பிரிவுகளை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கொழும்பு றோயல் கல்லூரியின் 68ஆவது வருடாந்த இஸ்லாமிய தினம்

ருஸைக் பாரூக்

கொழும்பு றோயல் கல்லூரி இஸ்லாமியச் சங்கத்தின் 68வது வருடாந்த இஸ்லாமிய தினம் மற்றும் விருது வழங்கும் விழா அண்மையில் நவரங்கஹலவில் இஸ்லாமிய சங்கத்தின் தலைவர் உமைர் ஹரீஸ் தலைமையில் நடைபெற்றது.

சமூகத்திற்கு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த வருடாந்த வெளியீடான "சவூத்துத் துல்லாப்" நினைவுச்சின்னத்தின் 65 வது பதிப்பை சமூகம் அறிமுகப்படுத்தியதால் இந்த ஆண்டு நிகழ்வு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக்கொண்டதாக அமைந்தது.

" சவூத்துத் துல்லாப் " என்ற வார்த்தையானது "மாணவர்களின் குரல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வெளியீடு 1958 இல் தொடங்கப்பட்டதிலிருந்து நீண்டகால பாரம்பரியமாக இருந்து வருகிறது. இஸ்லாமிய தினம், 1955 ஆம் ஆண்டுக்கு முந்தைய பாரம்பரியம், றோயலின் முக்கிய பகுதியாக இருந்து வருகிறது. கல்லூரி இஸ்லாமிய சங்கத்தின் முன்னாள் செயலாளரும் மாணவர் தலைவருமான சினான் ஒனைஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சினான் ஒனைஸ் அவர்கள் இஸ்லாமிய சங்கத்தின் 65வது பதிப்பான "சவூத்துத் துல்லாப்" வெளியீட்டை அதிபர் திலக் மத்துஹேவாவிடமிருந்து பெற்றுக் கொண்டார். இஸ்லாமிய சங்க பொறுப்பாசிரியர் திருமதி அசீமா ஹுசைனும் கலந்து கொண்டார்.



# முதியோரை மதிக்காத சமூகத்தில் தலைவர் உருவாக முடியாது

## 'ஆசிரியர் சேவைக்கால நினைவுத் தொகுப்பு' நூல் வெளியீட்டு விழாவில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை முன்னாள் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி தெரிவிப்பு'

எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கல்லூரியின் பழைய மாணவரும் தெல்தோட்டை விஞ்ஞான செயல் திட்டத்தின் (DSP) தலைவரும் , கண்டி கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகருமான மௌலவி இப்றாஹீம் எம். நிஸாம் எழுதிய 'ஆசிரியர் சேவைக்கால நினைவுத் தொகுப்பு' நூல் வெளியீட்டு விழா எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் எம். ஜீ. நயீமுல்லாஹ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தெல்தோட்டை பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் சமூகப்பணியாளர் கலாநிதி மௌலவி முனீர் சாதிக், கௌரவ அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் மடவளை ஹில்கன்ரி சர்வதேசப் பாடசாலையின் பணிப்பாளர் தேசபந்து சஹீட் எம். ரிஸ்மி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக பஹத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம். எம். எம். சாதீக், கண்டி லைட் ஹவுஸ் உரிமையாளர் ஏ. எம். பௌமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கவி வாழ்த்தினை கவிஞர் ரஷீட் எம். ரியாழும் நூல் வெளியீட்டு உரையினை ஆசிரியர் ஏ. ஆர். எம். முஸம்மிலும் நூலாய்வுரையினை அஷ்ஷெய்க் எம். வை. எம். சிபான் (நளீமி)யும், நன்றியுரையினை ஆசிரியர் எம். ஜே. எம். ஜெஸீமும் நிகழ்ச்சித் தொகுப்பினை யாகூப் இஸ்லாஹியும் நிகழ்த்தினர்.





**இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி உரையாற்றுகையில்;**

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்னும் முதியோர் வாக்கிற்கேற்ப தெய்வீகப் பணிபுரியும் ஆசிரியர் ஒருவரின் அனுபவப் பதிவின் பகிர்வை பரிமாறிக் கொள்ளும் நோக்கமாக கொண்டு அமைந்துள்ள இவ்விழாவில் நானும் கலந்து கொள்வதில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன்.

இஸ்லாமிய வரலாற்றிலும்கூட ஆசிரியர் பணி மிகவும் வலியுறுத்தப்படுகிறது. முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக ஜிப்ரீல் (அலை) மூலமாக இறைவனால் அருளப்பட்ட வேத வெளிப்பாடு 'இக்ராஃ' ஓதுவீராக என்பதாகும் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் முக்கியத்துவம் இதன் மூலம் புலனாகிறது.

இந்நூல் ஆசிரியர் சேவைக் காலத்தின் நினைவுத் தொகுப்பு நூல் என்று சொல்வதை விட ஆசிரியர் சேவைக் கால நலத் தொகுப்பு என்று வந்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும் எனக் கருதுகின்றேன். இங்கு அவ்வாசிரியரைப் பாராட்டுவதற்காக அவர் பற்றிய சேவைகளை மதிப்பீடு செய்வதற்காக பல தரப்பட்ட புத்திஜீவிகளும், கல்விமான்களும் நிறைந்திருக்கின்றனர்.

பேசுவதை விட பேச்சைக் கேட்பது என்பதுதான் கடினம். பேச்சைக் கேட்பதற்கான பயிற்சிகள் அளித்தல் வேண்டும். இது பேச்சாளர் நிறைந்த சபை. எனவே எனது பேச்சை உன்னிப்பாக கேட்பதற்கு உகந்த புத்திஜீவிகள் இம்மண்டபத்தில் அமர்ந்துள்ளார்கள். அந்த வகையில் மிக்க சந்தோசம் அடைகின்றேன்.

இன்றைய தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி வாசிப்பு பழக்கத்தை இல்லாமற் செய்து விட்டது என்று சொல்ல முடியாது. அது வேறு விதமான புதிய வடிவம் பெற்றுள்ளது என்று கூறலாம். சமூக வலையத்தளத்தின் வாயிலாக நிறைய வாசிப்பு பழக்க வழக்கங்கள் ஏற்பட்டுள்ளன. எந்த நூலாக இருந்தாலும் தேடி வாசிக்கின்றளவு இணையத்தளம் பங்களிப்புச் செய்கின்றன.

இந்த தெல்தோட்டைப் பிரதேசத்தில் மூவின மக்களும் கைகோர்த்து வாழ்ந்து வருகின்றனர். நாமும் இலங்கையர் என்ற வகையில் வரலாற்றை மறக்க முடியாது. எமது நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய தேசிய சுதந்திர புருஷர்களை மறந்து விட முடியாது. அறிஞர் சித்திலெப்பை, அநாகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர் ஆகிய மூவரும் ஒரே கால கட்டத்தில் வாழ்ந்தவர்கள். மூன்று பேரும் ஒன்றாகச் சேர்ந்து சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள். இவர்களிடம் குறிப்பாக தேசிய உணர்வும் மனிதத்தை நோக்கிய யதார்த்த பூர்வமான வாழ்க்கை முறையும் சக வாழ்வும் நிறைந்து நிற்பதைக் காணலாம்.

அந்த வகையில் வாசிப்புத் துறையை அறிஞர் சித்திலெப்பை அவர்கள் அக்கால கட்டத்தில முஸ்லிம் நேசன் என்ற பத்திரிகையினை ஆரம்பித்து நீண்ட காலமாக வெளியிட்டுள்ளார். இவருடைய கல்விப் பணி மகத்தானவை. இவர் நாவல் இலக்கியத் துறையில் ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றார். ஈழத்து இலக்கியப் பரப்பில் இவர் எழுதிய 'அசன்பே சரித்திரம்' என்ற நாவலே முதல் நாவலாகும். இவர் சமூகத்திற்குப் பெரும் சேவையாற்றினார். மறுமலர்ச்சியின் தந்தை என்று இவரைக் குறிப்பிடுவார்கள்.

எவ்வாறாயினும் இன்றைய கால கட்டத்தில் முஸ்லிம்கள் ஊடகத் துறையில் பின்னடைந்து உள்ளனர் என்பதை எல்லோரும் கவனத்திற் கொள்ள வேண்டும். அந்த வகையில் இந்த மண் புகழ்மிக்க அருள்வாக்கி அப்துல் காதிர் புரவலர் பிறந்த மண். எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்கள் என நிறைந்துள்ள இடத்தில் ஆசிரியர் இப்றாஹீம் நிஸாம் தடம் பதித்து விட்டார். கல்விக்காக அவர் அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணியை எமது எதிர்கால சந்ததியினர்களின் நல்வாழ்வுக்காக இந்தப் புத்தகத்தை ஆக்கித் தந்துள்ளார்.

காலத்திற்குக் காலம் இந்த ஊரில் ஆசிரியர்கள் வெளியாகி வந்தாலும் எமது எதிர்கால ஆசிரியர் சமூகத்தைப் பற்றி சிந்தித்து அவர்களுக்கு உகந்ததொரு நூலை வெளிக்கொணர்ந்துள்ளமை பாராட்டத்தக்கது. ஆசிரியர் சேவை. கடமை உணர்வு, கற்றல், கற்பித்தல் முறை, உள மனப்பாங்கு. அர்ப்பணிப்பு போன்றவற்றை இந்நூலில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

நூலாசிரியர் இப்றாஹீம் நிஸாமுடைய ஆசிரியர் சேவைக் கால அனுபவங்கள் பற்றி ஒவ்வொரு ஆசிரியர்களும் வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிக்கும் போது ஆசிரியம் என்ற பணியின் மகத்துவத்தை அனைத்துலக ஆசிரிய குழாமும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும். ஆதலால் மாணவர் சமூகத்திற்கு சிறந்த கல்விச் சேவையை வழங்க முடியும் என்றார்.

**பிரதம அதிதி தெல்தோட்டை பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி கலாநிதி முனீர் சாதிக் உரையாற்றுகையில்;**

எனசல்கொள்ள மத்திய கல்லூரியின் மாணவர்கள் பல்வேறுபட்ட புத்தகங்களை எழுதியிருப்பினும் இங்கு கற்ற ஆலிம்கள் மார்க்கம் சம்பந்தமான நூல்களை எழுதியிருப்பினும் தற்போது இப்பாடசாலையின் பழைய மாணவர், ஆசிரியர் மௌலவி நிஸாம் தமது 33 வருடகால ஆசிரியர் சேவை கால அனுபவங்கள் பற்றி நூலொன்றை எழுதியுள்ளதோடு அந்நூலுக்கான வெளியீட்டு விழா அவர் கற்ற பாடசாலையிலேயே நடைபெறுவது இப்பாடசாலை வரலாற்றில் முதல் தடவை என நான் கருதுகின்றேன்.

நிஸாம் மொளலவி மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கம் இந்நூல் வெளியீட்டு வைபவம் தொடர்பாக என்னிடம் கூறிய போது, என்னிடம் இதனை ஆரம்பத்தில் கூறியிருந்தால் நானே வெளியீட்டின் செலவுகளை பொறுப்பேற்றிடுப்பேன். இருந்த போதிலும் அவரிடம் நான் வினயமாக இதன் பின்னர் நூல்கள் எழுதினால் அதனை வெளியிட முன் அல்லாஹ் நாடினால் அதன் வெளியீட்டு பொறுப்பை ஸதகதுல் ஜாரியா எனும் அடிப்படையில் நன்மைகளை அடைந்துகொள்ள தனக்கு வழங்குமாறு வேண்டிக் கொண்டேன்.



இந்நூல் அறிமுகத்தின் போது அஷ்ஷெய்க் சிபான் நளீமி, இந்நூலில் சில மரணித்த ஆசிரியர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். அப்போது நான் எனக்குள் எண்ணினேன். அவ் ஆசிரியர்கள் பாக்கியம் பெற்றோராவர். இறை திருப்திக்காக பணியாற்றியதனாலேயே அவரின் மாணவரினால் நினைவு கூரப்படுகிறார்கள். ஆசிரியர் நிஸாம் அவர்களின் பல சிரமங்கள் தியாகங்கள் நிறைந்த 33வருட கால ஆசிரியர் பணிக்காலத்தில் இவ்வாறான நூலை எழுதி வெளியிட்டமைக்காக அவரை பாராட்டியே ஆக வேண்டும். இவர் இப்புத்தக வெளியீட்டின் மூலம் எங்களை போன்ற உலமாக்களும் இது போன்ற பணிகளை செய்ய வேண்டும் என்பதை காட்டித் தந்துள்ளார். தெல்தோட்டை பிரதேச மஸ்ஜித்கள் நிறுவனங்கள் சம்மேளனத் தலைவர் என்ற முறையிலும் ஓர் உலமா என்ற ரீதியிலும் உலமாக்கள் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்மையிலே நிசாம் ஆசிரியரின் நூலில் இருந்து ஒரு விடயத்தை விளங்கிக் கொண்டேன். எந்தவொரு மனிதனும் ஆசிரியர் தொழிலாக இருக்கலாம் ஏனைய சமூகப் பணிகளாக இருக்கலாம் தனக்கு அல்லாஹ் தந்த சக்தியைக் கொண்டு ஆற்றலைக் கொண்டு தன்னுடைய வேலைகளை சேவைகளை தான் உயிருடன் வாழ்கின்ற காலத்திலே தூய்மையாகச் செய்து விட்டு நாங்கள் மரணித்தால் நிச்சயமாக அந்த சமூகமும் எங்களால் பிரயோசனம் அடையும். அதேவேளையில் நாம் உயிரோடு வாழும் போதும் மரணித்ததன் பின்பும் எங்களுக்காக எங்களுடைய மண்ணறைக்காக எங்களுடைய உறவினர்களுக்காக எங்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களுக்காக பிரார்த்தனை செய்வார்கள் என்று இவற்றை நாம் விளங்கிக் கொண்டுள்ளோம்.

குறிப்பாக தெல்தோட்டை உலமா சபையின் உலமாக்கள் அனைவரும் தெல்தோட்டைப் பிரதேசத்தின் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் என்ற ரீதியிலும் எங்களுடைய சக உலமா என்ற ரீதியிலும் நண்பர் அவர்களுடைய பணியைப் பாராட்டுகின்றோம்.

இவ்வாறான புத்தகங்களை நாங்களும் எழுத வேண்டும். இவ்வாறான விடயங்களை மற்றவர்களுக்கு எத்திவைக்க வேண்டும் என்பதை அவர் எங்களுக்கு காட்டித் தந்துள்ளார். எதிர்காலத்தில் தம் சமூகத்திற்குத் தேவையான அதிகமான புத்தகங்களை எழுதுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இப்பிரதேசம் ஏனைய மாவட்டங்களை விட கல்வி ரீதியில் முன்னணி வகிக்கின்றன. அவைகளை உங்கள் கண் முன்னால் கண்டு கொள்ளுமளவுக்கு உள்ளன. ஏனென்றால் தற்போது க.பொ.த சாதாரண பரீட்சை பெறுபேறு வெளியாகியுள்ளது. இப்பிரதேசத்திலுள்ள சகல பாடசாலைப் பிள்ளைகளும் நல்ல பெறுபேற்றைப் பெற்றுள்ளன. ஆனால் இப்பிள்ளைகளின் பெற்றோர்கள் விவசாயிகளாகவும் கொழும்பிலும் பல இடங்களிலும் ஹோட்டல்களிலும் சில்லறைக் கடைகளில் தொழில் புரிபவர்களாக இருக்கின்றார்கள்.

அவர்களுடைய பிள்ளைகள் வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் வருவதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. ஆனாலும் அவர்களுக்கு பொருளாதார நிலைமை தடைக் கல்லாக இருக்கின்றன.

இன்று பிள்ளை பல்கலைக்கழகம் சென்றாலும் ஒரு நாள் சாப்பாட்டுச் செலவு 1000.00 ரூபாவுக்கு மேல் செல்கின்றன. அவர்கள் படிப்பது என்றால் புத்தகம் வாங்குதல் உள்ளிட்ட எத்தனையோ செலவுகள் உள்ளன. எனவே நாம் ஒவ்வொரு வரும் இப்பிள்ளைகளின் கல்வி விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இப்பிரதேசம் அருள்வாக்கி அப்துல் காதர் பிறந்த மண். அவர் இந்த மண்ணுக்குச் செய்த சேவையைப் போன்று உங்களது சேவையையும் இந்த மண் எதிர்பார்க்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**பாடசாலை அதிபர் எம். ஜீ. நயீமுல்லாஹ் உரையாற்றும் போது;**

மௌலவி நிஸாம் தரம் ஒன்று முதல் 13 வரையிலும் கல்வி கற்றவர். இப்பாடசாலையில் இருந்துதான் பல்கலைக்கழகம் சென்றார். கல்வித் திணைக்களத்தின் ஊடாக கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் பாடசாலையின் ஆசிரியர் ஆலோசகராக கடமையாற்றினார். அவர் ஆரம்பத்தில் இருந்து எல்லா விடயங்களையும் குறித்து வைத்துக் கொள்ளக் கூடிய தன்மை உள்ளன. அவர் வழங்கிய நற்சிந்தனைகள் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தொகுத்து வழங்கியவர். இவர் ஏனைய ஆசிரியர்களுக்கு முன்மாதிரியான ஒருவர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இக்பால் அலி**



# கொழும்பில் இன்று 'சர்வதேச அரபு மொழி தினம்' நிகழ்வு

டிசம்பர் மாதம் பதினெட்டாம் திகதி சர்வதேச அரபு மொழி தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் கரும மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஆறு மொழிகளில் அரபு மொழியும் ஒன்றாகும். இது 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அறிவிப்புச் செய்யப்பட்டது.

அரபு , ஆங்கிலம், பிரெஞ்சு, சீன மொழி, ஸ்பானிய மொழி, ரஷ்ய மொழி உள்ளிட்ட ஆறு மொழிகள் ஐ.நா சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அன்று தொட்டு டிசம்பர் மாதத்தின் பதினெட்டாம் திகதி சர்வதேச அரபு மொழி தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இவ்வருடம் அரபு மொழிக்கான ஐம்பதாவது சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஒரு சமுதாயத்தின் இருப்பையும் கலாசாரத்தையும் இப்பாரினில் பறைசாற்றும் பிரதானமான ஊடகமாக மொழிகள் திகழுகின்றன.

மொழியொன்று வழக்கொழியும்போது அம்மொழியைப் பேசிய மக்களது கலை கலாசாரங்களும் விழுமியங்களும் கூடவே அழிந்து போவதைப் பார்க்கின்றோம். ஒரு சமுதாயத்தின் இருப்பு அதனது மொழி நிலைத்திருப்பதில்தான் தங்கியிருக்கின்றது. உலகப் பொது மறையாகிய திருக்குர்ஆன் அரபு மொழியிலேயே இறக்கப்பட்டிருக்கின்றது. 'குர்ஆனை நாமே இறக்கினோம், நாமே அதனைப் பாதுகாப்போம்' என்று அல்லாஹ் புனித குர்ஆனில் கூறுகின்றான்.

திருக்குர்ஆன் அழியாமல் பாதுகாக்கப்படுமானால் அரபு மொழியும் பாதுகாக்கப்படும் என்பது உத்தரவாதமாகின்றது. இதனைப் பார்க்கின்றபோது, அரபு மொழி காலத்தால் அழியாதது எனும் சிறப்பைப் பெற்றிருப்பதுவும், அல்லாஹ்வினால் பாதுகாக்கப்படும் என்பதுவும் வெள்ளிடைமலை. ஏறத்தாழ நான்காயிரம் வருடங்களை இது வரலாறாகக் கொண்டிருப்பதன் இரகசியம் இதுவாகும். அரபு மொழியின் அரிச்சுவடியானது




உலகின் பண்டைய மொழிகளான கிரேக்க மற்றும் ஹிப்றூ மொழிகளின் அரிச்சுவடியைவிடப் பழமையானது என ஆய்வுகள் கூறுகின்றன.

அரபு மொழியை முதலாவதாகப் பேசியவர் யார்?, என்பது குறித்த கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. முதல் மனிதர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவனபதியில் இருக்கும்போது அரபு மொழியைப் பேசினார்கள் எனவும், பூமிக்கு இறக்கப்பட்டபோது சிர்யாக் மொழியைப் பேசினார்கள் எனவும், பாவ மீட்சி பெற்றபோது அறபு மொழி மீளவும் வழங்கப்பட்டதாகவும் இமாம் இப்னு அஸாகிர் அவர்கள் தமது 'அத் தாரீஹ்' எனும் கிரந்தத்தில் கூறுகின்றார்கள். அரபு மொழி உன்னதமானது, சொற்செறிவுள்ளது, கருத்தாழமிக்கது. நீண்ட நெடிய கருத்துக்களை மிகவும் குறைந்த எண்ணிக்கை கொண்ட சொற்களினூடாக ஒப்புவித்துவிட முடியும்.

ஒரு உயிர்க்குறியீட்டினுடைய மாற்றமோ, ஒரு புள்ளியி (நுக்தாவி)ன் இடமாற்றமோ மாபெரும் கருத்துப் பிழைகளை உண்டுபண்ணி விடும். அந்தளவிற்கு நுணுக்கமானது இந்த அரபு மொழி. ஒரு முஸ்லிமைப் பொருத்தவரைக்கும் அரபு மொழி மிகவும் முக்கியமானது, அவனது வாழ்வியலோடு பின்னிப்பிணைந்தது. அவனது வாழ்வின் வழிகாட்டிகளான திருக்குர்ஆனும், புனிதமிகு சுன்னாவும் அரபு மொழியிலேயே அமைந்துள்ளன. தனது வாழ்க்கை மூலமாக அவ்விரு கருவூலங்களையும் விளங்கப்படுத்திய நபியும் அதனை முதன்முதலாக நம்பி இஸ்லாத்தைத் தமது வாழ்க்கை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட மக்களும் அரபிகளாவர்.

எனவே, ஒரு முஸ்லிம் தனது சன்மார்க்கக் கடமைகளை சரியாக விளங்கிக் கொள்வதில் அரபு மொழி பாரிய பங்கினை வகிக்கின்றது எனலாம். "சூரதுல் யூசுப்" இனுடைய இரண்டாவது வசனம் கீழ்வருமாறு கூறுகின்றது. " நீங்கள் புரிந்து கொள்வதற்காக அரபுக் குர்ஆனாக இதனை இறக்கியுள்ளோம்". இவ்வசனத்திற்கு விரிவுரை எழுதிய இமாம் இப்னு கதீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள், " ஏனெனில் அரபு மொழி தெளிவானது, பரந்துபட்டது. உளக்கிடக்கைகளை வெளிக்கொணருவதில் நிகரில்லாதது. எனவேதான், அல்லாஹ் மிகச் சிறந்த வேதத்தை மிகச் சிறந்த தூதருக்கு அதி உத்தம வானவர் ஊடாக புனித பூமியாம் மக்கமா நகரில் மிகவும் புனிதமான மாதத்தில் இறக்கியருளினான்". அரபு மொழியின் மகிமைக்கும் சிறப்பிற்கும் இதுவொன்றே போதுமானதாகும். இத்தினத்தினை முன்னிட்டு, இலங்கையிலுள்ள சவுதி அரேபியா தூதுவராலயம் ஒரு நிகழ்வினை இன்று ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் ஹாலித் பின் ஹமூத் அல் கஹ்தானியுடைய மேற்பார்வையிலும் தலைமையிலும் இந்நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. "கவிதை மற்றும் கலைகளின் மொழி அரபு" எனும் கருப் பொருளில் இந்நிகழ்வு ஏற்பாடாகி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**மௌலவி எம்.ஏ.முஹம்மது றபீஸ்,**
அதிபர், சுமையா மகளிர் அரபுக் கல்லூரி, கிண்ணியா

# அனுமதி அற்ற நடைபாதை வியாபார நிலையங்களை அகற்ற பணிப்பு

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதால் டெங்கு நுளம்பு பரவுவதை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம் சார்ள்ஸ், துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



டெங்கு நுளம்பு அதிகம் பரவும் இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக வடிகான்களில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு குறித்த வடிகான்களை சுத்தப் படுத்துவதோடு, வீதி ஓரங்களில் போடப்பட்டிருக்கக்கூடிய நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறும் பொலிசாருக்கு ஆளுநர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் உடன் அமுலாகும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் ஊடாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சுகாதாரத் தரப்பினர் , உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் ஆளுநர் ஆலோசனை வழங்கி உள்ளார். மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை யாழ் மாவட்டத்தில் காணப்படும் அனுமதி அற்ற நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றுமாறும் ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

# கிளிநொச்சியில் ஒரு கோடி 32 லட்சம் பெறுமதியான கேரள கஞ்சா மீட்பு!

கிளிநொச்சி குறூப் நிருபர்



கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் நேற்று (17) மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் ஒரு கோடியே 32 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. விசேட போதைப் பொருள் ஒழிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் நேற்று முன் தினம்(16) பொலிஸ் மா அதிபர் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாக விசேட போதைப் பொருள் ஒழிப்பு குழு ஒன்றை அமைத்து போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பாரதிபுரம் பகுதியில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் மோப்பநாய் சகிதம் தேடுதலை மேற்கொண்ட போது சுமார் சுமார் 68 கிலோவுக்கு மேற்பட்ட 30 பொதிகள் கொண்ட கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளன. இக் கேரள கஞ்சா பொதிகள் வீடு ஒன்றின் சீலிங் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இதன்போது சந்தேகத்தின் பெயரில் வீட்டுரிமையாளரான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுங்கள்!

கரவெட்டி தினகரன் நிருபர்

தற்போதைய காலப்பகுதியில் டெங்கு நோய்க்கு மேலதிகமாக வேறு நோய்களும் பரவுகின்றன என தெரிவித்த பொது வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன், காய்ச்சல் தொடர்ந்து இருந்தால் மருத்துவ ஆலோசனையைப் பெற்று என்ன வகையான தொற்று என்பதை கண்டறிந்து சிகிச்சையைப் பெற வேண்டும் எனக் கூறியுள்ளார்.யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சனியன்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

காய்ச்சல் வந்தால் பயப்படாமல் கவனமாக இருந்தால் மரணம் வராது பாதுகாக்கலாம். காய்ச்சல் வந்தால் ஓய்வெடுக்க வேண்டும். நாளாந்த உடற்பயிற்சிகளைத் தவிர்க்க வேண்டும்.இந்த காலப்பகுதியில் டெங்கு நோய்க்கு மேலதிகமாக வேறு நோய்களும் பரவுகிறது. உதாரணமாக சுவாச தொற்று நோய், உண்ணிக் காய்ச்சல் என்பன பரவுகின்றன. காய்ச்சல் தொடர்ந்து இருந்தால் மருத்துவ ஆலோசனையை பெற்று என்ன வகையான தொற்று என்பதை கண்டறிந்து சிகிச்சையைப் பெறலாம் என தெரிவித்தார்.

# காசல்ரீ நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறப்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் அனைத்து வான் கதவுகளையும் திறக்க நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர்கள் நேற்று முன் தினம் (16) இரவு நடவடிக்கை எடுத்தனர்.



இதனால் களனி ஆற்றின் நீர்மட்டம் உயரக் கூடும் என்பதால் காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு கீழே உள்ள களனி ஆற்றைப் பயன்படுத்தும் மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

# இரத்தினபுரி மண் சரிவுகளால் வீதிகளின் போக்குவரத்து துண்டிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங் கொடை, உடவல ஓப்பநாயக்க வீதி, பலாங்கொடை கல்தொட்ட வீதி, இரத்தினபுரி வேவல்வத்த வீதி, பலாங்கொடை ஹட்டன் வீதி, பலாங் கொடைவேவல்வத்தவீதி, இரத்தினபுரி கிரிஎல்ல வீதி ஆகிய வீதிகளின் பல இடங்களில் மண் மேடுகள் சரிந்து விழுந்து மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட இடர் முகாமைத்துவ காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதனால் குறித்த வீதிகளின் ஊடக பயணிக்கும் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு காவற்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.மேலும் இவற்றில் பல வீதிகளின் மண்மேடுகள் நீக்கப்படும் வரை மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு நெடுஞ்சாலைகள் திணைக்கள அதிகாரிகள் வாகன சாரதிகளிடம் வேண்டுகோ ள் விடுத்துள்ளனர்.

# களுத்துறை இந்து ஆலய புனரமைப்புக்கு நிதியுதவி

களுத்துறை சுழற்சி நிருபர்

களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள பன்னிரண்டு இந்து ஆவணங்களின் புனரமைப்பு பணிக்காக இருபத்துமூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் வைபவம் அமைச்சர் விதுர விக்கிரமநாயக தலைமையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் ஏற்பாட்டில் கடந்த 15ஆம் திகதி களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.



களுத்துறை மாவட்ட இந்து ஆலயங்களின் புனரமைப்பு பணிக்காக நிதியுதவி கோரி இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்க புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயகவின் வழிகாட்டுதலுக்கு அமைவாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் மேற்படி நிதியுதவி வழங்கப் பட்டது.

இதன் அடிப்படையில் களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், புளத்சிங்கள, கல்ஹேன, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஹொரணை சௌம்யபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், பதுரெலிய, அஸ்க்கவெளி, ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயம், பதுரெலிய அஸ்க்கெலிய தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், இங்கிரிய, றைகம் மேல் பிரிவு ஸ்ரீ குறிஞ்சி மாரியம்மன் ஆலயம், இங்கிரிய றைகம் கீழ் பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நேபட ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம், ஹொரணை எல்லகந்த ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், இங்கிரிய அத்துரகல குன்றத்து ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், தெபுவன, புட்டுபாவுல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், பதுரெலிய மொஹமதி கீழ் பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் என்பவற்றுக்கு அமைச்சர் விதுர விக்கிரமநாயக தலைமையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் ஏற்பாட்டில் குறித்த நிதியுதவி பகிர்ந்தளிக்கப்பட்டது.



# பெண்ணொருவரின் சடலம் மீட்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

கெசல்கமுவ ஓயா காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இணையும் இடத்தில் பெண்ணொருவரின் சடலம் ஒன்று நேற்று (17) மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வென்ச்சர் பகுதியைச் சேர்ந்த பெருமாள் ராக்கம்மா (வயது 82) என அவரது மகள் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல் (IFB)**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கட்டுமான நடவடிக்கைகளுக்காக**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   I. **RDA/GAM/CE/TEN/2023/23** - கி.மீ. 100,000 வேலைத்திட்டத்தின் கீழ் போபத்த சீகிரி மாவத்தை போக்குவரத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்தல் (கட்டம் 1)

   II. **RDA/GAM/CE/TEN/2023/24** - கி.மீ. 100,000 வேலைத்திட்டத்தின் கீழ் போபத்த சீகிரி மாவத்தை போக்குவரத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்தல் (கட்டம் 2)

   III. **RDA/GAM/CE/TEN/2023/25** - கி.மீ. 100,000 வேலைத்திட்டத்தின் கீழ் போபத்த சீகிரி மாவத்தை போக்குவரத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்தல் (கட்டம் 3)

   IV. **RDA/GAM/CE/TEN/2023/26** - கி.மீ. 100,000 வேலைத்திட்டத்தின் கீழ் போபத்த சீகிரி மாவத்தை போக்குவரத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்தல் (கட்டம் 4)

   V. **RDA/GAM/CE/TEN/2023/27** - கி.மீ. 100,000 வேலைத்திட்டத்தின் கீழ் மினுவாங்கொட ஓபாத்த குணாநந்த மாவத்தை போக்குவரத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்தல்

2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

   வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கம்பஹா.**



**கல்வி அமைச்சு**

**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி**

**2024ம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்**

2024ம் வருடத்திற்காக ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய வியாபார ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், விநியோகஸ்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவுசெய்ய விரும்புவர்கள் ஒவ்வொரு பொருட்கள், உபகரணங்கள், சேவைகளுக்காக தனித்தனியாக கேள்விப்பத்திரத்தினை கோருதல் வேண்டும். அத்துடன் பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களை ஒரே கடித உறைக்குள் வைத்து அனுப்ப முடியும்.

| தொகுதி இலக்கம் | வழங்குநர் |
|---|---|
| | **பொருட்கள் / பண்டங்கள் / சேவைகள்** |
| இல 01 - | **காகிதாதிகள்**<br>i. பிரதி எடுக்கும் இயந்திரம் , றோனியோ, பக்ஸ், கணனி போன்ற இயந்திரங்களுக்கான காகிதாதிகள் உள்ளடங்களக<br>ii. கணனி பிரின்டர் றிபன், டிஸ்கற், டோனர், காட்றிஜ் உள்ளிட்ட பொருட்கள் ஏனைய அவசியமான பொருட்கள் |
| இல 02 - | **கட்டிடப் பொருட்கள்**<br>i. கட்டிடம் கட்டுவதற்கு தேவையான சகல பொருட்களும், பூச்சுக்கள்<br>ii. பி.வி.சி குழாய்களும், பொருத்துக்களும் மற்றும் நீர்ப்பம்பி சம்பந்தமான சகல பொருட்கள்<br>iii. சகல மின்னியல் பொருட்கள் உபகரணங்கள் மற்றும் பொருத்திகள்<br>iv. தும்புதடி, ஈர்க்குமாறு, விம், ஹார்பிக் போன்ற பொருட்கள்<br>vi. குளியலறை உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்பு பொருட்கள்<br>vii. மண்வெட்டி, முள்ளு, கோடரி, கத்தி, வேலி வெட்டும் கத்தரிக்கோல்<br>viii. பலகை வகைகள் |
| இல 03 - | **வெளியீடுகள்**<br>i. புத்தகங்கள், சஞ்சிகைள் மற்றும் வெளியீடுகள்<br>ii. தினசரி பத்திரிகைகளும் , வார வெளியீடுகளும் |
| இல 04 - | வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர், ரியூப் |
| இல 05 - | விடுதி பராமரிப்பு உபகரணங்கள் |
| இல 06 - | மருந்துப்பொருட்கள், முதலுதவி பொருட்கள் |
| | **சேவைகள் / திருத்தங்கள்** |
| இல 07 - | **வாகனங்கள்**<br>i. வாகனங்களை சேர்விஸ் செய்தல்<br>ii மோட்டார் வாகனங்களின் திருத்த வேலைகள் மற்றும் ஒட்டு வேலை உள்ளிட்ட வேலைகள்<br>iii வாகனத்தின் குஷன் செய்தல் உறையிடல்<br>iv குளிரூட்டுதல் |
| (இல 8 i, ii ற்கு ஆகக்கூடியது கல்லூரியிலிருந்து 36 கிலோ மீற்றர்களுக்குள் அமைந்திருக்கும் கராஜ்களிலிருந்தே விண்ணப்பிக்க முடியும்) | |
| இல 08 - | துணிவகைகளை சலவை செய்தல் |

**வழங்குநர்களை பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

1) வழங்குநர்களை பதிவு செய்வதற்காக ஒவ்வொரு தொகுதி இலக்கம் மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 1000/- ஐ செலுத்தி அவசியமான விண்ணப்பத்தினை கல்லூரியின் பதிவாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். உரிய விண்ணப்பத்துடன் பற்றுச்சீட்டினையும் வியாபார சான்றிதழின் பிரதியினையும் அனுப்புதல் வேண்டும்.

2) பொதுவாக சேவைகள் பண்டங்களுக்கான பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் இருப்பினும், தேவைப்படுமிடத்து மாற்று வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருவதற்கான அதிகாரம் கல்லூரியின் பீடாதிபதிக்கு உண்டு.

3) பூரணப்படுத்திய விண்ணப்பத்தினை பீடாதிபதி, ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி, பத்தனை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “2024ம் வருடத்திற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்” எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

4) பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்வதோ அல்லது மறுப்பதற்கான அதிகாரம் கல்லூரியின் கொள்வனவு குழுவிடமே உண்டு.

5) 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 04ம் திகதி பி.ப 2.00 மணிவரை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதுடன் 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 05ம் திகதி பி.ப 2.00 மணி வரைக்கும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படும்.

6) தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் உரிய பொருட்களை கல்லூரிக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் அப்பொருட்களின் தரம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் ஒருமாத காலத்திற்கு கடன் வசதிகளை வழங்குதல் வேண்டும்.

7) கீழ்க்குறிப்பிட்டவாறு வழங்கத்தவறும் விண்ணப்பதாரர்களின் பெயர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து இழக்க நேரிடும் என்பதை கவனத்திற்கொள்ளவும்.
   1) விலைமனுக்கள் கோரும்போது அவற்றை சமர்ப்பிக்கதவறுதல்
   2) தேவைப்படும் சேவைகள் வழங்கல் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கதவறுதல்
   3) பொருட்கள், சேவைகள் அங்கீகரிக்கப்பட்ட தரத்தினை கொண்டிராதிருத்தல்

**பீடாதிபதி**
**ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி, பத்தனை**

லங்கா சதொச LANKA SATHOSA

## கொள்முதல் அறிவிப்பு

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

# லங்கா சதொச லிமிட் விற்பனை நிலையங்களை புதுப்பித்தல் மற்றும் மாற்றியமைத்தல்

தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல்

**லங்கா சதொச லிமிடட்டின் திணைக்கள கொள்முதல் குழுவின் CIDA தலைவர், (நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபை)** இல் பதிவுசெய்யப்பட்ட தகுதிவாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் செய்யப்பட்ட ஏலங்களை அழைக்கிறார். பின்வரும் லங்கா சதொச விற்பனை நிலையங்களை புதுப்பித்தல் மற்றும் மாற்றியமைத்தல்.

| Bid No. | கடையின் | விளக்கம் | ஏல கட்டணம் (ரு.) (திருப்பிச் செலுத்த முடியாதது) | ஏல பாதுகாப்பு (ரு.) (திரும்பப் பெறத்தக்கது) |
|---|---|---|---|---|
| LSL/PRO/05/83/Renovation -Kekirawa/2023 | கெக்கிராவ | கட்டிடத்தை புதுப்பித்தல் மற்றும் விரிவாக்குதல் | 4,000.00 | 116,200.00 |
| LSL/PRO/05/64/Renovation -Marawila/2023 | மாரவில | புதுப்பித்தல் மற்றும் திருத்தம் | 4,000.00 | 49,000.00 |
| LSL/PRO/05/44/Renovation -Kaluthara/2023 | களுத்துறை | புதுப்பித்தல் மற்றும் திருத்தம் | 4,000.00 | 54,000.00 |
| LSL/PRO/05/68/Variation Works-Mc Callum/2023 | மெக்கலம் | மாறுபாடு வேலை | 1,500.00 | 7,800.00 |
| LSL/PRO/05/85/Partition Works/2023 | சியம்பலாபே | பகிர்வு வேலை | 1,500.00 | - |
| | சீதுவா 2 | பகிர்வு வேலை | | |
| LSL/PRO/05/94/Renovation -Diyathalawa/2023 | தியத்தலாவ | புதுப்பித்தல் | 1,500.00 | 11,000.00 |
| LSL/PRO/05/79/Renovation -Lunugala/2023 | லுனுகல | புதுப்பித்தல் | 1,500.00 | 15,000.00 |

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏல ஆவணத்தை இலவசமாக ஆய்வு செய்யலாம் மற்றும் ஆங்கில மொழியில் ஏல ஆவணத்தின் முழுமையான தொகுப்பை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து **18 டிசம்பர் 2023 முதல் 12 ஜனவரி 2024 வரை** மேலே குறிப்பிட்டுள்ள திருப்பிச் செலுத்த முடியாத ஏலக் கட்டணத்தைச் செலுத்தி அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தைப் பெறலாம்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகை பிரிவு (3ஆவது மாடி),**
**இல. 27, ஊறுநு செயலக கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

ஏலத்திற்கு முந்தைய கூட்டம் **04 ஜனவரி 2024 அன்று மதியம் 01.00 மணிக்கு** மேலே உள்ள முகவரியில் நடைபெறும்.

ஏலங்கள் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது மேலே உள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் **12 ஜனவரி 2024 அன்று 01.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** டெபாசிட் செய்ய வேண்டும். சீல் செய்யப்பட்ட ஏலத்தைக் கொண்ட உறையின் மேல் இடது மூலையில் தொடர்புடைய ஏல எண் எனக் குறிக்கப்பட வேண்டும்.

**ஏலம் 12 ஜனவரி 2024 அன்று மதியம் 01.00 மணிக்கு மூடப்படும்** மற்றும் ஏலதாரர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் மூடப்பட்ட உடனேயே திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் இருக்கும் நிராகரிக்கப்பட்டது.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரிகளை அழைக்கவும்.
திலினி - 070 1560428 (நிர்வாக விடயங்களுக்கு)

கேள்வி/ ஒப்பந்தம் வழங்கப்படும் இறுதி முடிவு, **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட்** வசமானது.

தலைவர், லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02

லங்கா சதொச LANKA SATHOSA

## முன்மொழிவுக்கான கோரிக்கை(RFP)

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

# லங்கா சதொச லிமிடட் ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதித் திட்டம்

Bid No: LSL/PRO/05/87/Health Insurance/2023
தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல்

**லங்கா சதொச ஊழியர்களுக்கு 2024.02.01ஆம் திகதி தொடக்கம் 2025.01.31ஆம் திகதி வரை ஓர் ஆண்டு காலத்திற்காக காப்புறுதித் திட்டத்தை பெறுவதற்காக, லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால்** அதற்கு ஆர்வம் காட்டுகின்ற காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தேவை: RFP ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு குறித்த ஆங்கில மொழியிலான குறித்த விலைமனு ஆவணத்தின் இரண்டாவது பாகத்தை, **5,000.00 ரூபா மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்தி 2023 டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி வரையான காலத்தில்,** இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின், பெறுகைப் பிரிவில் இருந்து (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகை பிரிவு (3ஆவது மாடி),**
**இல. 27, CWE செயலக கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

காப்புறுதி நிறுவனங்களின் **தலைமை அலுவலக ஊழியர்களின் பிரதிநிதிகளுக்கு மாத்திரமே RFP ஆவணம் வழங்கப்படும். (காப்புறுதி நிறுவன முகவர்கள் மற்றும் காப்புறுதி தரகர்கள் கருத்தில்கொள்ளப்படமாட்டாது).** எனவே, விலைமனுதாரர் குறித்த காப்புறுதி நிறுவனத்தின் தலைவரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரக் கடிதம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு (கட்டாயம்) மேலுள்ள முகவரியில் **2023 டிசம்பர் 28ஆம் திகதி மு.ப. 11.00க்கு** இடம்பெறும்.

முன்மொழிவுகளை **2024 ஜனவரி 08 ஆம் திகதி பி.ப. 01.00 அல்லது அதற்கு முன்னர்** பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவதற்கு வேண்டும். முன்மொழிவுகளைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/87/Health Insurance/2023"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் இலங்கைக்குள் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட நிபந்தனையற்ற **ரூபா.300,000.00 (ஒரு இலட்சத்து எண்பத்து ஏழாயிரம் மாத்திரம்) பெறுமதி கொண்ட விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படுகின்ற)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2024 ஜனவரி மாதம் 08ஆம் திகதி பி.ப. 01.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரிகளை அழைக்கவும்.
திலினி - **070 1560428**

கேள்வி/ ஒப்பந்தம் வழங்கப்படும் இறுதி முடிவு, **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட்** வசமானது.

தலைவர், லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02

Daily News Classifieds, the Housewives' companion

நீர்கொழும்பு, ரயில் நிலைய வீதி, இல. 31/1/1இல் தமது தலைமையகத்தை நடத்திச் செல்லும் நிகம்பு டிரஸ்ட் மைக்றோ கிரடிட் (பிறைவட்) லிமிட்டட் (PV 125376) ஆகிய எம்மால் நடத்திச் செல்லப்படும் தங்கநகை அடகு நிலையம் 2024.01.01 முதல் நீர்கொழும்பு சென். ஜோசப் வீதி, இல.65 எனுமிடத்திற்கு, கொண்டு செல்லப்படுவதாக இத்தால் இலங்கை வாழ் மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

**077 — 7855880**

Repeat Your ad For Better Offers

# கடுவெல மாநகர சபை

## 2024 ஆம் ஆண்டிற்கான ஆதன மதிப்பீட்டு பதிவேட்டினை பரிசீலனை செய்வதற்கு இடமளித்தலும் மதிப்பீடுகள் பற்றிய ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளுதலும்

2024 ஆம் ஆண்டில் கடுவெல மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் வரிப்பணம் செலுத்தப்படுவதற்கு கட்டுப்பட்ட ஆதனங்களின் மதிப்பீடுகளை உள்ளடக்கிய மதிப்பீட்டுப் பதிவேடு கடுவெல, பத்தரமுல்ல மற்றும் அத்துறுகிரிய ஆகிய மாவட்ட அலுவலகங்களில் பொதுமக்கள் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளது. 2024 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வார நாட்களில் அலுவலக நேரங்களில் மேற்படி மதிப்பீட்டு பதிவேட்டினை பார்வையிட முடியும். சம்பந்தப்பட்ட ஆதன உரிமையாளர் அல்லது அதில் வதிபவருக்கு தனது அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர் மாத்திரமே சம்பந்தப்பட்ட ஆதனத்தின் விபரங்களை பரிசீலிக்க முடியும் என்பதுடன் தனக்கு சொந்தமில்லாத எந்தவொரு ஆதனத்தின் விபரங்களையும் பரிசீலிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாதென தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

2024 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மேற்படி வருடாந்த மதிப்பீடு சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2024 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் "மாநகர ஆணையாளர், கடுவெல மாநகர சபை, கடுவெல" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவோ அல்லது கடுவெல, பத்தரமுல்ல மற்றும் அத்துருகிரிய மாவட்ட அலுவலகங்களில் அதற்கென வைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு ஆட்சேபனை புத்தகத்தில் குறிப்பிடவோ முடியும். ஆட்சேபனை தெரிவிக்கும் போது அதனை தனது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆதன உரிமையாளருக்கு அல்லது அதில் வதிபவருக்கு மாத்திரமே தெரிவிக்க முடியும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

மேற்படி ஆதனத்துடன் தொடர்புடைய அற்றோனி தத்துவத்தைக் கொண்டவரும் இவ்விடயத்தில் ஆதன உரிமையாளராக உள்ளடக்கப்படுகின்றார். ஆகவே, அற்றோனி தத்துவத்தைக் கொண்டுள்ளவர் சட்டத்தரணி ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோனி பத்திரத்துடன் அற்றோனி தத்துவம் வழங்கியவர் உயிருடன் இருக்கின்றார் என்பதையும் அற்றோனி பத்திரம் இரத்துச் செய்யப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டு சத்தியக் கடதாசியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**2023.12.18**

**நகரசபை ஆணையாளர் மற்றும்**
**அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை**
**செயல்முறைப்படுத்தும் உத்தியோகத்தர்**
**கடுவெல மாநகர சபை.**

# அறிவித்தல்

## பண்டாரவளை மாநகர சபை

**2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் அனுபந்த ஆவணத்தை பகிரங்கப்படுத்தல்**

252ஆவது அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214 (2) (ஆ) பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு என்னால் பண்டாரவளை மாநகர சபை சார்ந்த 2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வரவு -செலவுத் திட்ட அனுபந்த ஆவணத்தை பிராந்தியத்தின் பொதுமக்களின் அறிதலுக்காக பரீட்சிப்பதற்கு 2023.12.18 ஆம் திகதி தொடக்கம் இந்த மாநகர சபை அலுவலகம், பொது நூலகம் மற்றும் வர்த்தக மையத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214 (2) (ஆ) பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத்தரப்படுகிறது.

**டி. கஜேந்திரன் குமார்**
**நகர ஆணையாளர்,**
**மாநகர சபை - பண்டாரவளை**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 டிசம்பர் 20ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக ரூ. 172,500 மில்லியன் ரூபாவிற்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124C227 | LKA18224F219 | LKA36424L203 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 57,500 | 55,000 | 172,500 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2023 டிசம்பர் 20 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2023 டிசம்பா 22 |
| வழங்கப்படும் திகதி | : 2023 டிசம்பா 22 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2023 டிசம்பர் 20 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்படவேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறீப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ஃபஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ. பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்குகிடையிலான தொகைகளை மீள்ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட / நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கை பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும் :-

| | பெயரும் முகவரியும் | பதவி |
|---|---|---|
| 1 | திரு.பி.ஆர்.எஸ்.குணவர்தன இலக்கம் 1/5,மிஷன் ஒழுங்கை, கோட்டே | மாலைதீவு குடியரசிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | கலாநிதி. திரு. எம்.எம்.எஸ்.எஸ் பி.யாலேகம இலக்கம் 5, ரதன மாவத்தை, குரன நீர்கொழும்பு | அமைச்சரவை அந்தஸ்தற்ற அரச பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 3 | திரு.எஸ்.எம்.குஷான் தேவிந்த இலக்கம் 190/57/F, வீரமாவத்தை, தெபானம பன்னிப்பிட்டிய | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 4 | திரு. எஸ்.எம்.டி.எல்.கே. த அல்விஸ் இலக்கம் 67/7, சீசர்ஸ் டெரஸ், ஜயபார, உடஹமுல்ல | இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 5 | திரு.பிரதீப் சந்தன பெரேரா இலக்கம் 149/1, கிரிமெட்டியாகார, மஹர், கடவத்தை | வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 6 | திரு.மலித் ஜயதிலக இலக்கம் 482, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்தை, பத்தரமுல்ல | வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 7 | ஜே.ஏ.டி.பி.திரு.அபேரத்ன இலக்கம் 254B, எம்பரன்ஸ் இடம், நிதஹஸ் மாவத்தை, கிரில்லவல, வேபொட | தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 8 | திருமதி. சாகலா அபேவிக்ரம இலக்கம் 31/20, முதல் தெரு, பன்சலை வீதி, மஹரகம | தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர் மற்றும் நியமிக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, "செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே" என்ற விலாசத்திற்கு 2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல 2777389-011 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துகளுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துகளையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையதளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கை பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2023 டிசம்பர் 18 ஆம் திகதி**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

The Housewives' companion
Classifieds on
Daily News

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## 2024 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2024 ஆம் ஆண்டிற்காக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் நிருமாண செயற்பாட்டிக்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக என்னால் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்காக kalawana pradeshiya sabha என்ற எமது உத்தியோகபூர்வ முகநூலை பார்வையிடவும்.

தொலைபேசி இல.: 0452255275

**செயலாளர்,**
**கலவான பிரதேச சபை,**
**கலவான.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை போக்குவரத்து சபை (இ.போ.ச)

**250 எண்ணிக்கையான கைவிரல் அடையாள, முக அடையாள, நேர வரவு மெசின்கள் மற்றும் CENTRALIZED ATTENDANCE SOFTWARE களை வழங்குதல் விநியோகித்தல், நிறுவுதல், இயக்குதல், பராமரித்தலுக்கான விலைமனு**

SLTB/TS/GEN/52/2023

மேற்படி தலைப்பிடும் கடந்த 13.12.2023 தினகரன் நாளிதழ் 15ம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தில், முதலாம் பந்தியின் 3ஆம் வரியில் பராமரித்தலுக்காக 2024.01.03ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி என்று திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**தலைவர்,**
**இ.போ.ச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இல.200, கிருள வீதி, கொழும்பு - 05**

## பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு

## பொது வைத்தியசாலை (போதனா) பேராதனை

தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பொது வைத்தியசாலை, (போதனா), பேராதனையினால் கீழேயுள்ள வேலை விடயங்களுக்காக 2023 டிசம்பர் 18 முதல் 2024 ஜனவரி 09 மு.ப 10.30 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. வைத்தியசாலை பாதுகாப்பு கெமரா அமைப்பு (CCTV) பொருத்துதல்.
02. மின்சார அமைப்பு சேவை மற்றும் பராமரிப்பு - 2024

இந்தவேலை விடயங்களின் சகல தகவல்களையும், 2023.12.18 முதல் 2024.01.09 வரை பேராதனை பொது வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ இணையதளமான www.peradeniya-hospital.health.gov.lk இடமிருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன், அவ்வேலை விடயங்களுக்கான பெறுகை விடயங்கள் சம்பந்தமான பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2023.12.29 மு.ப. 10.30 இற்கு பேராதனை பொது வைத்தியசாலையின் கலந்துரையாடல் அறையில் நடைபெறும்.

**மருத்துவர், எச்.எம்.ஏ. திலகரத்ன,**
**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை (போதனா),**
**பேராதனை.**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

GG-1313 BAJAJ, 2000, QE-4174 BAJAJ, 2006, THREE-WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொலை பேசி. 071 4 5 4 2958. 082866

## ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2024ம் வருடத்திற்கான உணவுப் பொருட்கள் விநியோகஸ்தர்களைப் பதிவு செய்தல்

2024ம் வருடத்தில் இந்நிறுவனத்திலே வதிவிடப் பயிற்சியை மேற்கொள்கின்ற ஆசிரிய பயிலுன மாணவர்களுக்கு அவசியமான உணவுப் பொருட்களை விநியோகம் செய்தல் தொடர்பாக பின்வரும் தொகுதிகளின் கீழ் விநியோகஸ்தர்களைப் பதிவு செய்வதற்காக 2024-01-05 ம் திகதி பி.ப 2.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உணவுத் தொகுதிகளை விநியோகிப்பதற்கு பதிவு செய்வதற்காக ஒரு உணவுத் தொகுதிக்கு மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பதிவாளரிடம் நேரடியாக செலுத்தப்பட்டு உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் இறுதித்திகதி 2023-01-04 பி.ப 2.00 மணி ஆகும்.

உணவுத் தொகுதிகள் 1, 2, 3, 4 என்பன தொடர்பாக கல்வியியற் கல்லூரியிலிருந்து 35 கிலோமீற்றர்களுக்குள் வியாபார நிலையம் அமைந்திருப்பது கட்டாயமானது.

1. சீனி, அரிசி, பால்மா, கருவாடு போன்ற உலர் உணவுப் பொருட்கள், பலசரக்கு பொருட்கள், தேங்காய் எண்ணெய் முதலியவற்றை அவசியமான அளவில் விநியோகம் செய்தல்.
2. மாதத்திற்கு 1500 - 2000 கிலோ வரையிலான மரக்கறிகள் விநியோகம் செய்தல்.
3. தேவைக்கேற்ப தேவையான அளவு பாண் விநியோகம் செய்தல்.
4. தேவைக்கேற்ப ஒரு தடவைக்கு 40-50 கிலோ வீதம் கோழி இறைச்சியையும் ஒரு தடவைக்கு 500-600 வரையிலான முட்டைகளையும் விநியோகம் செய்தல்.
5. ஒரு முறைக்கு 900-1000 தேங்காய்கள் வீதம் மாதத்தில் இரண்டு முறை 1800-2000 தேங்காய்களை (இதற்காக வியாபார நிலையமொன்று அவசியமற்றது) விநியோகம் செய்தல்.
6. 371/2 கிலோ காஸ் சிலின்டர் மாதத்திற்கு 30-35 வரையில் விநியோகம் செய்தல்.

**வழங்குநர்களை பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

- உணவுப் பொருட்கள் விநியோகஸ்தர்களை பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் இருப்பினும், தேவைப்படுமிடத்து மாற்று வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருவதற்கான அதிகாரம் கல்லூரியின் பீடாதிபதிக்கு உண்டு.
- பூரணப்படுத்திய விண்ணபத்தினை பீடாதிபதி, ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “2023ம் வருடத்திற்கான உணவுப்பொருட்கள் வழங்குநர்களை பதிவு செய்தல்” எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- பதிவு செய்வதற்கான விண்ணபத்தினை ஏற்றுக்கொள்வதோ அல்லது மறுப்பதற்கான அதிகாரம் கல்லூரியின் உணவுப் பொருட்கள் கொள்வனவுக் குழுவிடமே உண்டு.
- தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் வழங்குநர்கள் உரிய பொருட்களை கல்லூரிக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் அத்துடன் அப்பொருட்களின் தரம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் ஒருமாத காலத்திற்கு கடன் வசதிகளை வழங்குதல் வேண்டும்.
- கீழ்க்குறிப்பிட்டவாறு உணவுப் பொருட்களை வழங்கத்தவறும் விண்ணப்பதாரர்களின் பெயர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்க நேரிடும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

1) விலைமனுக்கள் கோரும் போது அவற்றை சமர்ப்பிக்க தவறுதல்
2) தேவைப்படும் சேவைகள் வழங்கல் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க தவறுதல்
3) பொருட்கள், சேவைகள் அங்கீகரிக்கப்பட்ட தரத்தினை கொண்டிராதிருத்தல்

**பீடாதிபதி**
**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, பத்தனை**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை வங்கி

**மத்திய மாகாணத்தில் பின்வரும் கிளை இடமாற்றத்திற்காக வாடகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது.**

**ராகல கிளை**

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்சம் 30 அடி அகலத்திற்கு மேற்பட்டதாக பிரதான வீதிக்கு முகப்பாக நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 3500 - 4500 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டடமாகவிருத்தல் வேண்டும்.
- 2x2 தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- போதுமான அளவு நீர் வழங்கல், மேலதிக நீருக்கான தாங்கி, 60 அம்பியர் மூன்று நிலை மின்சாரம், தொலைபேசி வசதிகள், மலசலகூட வசதிகள், அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாயில் முதலான அடிப்படை வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடத்துடன் மாதாந்த வாடகை உட்பட இயைபுடைய விபரங்களை பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் அனுப்பவும்.

**உதவிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம்),**
**இலங்கை வங்கி, மத்திய மாகாண அலுவலகம்,**
**சீ பேங்க் கட்டடம், கண்டி.**
**தொலைபேசி இல. 081-2201444**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல்

**கெளனி வெளி (KV) புகையிரத பாதையில் EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான 5,000 எண்ணிக்கையிலான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS வழங்கல்**

**இலங்கை புகையிரத சேவைகள் IFB இலக்கம் - SRS F.7933**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தலைவரினால் **கெளனி வெளி (KV) புகையிரத பாதையில் EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான 5,000 எண்ணிக்கையிலான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS** வழங்குவதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை **2023.12.18** ஆம் திகதி **2024.01.11** ஆம் திகதி **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல : 94(11) 2438078, 94(11) 2436818**
   **தொலைநகல் இல : 94 (11) 2432044**
   **மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
   **இணையத்தளம் : www.railway.gov.lk**

4. மனுதாரர், இலங்கை **புகையிரத சேவைக்கு 5,000 இற்கும் அதிகமான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS** வழங்கியிருக்க வேண்டும் அல்லது **ரூ.50 மில்லியன் ரூபாய்க்கு** மேல் மதிப்புள்ள முன் அழுத்தப்பட்ட கான்கிரீட் கம்பங்களை (pre-stressed Concrete Beams) வழங்கியிருக்க வேண்டும். இல்லையெனில் கடந்த (05) ஐந்து ஆண்டுகளில் **ரூ.500 மில்லியன் ரூபாய்க்கு** குறையாத கான்கிரீட் கம்பங்களை வழங்கியமைக்கான விலைப்பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கையின் ரயில்வே கொள்முதல் புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.32,000/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி **2023.12.18** ஆம் திகதி முதல் **2024.01.11** ஆம் திகதி காலை **பி.ப.3.00** மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.1,800,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.01.12** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10.**

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
**இலங்கை புகையிரத சேவைகள்,**
கொள்முதல் இல.: **SRS/F.7933**

www.adz.lk it's what you want Login

## இலங்கை துறைமுக அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பின்வரும் பெறுகைக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறைக்கு (NCB) அமைய இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் கனிஷ்ட பெறுகைக் குழு (mPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| குறிப்பு அடையாள இல. | பெறுகை பெயர் | விலைமனுப் பிணை தொகை (இ.ரூபா) | வெட் உட்பட ஆவணக் கட்டணம் (இ.ரூபா) | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| EW/04/PT/2023/MA/24/16-01 | TENDER FOR REPAIRING OF 02 NOS OF PROPELLER UNITS OF THE LAUNCH: PILOT 16 | 50,000/= | 2,000/= | 2024.01.11 அன்று 14.00 மணி |

1. ரூபா 5.0 (ஐந்து) மில்லியனுக்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு 1987 இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும் என்பதை விலைமனுதாரர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது. அதன்படி ஒப்பந்தக் காலப்பகுதி முழுவதும் இந்த சட்டத்தை மேற்கூறப்பட்ட பெறுகையுடன் தொடர்புடைய அனைத்து தரப்புகளும் கண்டிப்பாக பின்பற்றுவதற்கு வேண்டும்.
2. விலைமனுதாரர்கள் உந்தி (propeller) பழுதுபார்த்தல் மற்றும் கப்பல்கள் சோதனை தொழில்துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் jagath_kumara@slpa.lk என்ற மின்னஞ்சல்/ 0094 11 2342537 என்ற தொலைபேசி/ 0094 11 2482330 என்ற தொலைபேசி இலக்கத்தில் இலங்கை, கொழும்பு 01, லெய்டன் பெஸ்டியன் வீதி, 45, இலங்கை துறைமுக அதிகாரசபை, கடல்சார் பொறியியல் பிரிவு, தலைமை பொறியியலாளர் (கடல்சார்) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023.12.19 ஆம் திகதி தொடக்கம் 2024.01.10 ஆம் திகதி வரை வேலை நாட்களில் அதே முகவரியில் விலைமனு ஆவணத்தை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
4. 2023.12.19 ஆம் திகதி தொடக்கம் 2024.01.10 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 10.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 2,000 இ.ரூபாவை (வெட் உட்பட) செலுத்தி மேலுள்ள முகவரியில் தலைமை பொறியியலாளருக்கு (கடல்சார்) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். ஆவணக் கட்டணத்திற்கான கொடுப்பனவு ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
5. விலைமனுப் பிணையுடனான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.01.11 ஆம் திகதி 14.00 மணிக்கு விலைமனு மூடப்படும் திகதி தாமதிக்காது தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை துறைமுக அதிகாரசபை, 45, லெய்டன் பெஸ்டியன் வீதி, கொழும்பு 01, இலங்கை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது இலங்கை, கொழும்பு 02, லெய்டன் பெஸ்டியன் வீதி, இல. 45, இலங்கை தறைமுக அதிகாரசபை, கொழும்பு துறைமுக ஆணையாளர் கட்டிடம், தரைத் தளத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் விலைமனுக்களை இடலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கீழுள்ள முகவரியின் மாநாட்டு அறையில் விலைமனு திறக்கும் சந்தர்ப்பத்தில் நேரடியாக பங்கேற்பதற்கு விலைமனுதாரரினால் தேர்வு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின் அவை உடன் திறக்கப்படும்.
6. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன் துறைமுக வளவுக்கு வருகைதந்து உந்திகளை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைமை பொறியியலாளர் (கடல்சார்)**
**கடல்சார் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பெஸ்டியன் வீதி, கொழும்பு - 01**

Daily News Classifieds, the Housewives' companion

**வெளிப்படைத் தன்மை, பங்கேற்பு, பொறுப்புக்கூறல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மூலம் மிகவும் செயற்திறனுடைய சேவையினை வழங்குவதற்காக அரசுடன் பொதுமக்கள் இணைந்து நடைமுறைப்படுத்தும் திறந்த அரச கூட்டாண்மையின் மூன்றாவது தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை (2023 – 2025) தயாரிப்பதற்காக**

## பொதுமக்களின் கருத்துக் கோரல்

மக்களின் பங்கேற்புடனான திறந்ததோர் அரசுக்கான பல்தரப்பு பொறிமுறையின் மூன்றாவது தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கான பங்காளராகுங்கள், பின்வரும் இணைப்பிற்குச் செல்லவும்.

Link: https://forms.gle/Y5ie5Y7S4LLo9z3NA

web: www.presidentsoffice.gov.lk

Open Government Partnership

சனாதிபதி அலுவலகம், காலி முகத்திடல், கொழும்பு 01.

INVITATION FOR BIDS (IFB)

## SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**SUPPLY, DELIVERY, COMMISSIONING AND MAINTENANCE OF NETWORK SWITCH**
**(SEU/SS/NCB/2023/03)**

The Chairman, Department Procurement Committee (Minor) of the South Eastern University of Sri Lanka invites sealed bids from eligible and qualified bidders for the Supply, Delivery, Commissioning and Maintenance of Network Switch. Closing date of the above tender will be on 09th January 2024.

Further information could be obtained from the University website **(www.seu.ac.lk)**.

**Registrar**
**South Eastern University of Sri Lanka**
**University Park Oluvil # 32360**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

Repeat Your ad For Better Offers

## கேள்வி அழைப்பு

**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை**
**கேகாலை**

## பழைய X-Ray இயந்திரம் மற்றும் பாகங்களை ஏலமிடுதல்

01. ரம்புக்கனை பிரதேச வைத்தியசாலையில் உள்ள பழைய X-Ray இயந்திரம் மற்றும் அதன் பாகங்களை ஏலவிற்பனை இடுவதற்காக 2024.01.10 மு.ப 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவில் இருந்து 2023.12.19 முதல் 2024.01.09 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப 3.30 வரையான காலத்திற்குள் கேள்வி ஆவணப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. பொருட்கள் பற்றிய விபரங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை www.rdhskegalle.lk இணைய தளத்தில் இருந்து பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**கேகாலை**
**தொ.பே. 035-2222549/035-2222578/035-2222571**
**பெக்ஸ் - 035-2222781**

## கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

## விலைமனுக்கோரல் (IFB)

1. கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் சார்பாக பிரதான பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திர, மின்சாரம், மேலதிக தாழ் மின்னழுத்தம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை பராமரிப்பதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

பராமரிப்புக்கான ஒப்பந்த காலம் ஒரு (1) வருடம்.

| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ) |
|---|---|---|
| **இயந்திர அமைப்புகளின் பராமரிப்பு** | | |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AC Chiller and Cooling tower System) | (CLT/AMC/02/2024) | 40,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AC VRV, Split AC and Cooling Tower System) | (CLT/AMC/03/2024) | 50,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Generator and Radiator Cooling System) | (CLT/AMC/04/2024) | 60,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Water Supply and drainage System) | (CLT/AMC/05/2024) | 20,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Fire Pumps System) | (CLT/AMC/06/2024) | 10,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (LPG System) | (CLT/AMC/30/2024) | 10,000.00 |
| **மின் அமைப்புகளின் பராமரிப்பு** | | |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Lifts and Escalators) | (CLT/AMC/07/2024) | 120,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Medium Voltage System and Low Voltage System) | (CLT/AMC/08/2024) | 30,000.00 |
| **மேலதிக தாழ் மின்னழுத்த பராமரிப்பு** | | |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Access Control System) | (CLT/AMC/09/2024) | 20,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Smart Control System of Guest Rooms) | (CLT/AMC/10/2024) | 10,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Building Management Systems) | (CLT/AMC/11/2024) | 25,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Cable Tray System) | (CLT/AMC/12/2024) | 10,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Digital Clock System) | (CLT/AMC/13/2024) | 20,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Emergency Lighting System) | (CLT/AMC/14/2024) | 20,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Energy Management System) | (CLT/AMC/15/2024) | 25,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Fire Detection and Alarm System) | (CLT/AMC/16/2024) | 25,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Indoor Array Sound System) | (CLT/AMC/17/2024) | 10,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Information Publishing System) | (CLT/AMC/18/2024) | 10,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Public Address System) | (CLT/AMC/19/2024) | 10,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Smoke Exhaust Window System) | (CLT/AMC/20/2024) | 30,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Tower House Illumination System) | (CLT/AMC/21/2024) | 150,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Video Surveillance System) | (CLT/AMC/22/2024) | 20,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Wireless Intercom System) | (CLT/AMC/23/2024) | 20,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Wireless Patrol Point System) | (CLT/AMC/24/2024) | 20,000.00 |
| **தகவல் தொழில்நுட்ப அமைப்புகளின் பராமரிப்பு** | | |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Computer Equipment) | (CLT/AMC/25/2024) | 50,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Generic Cabling, Network and TV Distribution System) | (CLT/AMC/26/2024) | 70,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (PABX System) | (CLT/AMC/27/2024) | 15,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Printers) | (CLT/AMC/28/2024) | 15,000.00 |
| வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Utility Power Supply System) | (CLT/AMC/29/2024) | 40,000.00 |

2. கேள்விகோரல் **தேசிய போட்டி ஏல நடைமுறை மூலம்** நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தினை பெறுவதற்கான தகுதியுடைய வெற்றிகரமான மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் சேர்க்கப்படாதிருத்தல் வேண்டும். மற்றும் மனு ஆவணத்தில் பட்டியலிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக விபரங்களை **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளரிடம் (கொள்முதல்)** பெற்றுக்கொள்ளலாம்.

   **(தொ.பே : 074 201 2366 / 077 133 7635,** மின்னஞ்சல் – **tender@colombolotustower.lk)** மேலும் மனு ஆவணங்களை அலுவலக வேலை நாட்களில் **காலை 9.00 மணி முதல் மாலை 15.00** மணி வரை பரிசீலனை செய்யலாம்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் நிதிப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,000/-** கட்டணத்தை செலுத்தி **2023.12.18** ஆம் திகதி முதல் **2024.01.02** ஆம் திகதி **காலை 0900 மணி முதல் மாலை 1500** மணி வரை கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் முகாமையாளர் (கொள்முதல்) அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல்** அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (கொள்முதல்) அலுவலகத்திற்கு அல்லது 2024.01.03 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் அச்சந்தர்ப்பத்தில் வருகைதந்துள்ள மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னனிலையில் உடனடியாக திறக்கப்படும்.
7. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **2024.03.02**
8. அனைத்து மனுக்களும் கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுப் பாதுகாப்பு **2024.04.02** வரை செல்லுபடியாகும்.
9. மனுத் தொடர்பான முன்மனுக்கூட்டம் **2023.12.27 ஆம் திகதி 1000 மணிக்கு இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல்** அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (கொள்முதல்) அலுவலகத்தில் இடம்பெறும்.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,**
**கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்.**

SELACINE

## முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)

ஊவா மாகாணத்தில் பிளாஸ்டிக் மீள்சுழற்சி வசதி ஒன்றை அமைத்தல் மற்றும் செயற்படுத்தலுக்காக புகழ்பெற்ற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடம் இருந்து 2024 ஜனவரி 10 ஆம் திகதி வரை முன்மொழிவுக்கான கோரிக்கைக்கு (RFP) அழைப்பு விடுக்கப்படுகிறது.

மேலுள்ள துறையில் நிரூபிக்கப்பட்ட அனுபவத்துடன் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தமது முன்மொழிவுகளை சமர்ப்பிக்க கோரப்படுகின்றனர். 2023 டிசம்பர் 18 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜனவரி 09 ஆம் திகதி 15.00 மணி வரை https://mail.lgd.up.gov.lk/mis/web/newsevets.php என்ற முகவரியில் இருந்து ஆவணங்களை தரவிறக்கம் செய்ய முடியும்.

எதிர்பார்ப்புடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஊவா, உள்ளூராட்சித் திணைக்களம், பெறுகைக் குழு தலைவருக்கு 2024 ஜனவரி 10 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தமது முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம். முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் நேரம் முடிந்த பின் அந்த முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும். முன்மொழிவுகளை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு முன்மொழிவாளர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஊவா, உள்ளூராட்சித் திணைக்களத்தில் 2023.12.28 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இடம்பெறும். இங்கு இந்தத் திட்டங்கள் தொடர்பில் விரிவான தெளிவைப்பெற முடியும்.

முன்மொழிவுகளை தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தலுடன் தொடர்புபட்ட முன்மொழிவாளரினால் ஏற்படும் எந்த ஒரு செலவு மற்றும் இழப்புகளுக்கு ஊவா – உள்ளூராட்சித் திணைக்களம் பொறுப்பாகாது.

ஊவா உள்ளூராட்சித் திணைக்கள அலுவலகத்தில் முன்மொழிவு ஆவணத்தை பெற முடியும் என்பதோடு அதனை பரீட்சிக்கவும் மேலதிக விபரங்களை பெறவும் முடியும்.
தொலைபேசி – 055 2222363

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா**

## பெறுகை அறிவித்தல்

**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் - தென் மாகாண சபை**
**வாடகை அடிப்படையில் டபிள் கெப் வாகனத்தை வழங்கல்**

தென் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் கோரப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்காக தென் மாகாண கடற்றொழில், விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பெறுகைக் குழு தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வாகன ரகம் மற்றும் விபரம் | கால்நடை மருத்துவ அலுவலகம் | வாகனம் இடம்மாறும் அலுவலகங்கள் |
|---|---|---|
| டபிள் கெப் வண்டிகள் - 07<br>டொயோட்டா/ நிசான்/ மிட்சுபிஷி ரகத்தைச் சேர்ந்த 2013 க்கு பின்னரான வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வண்டியாக இருத்தல் வேண்டும்.<br>வாகனத்தின் அனைத்து பராமரிப்பு செலவுகள், எரிபொருள் செலவுகளை வாகன உரிமையாளர்கள் ஏற்க வேண்டும் என்பதோடு வாகன உரிமையாளரினால் ஓட்டுந்நரை வழங்குதல் வேண்டும். செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தூர அளவு 1500 கி.மீ. ஆகும்.<br>விலைமனு படிவத்தை மீளளிக்கப்படாத ரூபா 3500 விலைமனு பிணைத் தொகை ஒன்றை செலுத்தி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.<br>விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது ஒரு கெப் வண்டிக்கு பணமாக ரூபா 20,000.00 வீதம் அல்லது இலங்கை மத்திய வங்கி மூலம் ஒழுங்குபடுத்தப்படும் வர்த்தக வங்கி ஒன்றினால் பெற்றுக்கொண்ட ரூபா 40,000.00 ஆகிய 2024.02.29 ஆம் திகதி வரை செல்லுபடியான உறுதி ஒன்றின் மூலம் விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். | காலி மாவட்டம் | |
| | கோனபீனுவல | கரன்தெனிய/ பெத்தர |
| | நாகொட | யக்கலமுல்ல |
| | பத்தேகம | பென்தொட்ட |
| | மாத்தறை மாவட்டம் | |
| | கம்புருபிட்டிய | |
| | முலட்டியன | பஸ்கொட |
| | ஹக்மன | திக்வெல்லை |
| | ஹம்பாந்தோட்டை மாவட்டம் | |
| | மீகஸ்ஆர | வலஸ்முல்ல |

மேல் குறிப்பிடப்பட்ட வழங்கல்களுக்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் அதற்காக குறித்த விலைமனு படிவத்தை கீழுள்ள முகவரியில் இருக்கும் அமைச்சு மூலம் 2023 டிசம்பர் மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 2024 ஜனவரி 01 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ள முடியும்.
நிர்ணயிக்கப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி பி.ப. 4.30 க்கு முன்னர் தலைவர், பெறுகைக் குழு, வடமாகாண கடற்றொழில், விலங்கு உற்பத்தி.... அமைச்சு, 2ஆவது மாடி, “தக்ஷினபாய” லபுதுவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து ஒப்படைக்க முடியும் என்பதோடு அன்றைய தினம் அந்த நேரத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும்.
சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை தென் மாகாண கடற்றொழில், விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி.... அமைச்சின் பெறுகைக் குழு வசமானதாகும். இந்த பெறுகை தொடர்பில் எதிர்வரும் அனைத்து முக்கிய அறிவித்தல்களும் www.fishmin.sp.gov.lk என்ற அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்படும் என்பதோடு, அந்த அனைத்து அறிவித்தல்களும் வழங்குநர்களுக்கு சட்டரீதியாக மேற்கொள்ளப்படும் அறிவித்தலாக கருதப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண கடற்றொழில், விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி.... அமைச்சு,**
**2ஆவது மாடி,**
**“தக்ஷினபாய”**
**லபுதுவ,**
**காலி.**
**தொ.பே. 091 4946409/ 091 2246621**

# புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்

## சுற்றாடல் அமைச்சு

# வாகன திருத்தவேலைகள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024

2024ஆம் வருடத்தில் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்திற்கு பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக கொழும்பு, தெஹிவளை, கல்கிசை மாநகர சபை மற்றும் கோட்டை நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ளவர்களை வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | சேவைகள் |
|---|---|
| 1. | வாகன திருத்தவேலைகள் (விபத்துக்குள்ளான வாகனம் மற்றும் இயந்திரக் கோளாறுகளுக்கு உட்பட்ட வாகனங்கள்) |
| 2. | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| 3. | வாகனங்களுக்கு குஷன் இடல், காபட் இடுதல், மேற்கவிகை மறைப்புகளைத் தயாரித்தல். |
| 4. | வாகன சக்கர சீரமைப்பு சோதனை, சக்கர சமநிலை மற்றும் டயர் சேர்விஸ் வேலைகள். |
| 5. | வாகனங்களுக்கான தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள் |
| 6. | வாகன வளிச்சீராக்கம் மற்றும் திருத்தவேலைகள் |
| 7. | வாகன மின்னியல் திருத்தவேலைகள் |

**நிபந்தனைகள்**

1. டீசல்/ பெட்ரோல் ஆகிய இரு வகையான வாகன திருத்தவேலைகளைச் செய்ய முடியுமான நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
2. பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக ஏனைய வழிகளில் விலைகளைக் கோரி கொள்வனவு செய்தல் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை பணியகம் தன்னகத்தே கொண்டுள்ளது.
3. குறித்த நேரத்தில் விலைகளை முன்வைக்காத அல்லது குறித்த நேரத்திற்கு சேவைகளை வழங்காத அல்லது விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும்போது நிபந்தனைகளைக் கடைப்பிடிக்காத அல்லது சேவை வழங்குநர்களின் பதிவு முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
4. பதிவுக் கட்டணத்தைச் செலுத்திய பின் பணியகத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்.
5. மேற்படி சேவைகளை வழங்குவதற்குப் பதிவு செய்ய ஒரு விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பித்தால் மட்டும் போதுமானதாகும்.
   (அந்த விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தாம் வழங்கும் சேவைக்கு முன்னால் (✓) அடையாளத்தை இடுங்கள்)
6. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக முற்பணம் வழங்கப்பட மாட்டாது.
7. சேவைகள் வழங்கப்பட்ட பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இதற்காக 60 நாள் காலம் வழங்கப்படுதல் வேண்டும்.
8. தொலைபேசி அல்லது தொலைநகல் வசதி இருத்தல் வேண்டும்.
9. திருத்தகத்தினுள் ஏற்படும் விபத்துகளுக்கு காப்புறுதி இருத்தல்.
10. வியாபார பதிவு செய்தல் சான்றிதழின் பிரதியொன்றை பதிவு செய்யும் விண்ணபத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
11. சேவைகளை செயல்திறனுடன் வழங்குவதற்குத் தேவையான மனித மற்றும் பௌதிக வளங்கள் இருப்பதற்கான அத்தாட்சி முன்வைக்கப்படல் வேண்டும்.
12. மேல் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்காக பதிவு செய்து கொள்வதற்கு அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை 2024-01-05ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப்பத்திரங்களை 1000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் அலுவலகத்தின் பெறுகை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
13. அனைத்து விண்ணப்பப்பத்திரங்களிலும் "2024ஆம் வருடத்திற்கான வாகன திருத்தவேலைகள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம், இலக்கம் 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே என்ற முகவரிக்கு 2024-01-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்,**
**இலக்கம் 569,**
**எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

**வாகன திருத்தவேலைகள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024**

**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்**

**(மாதிரிப் விண்ணப்பப் படிவம் மட்டுமே)**

(01) பதிவு செய்ய உத்தேசிக்கும் சேவை உருப்படியின் இலக்கம் மற்றும் அதற்கு இயைபான உருப்படி விபரங்களின் எதிரில் (✓) அடையாளமிடவும்.

| தொ. இல. | உருப்படிகளின் விபரம் | வழங்கும் சேவையின் விபரம் (✓) |
|---|---|---|
| 01 | வாகன திருத்தவேலைகள் (விபத்துக்குள்ளான வாகனம் மற்றும் இயந்திரக் கோளாறுகளுக்கு உட்பட்ட வாகனங்கள்) | |
| 02 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | |
| 03 | வாகனங்களுக்கு குஷன் இடல், காபட் இடுதல், மேற்கவிகை மறைப்புகளைத் தயாரித்தல். | |
| 04 | வாகன சக்கர சீரமைப்பு சோதனை, சக்கர சமநிலை மற்றும் டயர் சேர்விஸ் வேலைகள். | |
| 05 | வாகனங்களுக்கான தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள் | |
| 06 | வாகன வளிச்சீராக்கம் மற்றும் திருத்தவேலைகள் | |
| 07 | வாகன மின்னியல் திருத்தவேலைகள் | |

(02) நிறுவனத்தின் பெயர் / வழங்குநரின் பெயர்:
(03) நிறுவனத்தின் பதிவிலக்கம் / தே.அ.அ. இல:
(04) முகவரி:
(05) தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம்:
(06) தொடர்பு கொள்ளக்கூடியவரின் பெயர்:
(07) கடன் வசதிகள் வழங்கக்கூடிய காலம் மற்றும் அளவு:
(08) வெட் பதிவிலக்கம் மற்றும் சான்றிதழின் பிரதி (இருந்தால்):
(09) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம்:
(10) தலைமை அலுவலகத்திலிருந்து திருத்தகத்திற்கு (கராஜ்) உள்ள தூரம்:
(11) திருத்தகத்திற்கு உரித்தான இடப்பரப்பின் அளவு:
(12) திருத்தகம் வசமுள்ள உதிரிப்பாகங்களை களஞ்சியப்படுத்தும் வசதிகள் (உண்டு/இல்லை):
(13) ஊழியர்கள் (அனுபவம் மற்றும் திறமையுள்ள) (உண்டு/ இல்லை)
(14) திருத்தவேலைகளுக்காக அனுப்பப்படும் வாகனங்களுக்கான பாதுகாப்பு (வழங்க முடியும் / முடியாது)
(15) கடந்த காலப்பகுதிக்கான அறிக்கைகள்:
(தயவு செய்து 15ஆம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ள விடயத்திற்கு தேவையானால் மேலதிக ஆவணங்களைப் பயன்படுத்தவும்)

**திகதி:..........................................** **கையொப்பம்:.........................................................**

For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

# கல்வி அமைச்சு

**திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு**

**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்**

## வெற்றிடங்கள்

கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவுக்கு இணைக்கப்பட்ட CGTTI ஆனமடுவ பிராந்திய நிலையம் மற்றும் CGTTI பொரளை பிராந்திய நிலைய, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் நிரந்தர அடிப்படையில் பின்வரும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. உதவி முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் (MM 1-1)

**தகைமைகள் -**

**வெளிவாரி :**

(A) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவம், பொது நிர்வாகம், வர்த்தக நிர்வாகம் அல்லது தொழில்துறை முகாமைத்துவத்தில் பட்டம்

அல்லது

(B) மனித வள முகாமைத்துவ துறையில் தொழில்முறை தகைமைகளை பெற்றிருத்தல் மற்றும் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக :**

(A) வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்

அல்லது

(B) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ (JM) பிரிவு பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் பிரகாரம்
MM 1-1-ரூபா 53,175 - 1375x10-1910x15 – 95,575/-
(மேலதிகமாக, அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

**ஆட்சேர்ப்பு முறை -** எழுத்து போட்டிப் பரீட்சை ஒன்று மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் முடிவுகள் மூலம் தேர்வு இடம்பெறும்.

**வயதெல்லை -**
விண்ணப்பங்களின் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 02. வழங்கல்கள் அதிகாரி - (JM 1-1)

**தகைமைகள் -**

**வெளிவாரி :**

(A) அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம், முகாமைத்துவம் அல்லது பொருளாதார துறையில் பட்டம் ஒன்று

**உள்ளக :**

(A) வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்

அல்லது

(B) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் முகாமைத்துவ உதவி தொழில்நுட்பம் அல்லாத (MA 1-2) தரம் II இன் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் பிரகாரம்
JM 1-1 - ரூபா 42,600 - 755x10-1135x18 – 70,580/-
(மேலதிகமாக, அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

**ஆட்சேர்ப்பு முறை -** எழுத்து போட்டிப் பரீட்சை ஒன்று மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் முடிவுகள் மூலம் தேர்வு இடம்பெறும்.

**வயதெல்லை -**
விண்ணப்பங்களின் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 03. பராமரிப்பு உதவியாளர் - சிவில் - (JM 1-1)

**தகைமைகள் -**

**வெளிவாரி :**

(A) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 7 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

அல்லது

(B) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 6 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறை ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்

அல்லது

(C) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறை ஒன்றில் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்

**உள்ளக :**

(A) வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்

அல்லது

(B) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப (MA 2-2) தரம் II இன் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
சம்பள அளவு – 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் பிரகாரம்
JM 1-1 - ரூபா 42,600 - 755x10-1135x18 – 70,580/-
(மேலதிகமாக, அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

**ஆட்சேர்ப்பு முறை -** எழுத்து போட்டிப் பரீட்சை ஒன்று மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் முடிவுகள் மூலம் தேர்வு இடம்பெறும்.

**வயதெல்லை -**
விண்ணப்பங்களின் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 04. பயிற்றுநர் - (MA 2-2)

**CGTTI**
(Automobile, Refrigeration and Air Conditioning, Power Electrical, Millwright, Tool Machinery, Mechanical Drawing and Body Repair and Tinker Painting துறைகளில்)
**CGTTI ஆனமடுவ பிராந்திய நிலையம்**
(Automobile, Millwright, Auto Electrical, Diesel Pump and Welding துறைகளில்)
**CGTTI பொரளை பிராந்திய நிலையம்**
(Automobile துறையில்)

**வாழ்க்கைத் தொழில் -**
வகுப்பு சித்தி (I அல்லது II ஆம் வகுப்பு) ஒன்றுடன் CGTTI முழு நேர சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பபயிற்சி நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்ட CGTTI இற்கு தொடர்புடைய Automobile/ Mechatronic / Millwright/ Power Electrical/ Air Conditioning and Refrigeration/ Tool Machinery/ Auto Electrical/ Diesel Pump/ Welding/Motor Vehicle Body Repair & Painting அல்லது வேறு துறைகளில் தேசிய தொழில் தகைமை (N.V.Q.) தரம் 5 இற்கு குறையாத டிப்ளோமா கற்கை ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

Automobile/Mechatronic/Millwright/Power Electrical/Air Conditioning and Refrigeration/Tool Machinery/ Auto Electrical/ Diesel Pump/ Welding/Motor Vehicle Body Repair & Painting துறைகளில் இறுதிப் பரீட்சையில் வகுப்பு சித்தி (I அல்லது II ஆம் வகுப்பு) ஒன்றுடன் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் 04/ 3 ½/ 03 ஆண்டு முழு நேர சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் குறைந்தது மூன்று (03) ஆண்டு காலத்திற்காக தொடர்புடைய பாடங்களின் தொழில்துறை அல்லது கற்பித்தலில் அனுபவம்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் பிரகாரம்
JM 2-2 - ரூபா 30,310 - 300x10-350x07-600x04-710x20 – 52,360/-
(மேலதிகமாக, அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

**ஆட்சேர்ப்பு முறை -** எழுத்து போட்டிப் பரீட்சை ஒன்று மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் முடிவுகள் மூலம் தேர்வு இடம்பெறும்.

**வயதெல்லை -**
விண்ணப்பங்களின் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**அனைத்து பதவிகளின் பொதுவான நிபந்தனைகள்**

- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உள தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
- மேலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். அவர் அந்தக் காலப்பகுதியின் நிறைவில் காண்பிக்கின்ற திருப்திகரமான செயல்திறன் மற்றும் நடத்தைக்கு அமைய பதவியில் நிரந்தரமாக்கப்படும். தற்போது பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்கள் 01 ஆண்டு கண்காணிப்புக் காலத்திற்கு உட்பட்டிருக்கும்.
- மேலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு குறித்த பதவியின் ஆரம்ப சம்பளப் படிக்கு அமைவானதாகும்.
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு சம்பளத்தில் 08% அறவிடப்படுவதோடு அதற்கு நிறுவனத்தின் பங்களிப்பு 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக 3% ஆகும்.

விண்ணப்பதாரர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நிழல் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
(a) பிறப்புச் சான்றிதழ்
(b) கல்வி மற்றும் தொழில் தகைமையை உறுதி செய்யும் சான்றிதழ்கள்
(c) ஊழியர் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்
(d) தேசிய அடையாள அட்டை

தற்போது அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை மற்றும் திணைக்களங்களில் பணியாற்றும் நபர்கள் தமது நிறுவன தலைவர் மூலம் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் என்பதோடு விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்படுவதாயின் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவர் உறுதி செய்தல் வேண்டும். உறவினர் அல்லாத உங்களைப் பற்றி வினவ முடியுமான இருவரை உள்ளடக்கிய முழு விபரங்கள் கொண்ட விண்ணப்பம் ஒன்றை தம்மால் உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2024.01.02ஆம் திகதிக்கு முன்னர் முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் மனித வளம், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், இலக்கம் 585, காலி வீதி, கல்கிசை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் நிறுவனம்/ நிலையத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு குறுகிய பட்டியலிடப்படும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பவர். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் கருத்தில்கொள்ளப்படமாட்டாது.
ஆட்சேர்ப்புக்கு எந்த ஒரு வகையிலும் ஆதரவு திரட்டல் தகுதி இழப்பாக அமையும்.

**பணிப்பாளர் - அதிபர்**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்**
**இலக்கம் 585, காலி வீதி,**
**கல்கிசை.**

டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட்:

# இலங்கைக்கு மூன்று வெவ்வேறு அணித் தலைவர்களுக்கு வாய்ப்பு

இலங்கை கிரிக்கெட் புதிய தேர்வுக் குழு டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 ஆகிய மூன்று வகை கிரிக்கெட்டுக்கும் மூன்று அணித் தலைவர்களை நியமிக்க திட்டமிடுவதாக தெரியவருகிறது.

உபுல் தரங்க தலைமையிலான புதிய தேர்வுக் குழு அண்மையில் சந்தித்து மூன்று வகை கிரிக்கெட்டுக்கு மூன்று தலைவர்களை நியமிக்கும் சாத்தியம் பற்றி பேசி இருப்பதாக இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி திமுத் கருணாரத்னவுக்கு பதில் தனஞ்சய டி சில்வாவை டெஸ்ட் அணித் தலைவராகவும், குசல் மெண்டிஸ் மற்றும் வனிந்து ஹசரங்கவை முறையே ஒருநாள் மற்றும் டி20 அணித் தலைவராகவும் நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. டெஸ்ட் அணியின் உப தலைவராக குசல் மெண்டிஸை நியமிப்பதற்கும் ஒருநாள் மற்றும் டி20 அணிகளுக்கு உப தலைவராக சரித் அசலங்கவை நியமிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள சிம்பாப்வேவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளுக்கான இலங்கை அணியை தேர்வு செய்வதற்கு தேர்வுக் குழுவினர் கூடும்போது இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. இந்தத் தேர்வுக் குழு கூட்டம் இன்று (18) நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



எதிர்வரும் மூன்றாம் திகதி இலங்கை வரும் சிம்பாப்வே அணி இலங்கைக்கு எதிராக மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 சர்வதேச போட்டிகளில் ஆடவுள்ளது. இந்தியாவில் அண்மையில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ண போட்டியில் இலங்கை அணி மோசமான தோல்விகளை சந்தித்த பின்னர் நடைபெறும் தொடர் என்பதால் அணியில் முக்கிய மாற்றங்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இளையோர் ஆசிய கிண்ணம் பங்களாதேஷ் அணி வசமானது

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் ஐக்கிய அரபு இராச்சியத்தை 195 ஓட்டங்களால் இலகுவாக வீழ்த்தி பங்களாதேஷ் இளையோர் அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

டுபாயில் நேற்று (17) நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணி சார்பில் ஆரம்ப வீரர் அஷிகுர் ரஹ்மான் ஷிப்லி அபாரமாக துடுப்பெடுத்தாடி 129 ஓட்டங்களை பெற்றார். இதன் மூலம் பங்களாதேஷ் அணி 50 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 282 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த ஐக்கிய அரபு இராச்சிய இளையோர் அணி மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுக்க 24.5 ஓவர்களில் 87 ஓட்டங்களுக்கே சுருண்டது. த்ருவ் பிரஷார் ஆட்டமிழக்காது பெற்ற 25 ஓட்டங்களுடன் இரு வீரர்கள் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களை பெற்றனர்.

பங்களாதேஷ் அணி சார்பில் பந்துவீச்சில் மரூப் மிரிதா மற்றும் ரொஹானதுல்லா பர்சொன் இருவரும் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இளையோர் ஆசிய கிண்ணத் தொடரில் இந்த இரு அணிகளும் அரையிறுதியில் நடப்புச் சம்பியன் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தே இறுதிப் போட்டிக்கு முன்னேறின.



1989 தொடக்கம் 10ஆவது முறையாக நடைபெற்ற ஆசிய கிண்ணத் தொடரில் இந்தியா தவிர்த்து சம்பியன் கிண்ணம் வென்ற இரண்டாவது அணியாகவே பங்களாதேஷ் அணி பதிவாகியுள்ளது. 2017 ஆம் ஆண்டு ஆப்கான் அணி கிண்ணத்தை வென்றது தவிர்த்து ஏழு முறை இந்தியாவே சம்பியனாகியுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு மத்தியிலும் காசாவில் மற்றொரு போர் நிறுத்தத்திற்கு பேச்சு

## மொசாட் தலைவர் – கட்டார் பிரதமர் சந்திப்பு



காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில், ஹமாஸ் பிடியில் உள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான புதிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலிய உளவுப் பிரிவுத் தலைவர் போர் நிறுத்தம் ஒன்றுக்கான மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டு வரும் கட்டார் பிரதமரை சந்தித்து பேசிய நிலையிலேயே புதிய பேச்சுவார்த்தை பற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை (16) செய்தியாளர் சந்திப்பில் பேசிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, காசா போர் விரிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் வெற்றி வரை போராடுவோம் என்றும் தெரிவித்தார். இஸ்ரேலிய கட்டுப்பாட்டின் கீழ் காசா இராணுவமற்ற பகுதியாக மாற்றப்படும் என்றும் கூறினார்.

எனினும் காசாவில் வெள்ளை ஆடையுடன் வந்த மூன்று பணயக்கைதிகளை இஸ்ரேலிய இராணுவம் தவறுதலாக கொன்ற சம்பவத்தை அடுத்து நெதன்யாகுவுக்கு எதிர்ப்புகள் வலுத்துள்ளன. இந்நிலையில் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான புதிய பேச்சுவார்த்தைக்கு அறிவுறுத்தியதாக நெதன்யாகும் தெரிவித்துள்ளார்.

வெள்ளைத்துணி ஏந்தி வந்தவர்களை ராணுவம் ஏன் சுட்டது என்பது தெரியவில்லை. ஆரம்பத் தகவல்படி இஸ்ரேலிய இராணுவம் வழக்கமான விதிமுறைகளை மீறிப் பணயக்கைதிகளைச் சுட்டதாகக் கூறப்படுகிறது. அந்தப் படுகொலையைத் தொடர்ந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 100க்கும் அதிகமான பணயக்கைதிகள் இன்னமும் காசாவில் ஹமாஸ் வசம் உள்ளனர்.

அவர்களை மீட்டுக்கொண்டுவர இஸ்ரேலிய அரசாங்கம் இன்னும் அதிகம் செய்ய வேண்டும் என்று டெல் அவிவில் திரண்ட மக்கள் குரல்கொடுத்தனர்.

பணயக்கைதிகள் மிரட்டல் என்று நினைத்துச் சுட்டுக்கொன்றதாக இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது.

இஸ்ரேலிய மொசாட் உளவுப் பிரிவு தலைவர் டேவிட் பெர்னீ, கட்டார் பிரதமர் முஹமது பின் அப்துல்ரஹ்மான் அல்தானியை கடந்த வெள்ளிக்கிழமை மாலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். காசாவில் மற்றொரு போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது மற்றும் பணயக்கைதிகள் மற்றும் பலஸ்தீன கைதிகள் பரிமாற்றம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதாக நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

ஐரோப்பாவில் இடம்பெற்றிருக்கும் இந்த சந்திப்பானது இஸ்ரேல் மற்றும் கட்டார் மூத்த அதிகாரிகளிடையிலான முதல் சந்திப்பாக அமைந்துள்ளது. கட்டாரின் மத்தியஸ்தத்துடன் ஏற்கனவே ஏழு நாள் போர் நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்ட நிலையில் நவம்பர் பிற்பகுதியில் அந்தப் போர் நிறுத்தம் முறிந்தது.

ஹமாஸ் அமைப்பு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், 'எமது மக்கள் மீதான ஆக்கிரமிப்பை முழுமையாக நிறுத்தும் வரை எந்த ஒரு கைதிகள் பரிமாற்ற பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்படமாட்டாது என்று உறுதி அளிக்கிறேன். அனைத்து மத்தியஸ்தர்களுக்கும் எமது அமைப்பு இது பற்றி கூறியுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



எனினும் இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் போர் விமானங்கள் நேற்றும் (17) காசாவில் சரமாரி தாக்குதல்களை நடத்தியது. தெற்கு காசாவில் கான் யூனிஸ் நகரின் மையப்பகுதியில் சனிக்கிழமை இரவு இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருந்த அதேநேரம் ஹமாஸ் போராளிகள் ரொக்கெட் குண்டுகள் மற்றும் கையெறி குண்டுகளை பயன்படுத்தி பதில் தாக்குதல்களை நடத்தி வந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

'ஒவ்வொரு நாளும் நிலைமை மோசமடைந்து வருகிறது. உணவுகள் குறைந்து, நீர் மோசமடைந்து வருகிறது. மரணம், அச்சம் மற்றும் அழிவுகளே அதிகரித்து வருகின்றன' என்று எகிப்து எல்லைக்கு அருகில் உள்ள ரபா பகுக்கு இடம்பெயர்ந்திருக்கும் 40 வயதான நான்கு குழந்தைகளின் தாய் சமிரா தெரிவித்தார்.

மத்திய நகரான டெயிர் அல் பலாஹ் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல் ஒன்றில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்தது. காசா பகுதியில் இரண்டாவது மிகப் பெரிய நகரான கான் யூனிஸின் கிழக்கு பக்கமாக இருக்கும் பானி சுஹைலா தெற்கு மாநகரப் பகுதியிலும் இஸ்ரேல் வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களை நடத்தியதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு காசாவில் உள்ள இரு பாடசாலைகளில் சுற்றிவளைத்து சோதனை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் கூறியது. பலஸ்தீன போராளிகளுடன் தொடர்ந்து கடும் மோதல் நீடித்து வரும் நிலையில் மேலும் இரு படையினர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று உறுதி செய்தது. இதன்படி கடந்த ஒக்டோபர் பிற்பகுதியில் காசாவில் தரைவழி தாக்குதல்களை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 121 ஆக உயர்ந்துள்ளது. இதே நேரம் காசா பகுதியில் இருக்கும் ஒரே கிறிஸ்தவ தேவாலயத்தில் இஸ்ரேலிய படையினரால் ஒரு கிறிஸ்தவத் தாய் மற்றும் மகள் கொல்லப்பட்டதாக ஜெரூசலத்தின் கிறிஸ்தவ அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்ட அல் ஜசீரா படப்பிப்பாளர் சமர் அபூ தக்காவின் இறுதிக் கிரியை கான் யூனிஸில் இடம்பெற்றதோடு அதில் பல ஊடகவியலாளர்களும் பங்கேற்றிருந்தனர். இந்தப் போர் ஆரம்பித்தது தொடக்கம் 60க்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து ஆரம்பித்த இந்தப் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 19,000 ஐ நெருங்கியுள்ளது. மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

காசா மீது இரண்டு மாதங்களைத் தாண்டி இஸ்ரேல் நடத்தும் இடைவிடாத தாக்குதல்களால் அந்த குறுகிய நிலத்தின் பெரும் பகுதி அழிவுக்கு உள்ளாகி இருப்பதோடு காசாவில் 1.9 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாக ஐ.நா கூறியுள்ளது. இது அந்தப் பகுதியின் மக்கள் தொகையில் 90 வீதத்தை நெருங்கும் எண்ணிக்கையாகும். பசி மற்றும் விரக்தியால் காசாவுக்கு வழங்கப்படும் மனிதாபிமான உதவிகளை மக்கள் அபகரிக்கத் தூண்டுவதாகவும், இது சமூக ஒழுங்கை சீர்குலைக்கும் என்றும் ஐ.நா எச்சரித்துள்ளது. பெரும் அவலத்தை சந்தித்துள்ள காசா மக்களுக்கு உதவி விநியோகங்களை கொண்டு செல்வதில் சர்வதேச உதவி அமைப்புகள் நெருக்கடியை சந்தித்து வருகின்றன.

'மக்கள் பட்டினியாலும், எதிர்ப்புச் சக்தி பலவீனப்பட்டு பட்டினி மற்றும் நோய்களால் உயிரிழக்க ஆரம்பித்தால் அது பற்றி நான் ஆச்சரியப்படப்போவதில்லை' என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி தெரிவித்துள்ளார்.

காசாவில் தொடர்பாடல்கள் கடந்த வியாழக்கிழமை துண்டிக்கப்பட்ட நிலையில் அது தொடர்ந்து நீடிப்பதாக அந்த ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு பல பில்லியன் டொலர் இராணுவ உதவிகளை வழங்கி வரும் அதன் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா காசாவில் பொதுக்களின் உயிரிழப்பு அதிகரித்து வருவது குறித்து கவலையை வெளியிட்டுள்ளது. பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரூன் மற்றும் ஜெர்மனி தலைவர் அன்னலேனா பீர்பொக் கூட்டாக வெளியிட்டிருக்கும் அறிவிப்பு ஒன்றில், 'காசாவில் நிலையான போர் நிறுத்தம் ஒன்று அவசரமாகத் தேவை' என்று வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில் இஸ்ரேல் தனது கெரம் ஷலொம் எல்லைக் கடவை ஊடாக நேரடியாக காசாவுக்கு உதவிகள் செல்ல அனுமதித்துள்ளது.

காசா போர் தொடர்ந்து நீடித்து வரும் சூழலில் மத்திய கிழக்கெங்கும் பதற்ற சூழல் நீடித்து வருகிறது. இஸ்ரேலிய இராணுவத்திற்கும் சிரியா மற்றும் லெபனானில் உள்ள போராளிகளுக்கும் இடையே அடிக்கடி மோதல் இடம்பெற்று வருகிறது. குறிப்பாக லெபனானின் ஈரான் ஆதாவு ஹிஸ்புல்லா போராளிகளுக்கு இடையே தொடர்ச்சியாக பரஸ்பரம் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

லெபனான் எல்லையில் உள்ள மர்கலியொத் பகுதியில் ஒரு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு மேலும் இருவர் காயமடைந்ததாக இஸ்ரேல் இராணுவம் சனிக்கிழமை தெரிவித்தது. வான் தாக்குதல் சம்பவம் ஒன்றிலேயே இது நிகழ்ந்திருப்பதாக இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் ஒருவர் உறுதி செய்ததாக ஏ.எப்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் போர் ஆசியா மற்றும் ஐரோப்பாவுக்கு இடையிலான செங்கடல் கப்பல் பாதைக்கு இடையூறை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் ஆதரவு யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் தொடர்ச்சியாக நடத்தும் தாக்குதல்கள் காரணமாக தமது கப்பல்களின் பயணப்பாதையை மாற்றிக் கொண்டதாக இரு பிரதான கப்பல் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மெர்ஸ்க் மற்றும் ஹபங் லொயிட் என்ற கப்பல் நிறுவனம் தனது பயணப் பாதையை மாற்றிய நிலையிலேயே மடிடேரியன் சிப் கம்பனி மற்றும் சீ.எம்.ஏ சி.ஜி.எம். என்ற கப்பல் நிறுவனங்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலை நோக்கிச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்துவதாக யெமன் கிளர்ச்சியாளர்கள் ஏற்கனவே எச்சரித்துள்ளனர்.

இந்த கிளர்ச்சியாளர்கள் கடந்த சனிக்கிழமை 14 ஒரு வழி செல்லும் ஆளில்லா விமானங்களை அனுப்பியது. எனினும் அவை அனைத்தும் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அந்தப் பகுதியில் உள்ள எந்த கப்பல்களுக்கும் சேதம் ஏற்படவில்லை என்றும் அமெரிக்க இராணுவத்தின் கட்டளை மையம் தெரிவித்துள்ளது.

# லிபியாவில் படகு மூழ்கி 60 பேர் பலி



லிபியாவில் ஏற்பட்ட கப்பல் விபத்தில் 60க்கும் மேற்பட்ட குடியேறிகள் மூழ்கி உயிரிழந்துள்ளனர். அந்தத் தகவலை குடியேறிகளுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பிள்ளைகளும் பெண்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் வெளியான அறிக்கையைப் பற்றி லிபியாவின் அரசாங்கம் கருத்துரைக்கவில்லை. ஸுவாரா நகரிலிருந்து புறப்பட்ட கப்பலில் 86 பேர் பயணம் செய்ததாக விபத்தில் பிழைத்தவர்கள் தெரிவித்தனர்.

மத்தியதரைக் கடலின் மையப் பகுதி, உலகத்திலேயே மிக ஆபத்தான கடல் பாதைகளில் ஒன்று எனக் குடியேறிகளுக்கான சர்வதேச அமைப்பு குறிப்பிட்டது.

ஆபிரிக்காவிலிருந்து பல தஞ்சக்கோரிக்கையாளர்கள் பஞ்சம், கலவரங்கள் போன்ற பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க அந்தப் பாதையைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாண்டின் ஆரம்பத்தில், லிபியா கரையோரத்தில் ஏற்பட்ட ஒரு கப்பல் விபத்தில் குறைந்தது 73 குடியேறிகள் பலியாயினர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.